R. [signature]

THAYAGAM

# தாயகம்

29 . 10 . 93

75¢

உண்மை:5
தேடல்:17

# கனடியத் தேர்தலில் லிபரல் கட்சி வெற்றி

## கிறெற்ஷியன் பிரதமரானார்

## யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற இன்னொரு தாக்குதல்? தயார் நிலையில் புலிகள்

புலிகளுக்கு ஆதரவளிக்க ஐரோப்பிய சமூகம் மறுப்பு

சுவிஸ் அகதிகளை திருப்பி அனுப்புகிறது

ஐ.தே.கட்சியில் அனுரா

காஷ்மீர் மசூதியை முற்றுகையிட்ட இந்திய இராணுவம்

# EVERGREEN

## IMPORT & DISTRIBUTORS

**(416) 964-8601**

**324-9345/ 968-9545**

இலங்கை,
இந்தியப்
பத்திரிகைகள்,
சஞ்சிகைகளை
உடனுக்குடன்
பெற்றுக் கொள்ளலாம்.
நேரடி வினியோகமும்
உண்டு.



**வர்த்தகர்களுக்கு விசேட கழிவுகள் உண்டு**

தலைநகை, தலைப்பாகை வாடகைக்கு கிடைக்கும்

**சிவசங்கரி, பாலகுமாரன், அனுராதா ரமணன், சுஜாதா, புஷ்பா தங்கத்துரை, லேனா தமிழ்வாணன், மு.கருணாநிதி, கண்ணதாசன், வைரமுத்து, மேத்தா உட்பட தமிழகத்தின் பிரபல எழுத்தாளர்களின் புத்தகங்கள் மலிவு விலையில் கிடைக்கும்.**

வவுனியா,
யாழ்ப்பாணம்,
கொழும்பு, இந்தியா,
சிங்கப்பூர் மற்றும்
ஐரோப்பிய நாடுகளுக்கும்
உடனுக்குடன்
பணம் அனுப்பி
வைக்கப்படும்

இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட

- ✪ மங்கையர் மனம் விரும்பும் நவநாகரீக ஆடைகள்
- ✪ ஆண்களுக்கான ஜீன்ஸ், ரீ சேட் வகைகள், சாரங்கள், பட்டு வேட்டி வகைகள்
- ✪ சாறி வகைகள்
- ✪ அலங்காரப் பொருட்கள், பரிசுப் பொருட்கள்
- ✪ மற்றும் எவர்சில்வர் பாத்திரங்கள்

***அனைத்தும் மலிவான விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்***

**566 A Parliament St (Parliament/Wellesley)**

Second class mail Registration No:8435

# தாயகம்

**'உண்மையைத் தேடி'**

# அடுத்த தாக்குதலுக்கு இராணுவம் முயற்சி!

## இயக்கத்தில் சேர புலிகள் அழைப்பு

கிளாலிப் பாதையில் மீண்டும் போக்குவரத்து ஆரம்பித்ததை அடுத்து இராணுவம் மீண்டும் ஒரு தாக்குதல் ஒன்றை நடத்தலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்தின தங்களது தாக்குதலின் நோக்கம் வெற்றி பெற்றிருக்கிறது என்று வலியுறுத்திக் கூறி வருகிறார். அத்துடன் கிளாலிப் பாதையில் போக்குவரத்து எதுவும் இல்லை என்றும் கூறியுள்ளார். ஆனால் வடபகுதியில் இருந்து பலர் வவுனியா வந்து சேர்ந்துள்ளனர்.

இதனால் மீண்டும் ஒரு தாக்குதல் ஒன்றை இராணுவம் ஆரம்பித்து இழந்த செல்வாக்கை மீளப் பெறலாம் என்று கூறப்படுகிறது. பத்திரிகையாளர் மாநாட்டில் இராணுவ அதிகாரிகள் மீண்டும் தாக்குதல் ஒன்று நடத்தப்படலாம் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

புலிகளும் இவ்வாறான ஒரு தாக்குதல் ஒன்று நடைபெறலாம் என்று அதற்கான முன்னெச்சரிக்கையான ஆயத்த வேலைகளில் ஈடுபட்டிருப்பதாக அங்கிருந்து வந்தவர்கள் கூறியுள்ளார்கள். நடைபெற்ற தாக்குதல் போன்ற ஒரு தாக்குதலை நடத்தி யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் நோக்கம் அரசுக்கு உண்டு என்றும் புத்தாண்டில் இத்தாக்குதல் ஆரம்பமாகலாம் என்றும் புலிகள் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்கள். இதனால் வயது வேறுபாடின்றி அனைவரும் இயக்கத்தில் சேர்ந்து கொள்ள வேண்டும் என்று புலிகள் தங்கள் வானொலி, பத்திரிகைகள் மூலமாக கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு கிடைக்கும் என்பதில் நம்பிக்கையில்லை என்று கூறியுள்ள புலிகள் யுத்தத்திற்கு வருமாறு கோரும் ஓவியங்களை காட்சிக்கு வைத்ததுடன் தாங்கள் தயாரித்த குறுந்திரைப்படங்களையும் காண்பித்து வருகின்றனர்.

# சுவிஸ் அகதிகளை திருப்பி அனுப்புகிறது

சுவிட்சலாந்து அங்கிருந்து ஐநூறு அகதிகளை திருப்பி அனுப்ப உள்ளது. 91க்கு பின்னர் சென்ற தமிழர்களில் ஐநூறு பேர் திருப்பி அனுப்பப்பட உள்ளனர். முதல் கட்டமாக நூறு பேரும் மீதிப் பேர் அடுத்த வருடத்திலும் அனுப்பப்படுவார்கள். முதலில் அனுப்பப்படுபவர்களின் பெயர் விபரங்கள் இலங்கை அரசுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களை கொழும்பில் அகதிமுகாம் ஒன்றை உருவாக்கி வைத்திருக்க அரசு முயலகிறது. அத்துடன் இது சம்பந்தமாக தொண்டர் நிறுவனங்களின் உதவியை அரசு நாடியபோதும் இதுவரை எந்த நிறுவனமும் இதற்கு முன் வரவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

# இலங்கையில் தற்கொலை வீதம் அதிகரிப்பு

உலகின் தற்கொலை வீதம் அதிகமான நாடுகளில் இரண்டாம் இடத்தை இலங்கை வகிக்கிறது. ஒவ்வொரு மணித்தியாலமும் ஒருவர் இலங்கையில் தற்கொலை செய்து கொள்கிறார். உலகின் அதிக தற்கொலைகள் கொண்ட நாடு ஹங்கேரியாகும்.

89ம் ஆண்டு சராசரி நாளொன்றுக்கு 21 பேர் தற்கொலை செய்து கொண்டனர். இவர்களில் 75 வீதமானோர் கிராமப்புறங்களைச் சேர்ந்தவர்கள். அவர்களில் அனேகர் 16 முதல் முப்பது வயதானவர்கள். இவர்களின் தற்கொலைக்காரணங்களில் முக்கியமானது காதல் தோல்வி. இவர்களில் அனேகர் ஆண்களே. 89 இல் இறந்த 1145 பேரில் 746 பேர் ஆண்கள் ஆவர். மீதி 399 பேர் பெண்கள்.

வறுமை இரண்டாம் இடத்தையும் மூளைக்கோளாறு மூன்றும் இடத்தையும் பெற்றோரின் கண்டனம் நான்காம் இடத்தையும் பெற்ற காரணங்களாக உள்ளன. இதில் நஞ்சு குடித்தல், தூக்குப் போடுதல், கிணற்றில் விழுதல், தீக்குளித்தல் என்பன காரணங்களாகின்றன.

# கோவில் எரிக்கப்பட்டது

சமீபத்திய யாழ் தேவித் தாக்குதலில் எழுதுமட்டுவாழ் பகுதியில் உள்ள வித்தகப் பிள்ளையார் கோவில் எரித்துச் சாம்பராக்கப் பட்டிருக்கிறது. அப்பகுதிகளில் உள்ள வீடுகள், கடைகள் போன்றனவும் எரிக்கப்பட்டிருக்கின்றன. அங்குள்ள கால்நடைகளும் கொல்லப்பட்டிருக்கின்றன. இராணுவத்தினர் கோழிகளை கூட்டுடன் கொண்டு சென்றதாகவும் செய்திகள் கூறுகின்றன.

மாபெரும் மலிவு விற்பனை

சிவாஸ் ரேடிங் கோ
3852 Finch Ave East (Kennedy/Finch)
321 2739

# புதிய விமானங்கள் வாங்க முயற்சி

சென்ற வருடம் வை 8 ரக விமானம் ஆனையிறவுப் பகுதியில் நொருங்கியிருந்ததை அடுத்து இராணுவம் பொருட்களைக் கொண்டு செல்வதில் சிக்கல்களை எதிர் நோக்கியிருந்தது. இதை ஈடு செய்ய விமானங்கள் குத்தகைக்கு எடுக்கப்பட்டிருந்தன. இவற்றுக்கான செலவுகள் பெருந்தொகையாக இருந்ததால் இராணுவம் விமானங்களை சொந்தமாக கொள்வனவு செய்ய முயன்று வருகிறது. இதற்காக ஐ.வி 17 ரக விமானங்களை கொள்வனவு செய்யுமாறு விமானப்படையினர் பரிந்துரைத்ததை அடுத்து தற்போது பாதுகாப்பு அமைச்சு இதற்கான கேள்விப்பத்திரங்களைக் கோரியுள்ளது. இவ்வாறான மூன்று விமானங்கள் கொள்வனவு செய்யப்படும். ரஷ்ய தயாரிப்பான இந்த விமானங்களில் 500 தொன் பொருட்களைக் கொண்டு செல்ல முடியும். இந்த விமானங்களை நேரடியாக ரஷ்ய நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யாமல் கேள்விபத்திரம் மூலம் வாங்க முயல்வது பற்றி கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. ஏற்கனவே எயர்பஸ் விமானங்களை வாங்குவதில் ஊழல் நடந்ததாக சந்தேகப்படும் நிலையில், இவ்வாறான செயற்பாட்டால் சில தரகர்கள் பெருந்தொகைப் பணத்தை சம்பாதிக்கலாம் என்று கூறப்படுகிறது.

ஆர்ஜென்டீனிய விமானங்களான புக்காரா விமானங்களும் தற்போது பலாலி விமான ஒடுபாதையில் இறங்கியதால் சக்கரங்கள் பழுதாகிய நிலையில் இரத்மலானையில் தரையிறக்கப் பட்டுள்ளன. இவற்றை திருத்துவ தற்காக ஆர்ஜென்டீனிய நிபுணர்கள் வரவுள்ளார்கள்.

# இராணுவத்தினரின் ஆயுத இழப்பு

யாழ்தேவி யுத்தத்தில் புலிகளிடமிருந்து நான்கு ஏ.கே 47 றைபிள்களையும் மூன்று ரி 81 ரக துப்பாக்கிகளையும் ரி 56 ரக துப்பாக்கிகள் ஏழையும் ரி 84 ரக துப்பாக் கிகள் இரண்டையும் துப்பாக்கிகள் இரண்டையும் கைப்பற்றியதாக இராணுவம் கூறியுள்ளது.

ஆனால் இராணுவத்தின் இழப்பு பாரியது. நான்கு டாங்கிகள் அழிக்கப்பட்டன. ரி 56 ரக றைபிள்கள் 68, ரி 81 ரக துப்பாக்கிகள் 15, 60 மிமீ மோட்டார்கள் மூன்ற, 40 மிமீ கிறனேட் வீசிகள் ஆறு, றெக்கட் வீசிகள் ஐந்து, ஜி.பி.எம்கள் இரண்டு மினிமி இயந்திர துப்பாக்கி ஒன்று, 100 மிமீ துப்பாக்கி ஒன்று, 12.7 மிமீ துப்பாக்கி ஒன்று, ஜாக்கட்டுக்கள் 83, ஆயுதப் பெட்டிகள் 15, வானொலிகள் 4, ஹெல்மட்டுக்கள் 116 என்பன புலிகளால் கைப்பற்றப்பட்டிருப்பதாக சண்டே ரைம்ஸ் பத்திரிகை தெரிவித்திருக்கிறது.

# செக்.டாங்கிகள் செயலிழந்தன

செக்கோஸ்லாவாகியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட டாங்கிகள் யுத்தத்திற்கு பொருத்தமானவை அல்ல என்று இராணுவம் உணர்ந்து கொண்டிருப்பதாக தெரிகிறது. ரஷ்ய உடைவின் பின்னர் வார்சோ ஒப்பந்த நாடுகள் தங்கள் தேவையற்ற ஆயுதங்களை மலிவான விலையில் விற்றுவிட முயன்ற போது இலங்கை அரசு அந்த ஆயுதங்களை வாங்கிக் கொண்டது. முப்பது ரி 55 ரக டாங்கிகள் இலங்கை அரசினால் 28 கோடி ருபாவிற்கு வாங்கப்பட்டன. ஒவ்வொன்றும் சுமார் ஒரு கோடி ருபா பெறுமதியான இந்த டாங்கிகள் கடந்த கிளாலி யுத்தத்தின் போது எதிர்பார்த்த அளவில் செயற்படவில்லை. இதில் நான்கு டாங்கிகள் புலிகளால் தகர்க்கப்பட்டிருந்தன.

இதனால் வேறு நவீன ரக டாங்கிகளை வாங்குவதற்கு இராணுவம் முயன்று வருகிறது.

# பயங்கரவாதத்தை ஒழிக்க ஐரோப்பிய சமூகம் உதவி

இலங்கையும் ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகளும் ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திட உள்ளன. பயங்கரவாதத்தை ஒழிக்க உதவ வேண்டும் என்ற இலங்கையின் கோரிக்கைக்கு ஐரோப்பிய சமூகத்தினர் ஒத்துழைப்பு வழங்க சம்மதித்துள்ளனர். இது குறித்து இரு தரப்பினரும் கூட்டாக பயங்கரவாதத்தை ஒழிக்க செயற்படுவதாகவும் ஐரோப்பிய அரசியல் ஒத்துழைப்பு அமைப்பின் ஆலோசனைகளுடன் செயற்படுவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. ஐரோப்பிய சமூக நாடுகள் பன்னிரண்டும் புலிகளை ஆதரிக்க கூடாது என்ற இலங்கையின் நிபந்தனையை இந்த நாடுகள் ஏற்றுக் கொண்டதன் பின்பே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட உள்ளது.

இந்த நாடுகளில் புலிகள் தங்கள் அலுவலகங்களை அமைத்து செயற்படுவது குறித்து இலங்கை ஆட்சேபம் தெரிவித்திருந்தது. 75 ம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் தற்போது புதிய விதிகளுடன் கைச்சாத்திடப்பட உள்ளது. இது போன்ற ஒப்பந்தம் ஒன்றை ஐரோப்பிய நாடுகள் இந்தியாவுடன் செய்து கொண்டன. கடந்த வியாழன் வெளிநாட்டமைச்சர் ஹமீதுவும் ஐரோப்பிய வர்த்தக ஆணையாளர் லியோன் பிரிட்டனும் சந்திப்பதாக இருந்த போதும் ஆணையாளர் சுகவீனமுற்றதால் சந்திப்பு ரத்துச் செய்யப்பட்டிருந்தது.

# கொழும்பில் தமிழர்கள் கடத்தல் பிரேமச்சந்திரன் புகார்

அடையாளம் இடப்படாத வாகனங்களில் வரும் நபர்களினால் தமிழ் இளைஞர்கள் கடத்தப்படுவதாக ஈ.பி.ஆர்.எல்.எஃப் பிரேமச்சந்திரன் தெரிவித்திருக்கிறார். வெள்ளவத்த பகுதியில் இந்த கடத்தல்கள் நடைபெறுவதாகவும் இதுகுறித்து தான் பாராளுமன்றத்தில் குரல் எழுப்பியுள்ளதாகவும் தங்களுக்கு இருக்கும் நம்பிக்கை ஜனாதிபதி தான் என்றும் அவர் இந்த விடயத்தில் தலையிட்டு தீர்த்து வைப்பார் என நம்புவதாகவும் அவர் மேலும் கூறினார்.

பொலிசார் தமிழ் வாலிபர்களை கைது செய்வது பற்றிக் கூறிய அவர் பொலிசார் தங்கள் கடமைகளை செய்வதை தான் எதிர்க்கவில்லை என்றும் ஆனால் மனிதாபிமான முறையில் அவர்கள் நடக்க வேண்டும் என்றும் கூறினார்.

வடக்கில் இருந்து தப்பி வருபவர்கள் கொழும்பில் வைத்து செய்யப்பட்டால எங்கே செல்ல முடியும் என்று கேள்வி எழுப்பிய அவர் ஒரே ஆள் பத்து தடவைகள் பத்து பொலிசாரால் கைது செய்யப்பட்டு பத்து நிலையங்களில் விசாரிக்கப்படுகிறார்கள் என்றும் குறைப்பட்டுக் கொண்டார்.

# தொண்டமானும் ஆட்சேபம்

கொழும்பில் தமிழர்கள் கைது செய்யப்படுவது பற்றி தொண்டமான் ஆட்சேபம் தெரிவித்திருக்கிறார். இது குறித்து ஜனாதிபதியுடன் சந்தித்துப் பேச சந்தர்ப்பம் தருமாறு தொண்டா ஜனாதிபதியைக் கேட்டிருக்கிறார். தான் மந்திரிசபைக் கூட்டத்தில் இது பற்றி பிரஸ்தாபித்ததாயும் புறக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் 30 அடி நீளமும் 15 அடி அகலமும் உள்ள அறைகளில் இருநூறு பேர் வரை அடைக்கப் பட்டிருப்பதாகவும் குற்றவாளியாகக் காணப்படும்வரை யாரும் குற்றவாளியாக கருதப்படக் கூடாது என்றும் தொண்டமான் தெரிவித்தி ருக்கிறார்.

ஆனால் இது குறித்து பேச தான் தயாரில்லை என்று விஜேதுங்க கூறியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இன்னும் மூன்று மாதத்தில் தன்னை ஜனாதிபதி கூப்பிட்டு பேச அழைக்கப் போகிறார் என்று தொண்டமான் கூறியதும் புலிகள் பற்றி புகழ்ந்துரைத்ததும் விஜேதுங்கவுக்கு மனக்கசப்பை ஏற்படுத்தியதாகவும் இதனால் தொண்டமானை தட்டிக் கழிக்க விரும்புவதாகவும் கூறப்படுகிறது.

அத்துடன் மலையகப் பகுதியில் வாக்குகளுக்கு தொண்டமானில் தங்கியிருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டாலும் தற்போது அவரை விட்டு ஒதுக்கும் எண்ணத்தை ஜனாதிபதி கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# கிளாலித் தாக்குதலால் 42 பேர் பலி

சமீபத்திய கிளாலித் தாக்குதலில் யாழ் குடாநாட்டில் நாற்பதுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாகவும் எண்பது பேர் காயமடைந்ததாகவும் தென் மராட்சிப் பகுதியில் ஒன்பதாயிரம் பேர் அகதிகளாக இடம்பெயர்ந்ததா கவும் செய்திகள் கூறுகின்றன. வடபகுதி அரசாங்க அதிபரின் அறிக்கையிலேயே இது குறித்து தெரிவிக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

உரும்பராய், நவகிரி, நீர்வேலி பகுதியில் ஷெல் தாக்குதல்களால் பலர் காயமடைந்தும் கொல்லப்பட்டும் உள்ளார்கள். பருத்தித்துறை, சங்கானை, கொக்குவில், சாவகச்சேரி பகுதியில் விமானக் குண்டுவீச்சினாலும், எழுதுட்டுவாள், பளை, கொடிகாமத்தில் ஹெலிகொப்டர் தாக்குதலினாலும் பொதுமக்கள் கொல்லப்பட்டும் காயப்பட்டும் உள்ளனர்.

# காஷ்மீர் மசூதியை இராணுவம் முற்றுகையிட்டது ஊர்வலத்தில் சுட்டதில் 50பேர் பலி

இந்திய இராணுவம் காஷ்மீர் மாநிலத்தில் மசூதி ஒன்றை முற்றுகையிட்டுள்ளது. முகமது நபியின் மயிர் ஒன்றைக் கொண்டிருப்பதாகக் கூறப்படும் இந்த மசூதியினுள் பயங்கர வாதிகள் இருப்பதாகவும் அவர்களைச் சரணடை யும்படியும் இந்திய இராணுவம் கூறி வருகிறது. ஆனால் தீவிரவாதிகளோ சரணடைய மறுத்ததுடன் தங்களை பாதுகாப்பாக பாகிஸ்தானுக்கு தப்பிச் செல்ல அனுமதிக்கும்படியும் கேட்டுள்ளனர்.

இந்த இழுபறிக்குள் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்ட காஷ்மீருக்குள் தடையையும் மீறி வெளியே வந்து தங்களுக்கு ஆதரவாக இந்திய இராணுவத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் செய்யும்படி தீவிரவாதிகள் கோரியுள்ளனர். வெள்ளிக் கிழமை நடைபெற்ற தொழுகையின் பின்னர் இந்த மசூதியை நோக்கி ஊர்வலமாக செல்லும்படி மதத் தலைவர்கள் கோரியுள்ளனர்.

ஹஸரத்பால் மசூதியினுள் உள்ள ஐம்பது தீவிரவாதிகளும் 150 பொதுமக்களும் ஜன்னலூடாக இந்திய அரசுக்கு எதிரான கோஷங்களை கோஷித்தனர். 'இது எங்களது புனிதமான இடம், எங்கள் உயிரை விட இது மேலானது. இதை இந்திய இராணுவத்திடம் விட மாட்டோம்' என ஒருவர் கூச்சலிட்டார். அத்துடன் உண்பதற்கு உணவோ நீரோ இல்லை என்றும் தங்களுக்கு உணவு அனுப்பும்படி செஞ்சிலுவைச் சங்கத்தையும் கோரினர்.

இதற்குள் தீவிர வாதிகளுக்கும் அரசாங்க தரப்பினருக்கும் இடையில் பேச்சுவார்த்தைகளும் நடந்த

ம.ப.பார்க்க

### காஷ்மீரில்...

வண்ணம் உள்ளன. ஆயுதங்களை கைவிட்டு வரும், முன்பு குற்றச் செயல்களில் ஈடுபடாதவர்கள் பாதுகாப்பாக வெளியே செல்ல அனுமதிக்கப்படும் என்று அரச தரப்பினர் தெரிவித்துள்ளனர். அத்துடன் அங்குள்ள புனித மயிரை தீவிரவாதிகள் கடத்த முயல்கின்றனர் என்றும் மசூதியினுள் ஆயுதங்களை ஒளித்து வைத்திருக்கிறார்கள் என்றும் இந்திய அரசதரப்பினர் கூறுகின்றனர்.

இந்த இழுபறியால் சிறிநகரில் ஆயிரக்கணக்கில் துருப்புகள் குவிக்கப்பட்டுள்ளனர்.

பிந்திய செய்திகளின்படி உள்ளே உள்ளவர்கள் தாங்கள் பட்டினியால் வாடுவதாகவும் உள்ளே வந்து தங்கள் நிலையைப் பார்க்கும்படியும் பத்திரிகையாளர்களை வேண்டியுள்ளனர். மசூதியின் உச்சத்தில் இருந்து இவர்கள் கூக்குரலிட்டனர். உள்ளே உள்ளவர்களில் ஒன்பது பேர் வரை வயிற்றுக்கோளாறு வந்துள்ளதாக இந்திய அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. உள்ளே உள்ளவர்களின் நிலை பற்றி அறிய ஐந்து மருத்துவர்கள் நீதிமன்ற ஆணைப்படி உள்ளே சென்றனர். முதலில் இவர்கள் ஆயுதம் தாங்கிய தீவிரவாதிகளால் திருப்பி அனுப்பப்பட்டனர். இவர்களிடம் அடையாள அட்டைகள் இல்லை என்றுகூறியே இவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர். அசுத்தமடைந்த நீரினால் வாந்திபேதி ஏற்பட்டுள்ளது.

உள்ளே உள்ளவர்களில் ஒருவர் தற்போது வெளியே தப்பி சென்றுள்ளார். இன்னொருவர் தப்ப முயன்றபோது மற்றவர்களால் பிடிக்கப்பட்டுள்ளார். பதினைந்து வயதான ஊமைப் பையன் ஒருவர் தப்பி தனது குடும்பத்துடன் சேர்ந்துள்ளார்.

பன்னிரு தினங்களுக்கு மேலாக இந்த முற்றுகை நீடித்துள்ளது. ஆயினும் இராணுவம் தாக்குதல் எதையும் மேற்கொள்ள மாட்டாது என்று தெரிவித்துள்ளது. தற்போது சுமார் 150 பேர் வரை உள்ளே இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இரு நாட்களுக்கு நூற்றைம்பது பேருக்கு போதுமான உணவு மட்டுமே அனுப்பப்பட்டது.

ஆரம்பத்தில் எட்டு இளம் பெண்கள் முற்றுகைக்குள்ளால் வெளியே வந்தனர். உள்ளே இருக்கும் பொதுமக்களை வெளியே விடும்படி இராணுவம் தீவிரவாதிகளுக்கு கோரிக்கை விடுத்திருக்கிறது.

இவர்களுககு ஆதரவாக நடைபெற்ற ஊர்வலம் ஒன்றின் மீது பொலிசார் சுட்டதில் ஐம்பதுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். ஊர்வலத்தின் இருபுறங்களையும் தடுத்து வைத்தபின்னர் பொலிசார் எச்சரிக்கை எதுவும் இன்றி சுட்டுத் தள்ளியதாக அங்குள்ளவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இது குறித்து விசாரணை செய்வதாக அரசாங்கம் உறுதியளித்திருக்கிறது. அத்துடன் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த கூலிப்படைகள் மசூதியுள் உள்ளதாக அரசு கூறுகிறது. இதில் ஒருவர் பாகிஸ்தானின் உளவுப் பிரிவைச் சேர்ந்தவர் என்றும் ஜே.கே. எல்.எஃப் தலைவர்கள் இருவரும் ஹிஸ்புல் முஜாகிதீன் தலைவர் ஒருவரும் உள்ளே உள்ளதாக இந்திய தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதற்குள் இந்த மசூதியின் இமாம் ஆயுததாரிகள் தமது மசூதியின் புனித தன்மையை கெடுத்து விட்டதாக தொலைக்காட்சியில் பேட்டி கொடுத்ததன் பின்னர் அவருக்கு தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்ததால் அவருக்கு பொலிசார் பாதுகாப்பு வழங்கியுள்ளனர். அஹ்மட் பாருக் என்ற இந்த இமாமின் முன்னோர்கள் 300 வருடங்களாக அந்த மசூதியை பராமரித்து வருகிறார்கள். இவரை இவரது பேட்டி பற்றி விளக்கமளிக்குமாறும் இல்லாவிடில் பகிரங்கமாக மரண தண்டனை விதிக்கப்படும் என்றும் ஹிஸ்புல் முஜாகிதீன் அமைப்பு தெரிவித்திருக்கிறது.

# அனுரா ஐ.தே.கட்சியில் சேர்கிறார்

அனுரா பண்டாரநாயக்க ஐ.தே. கட்சியில் சேரவுள்ளதாக செய்திகள் கூறுகின்றன. இவரது இந்த முடிவை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வரவேற்றிருக்கிறார். இந்த முடிவு தங்கள் கட்சியைப் பலப்படுத்தி சுதந்திரக் கடசியைப் பலமிழக்கச் செய்யும் என்று விக்கிரமசிங்க தெரிவித்தார். ஆயினும் அனுராவுக்கு மந்திரிப் பதவி வழங்கப்படுமா என்பதை உறுதி செய்ய அவர் மறுத்து விட்டார். இது குறித்து கட்சி முடிவு செய்யும் என்று அவர் தெரிவித்தார். ஜனாதிபதி விஜேதுங்க இவருக்கு வெளிநாட்டமைச்சு, அல்லது நிதியமைச்சை வழங்குவதாக உறுதியளித்திருக்கிறார் என்று அனுராவின் ஆதரவாளர்கள் தெரிவித்தனர்.

ஆயினும் தற்போது லண்டனில் இருக்கும் அனுரா தனது கடசி மாற்றம் மூலம் தனது எதிர்காலத்தை பாழடிக்கப் போகின்றார் என்பதே பலரின் கருத்தாக உள்ளது. இவர் முட்டாள்தனமானவர், ஐ.தே.கட்சியில் இவருக்கு எதிர்காலம் இல்லை, சிறிமாவும் சந்திரிகாவும் இது நடக்க வேண்டும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள் என்று கொழும்புப் பல்கலைக்கழக அரசியல் விரிவுரையாளர் ஜெயதேவ உயாங்கொட தெரிவித்திருக்கிறார். சுதந்திரக்கட்சி திறமையுள்ளதாயிருந்தால் மீண்டும் ஐ.தே.கட்சிக்கு பலத்த எதிர்ப்பை வழங்கலாம் என்று உயாங்கொட தெரிவித்தார்.

தனது அரசியல்வாழ்வை இவர் பாழடிக்கிறார் என்று ஹெக்டர் அபேவர்த்தன கூறியுள்ளார்.

தற்போதைய இனப்பிரச்சனையில் இந்த கட்சி மாற்றம் பாரதூரமானதாக கருதப்படமாட்டாது என்று சிலர் கருதுகிறார்கள்.

தான் லண்டனுக்கு செல்லுமுன் அளித்த பேட்டியில் தான் இலங்கையிலிருந்தால் கட்டாயம் அரசியலில் தான் ஈடுபட வேண்டும் என்றும் தான் சட்டத்தரணியோ, நிபுணரோ அல்ல என்றும் இதனால் தான்

6ம் பக்கம் பார்க்க..

# கனடாத் தேர்தலில்
# லிபரல் கட்சி பெருவெற்றி
# ஷான் கிறெற்ஷியன் பிரதமரானார்
# கன்சர்வேட்டிவ் கட்சி படுதோல்வி

கனடியப் பாராளுமன்றத் தேர்தல கனடிய அரசியல் முறையை மாற்றியமைத்திருக்கிறது. எதிர்கட்சியான லிபரல் கட்சி பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்று வெற்றி பெற்றிருக்கிறது. தற்போதைய பிரதமராக ஷான் கிறெற்ஷியன் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். இவர் கனடாவில் இருபதாவது பிரதமர் ஆவர். ஆளும் கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சி இரண்டு ஆசனங்களை மட்டுமே பெற்றிருக்கிறது.

லிபரல் கட்சி தற்போதைய பாராளுமன்றத்தில் 177 ஆசனங்களைக் கைப்பற்றியிருக்கிறது. எதிர்க்கட்சியாக இருந்த போது 79 ஆசனங்களை மட்டுமே லிபரல் கட்சி கொண்டிருந்தது. தனது தொகுதியில் வெற்றி பெறுவாரோ என்ற சந்தேகத்தில் இருந்த கிறெற்ஷியன் தனக்கு பலத்த எதிர்ப்பாக விளங்கிய பிரிவினைக் கட்சியான புளக் கியுபெக்குவா கட்சியின் வேட்பாளரைத் தோற்கடித்திருக்கிறார். ஆனால் தற்போதைய பிரதமரான கிம் கம்பல் வான்கூவரில உள்ள சொந்த ஆசனத்தைப் பறிகொடுத்துள்ளார்.

லிபரல் கட்சி அல்பேட்டாவுக்கு கிழக்குப் புறமாக உள்ள மாகாணங்கள் அனைத்திலும் பெருவெற்றியீட்டியிருக்கிறது. அட்லாண்டிக் மாகாணங்களில் ஒரு ஆசனத்தை கன்சர்வேட்டிவ் கட்சிக்கு மட்டும் இழந்து மீதி ஆசனங்களை லிபரல் கைப்பற்றிக் கொண்டது. நியுபவுண்ட்லாந்து, பிரின்ஸ் எட்வேட் தீவுகள், நோவா ஸ்கோஷியா மாநிலங்களில் அனைத்து ஆசனங்களும் லிபரல் கட்சிக்கே. ஒன்ராறியோவில் உள்ள சகல தொகுதிகளிலும், ஒரு தொகுதியில் சீர்திருத்தக் கட்சிக்கு இழந்ததைத் தவிர அனைத்து தொகுதிகளிலும் வென்றிருக்கிறது. பாரிய ரொறன்ரோ பகுதியில் அனைத்து தொகுதிகளும் லிபரல் கட்சியின் வசமே உள்ளன. கியுபெக்கிலும் ஆசனங்களை வென்றதன் மூலம் ஒரே தேசியக் கட்சியாக லிபரல் கட்சி உள்ளது.

கியுபெக்கில் பிரிவினைவாதக் கட்சியான புளக் கியுபெக்குவா பெருவெற்றியீட்டியுள்ளது. 54 ஆசனங்களைப் பெற்ற இக்கட்சி எதிர்க்கட்சியாக செயற்படும். கியுபெக்கில் 49 வீதமான வாக்குகளை இக்கட்சி பெற்றுள்ளது. கியுபெக்கின் பிரிவினையை வலியுறுத்த பாராளுமன்றத்தை பாவிக்கப் போவதாக கூறும் இக்கட்சி எங்கள் நாட்டில் கூட்டணி இருந்த நிலையிலேயே உள்ளது. கூட்டணிக்கும் எதிர்க்கட்சி ஸ்தானம் கிடைத்தது போல இக்கட்சிக்கும் எதிர்க்கட்சி ஸ்தானம் கிடைத்துள்ளது. பாராளுமன்றத்தில் இரு நாடுகள் போன்றே தாம் செயற்படப் போவதாக தலைவர் லூஷியன் பூசா தெரிவித்திருக்கிறார். கியுபெக்கில் லிபரல் கட்சி இருபது ஆசனங்களைக் கைப்பற்றியிருக்கிறது.

அரசாங்கக் கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சியின் படுதோல்வி பலரை ஆச்சரியப்பட வைத்துள்ளது. இரண்டு ஆசனங்களை மட்டுமே தக்க வைத்திருக்கிறது. கியுபெக்கில் ஒரே ஒரு கன்சர்வேட்டிவ் ஆசனமாக உதவிப் பிரதமர் ஷான் ஷரேயின் ஷேர்புருக் ஆசனம் காப்பாற்றப்பட்டிருக்கிறது. நியு பிரன்ஸ்விக்கில் சென்.ஜோன் மேயரான பெண்மணி வெற்றி பெற்றிருக்கிறார். சென்ற பாராளுமன்றத்தில் 154 ஆசனங்களைப் பெற்றிருந்தது இக்கட்சி என்பது குறிப்பிடத்தக்கது. மொத்த வாக்காளர்களில் 16 வீதமானோர் இக்கட்சிக்கு வாக்களித்திருக்கின்றனர். வெறுமனே இரண்டு ஆசனங்களைக் கொண்டிருப்பதால் இக்கட்சி உத்தியோகபூர்வ கட்சி அந்தஸ்தை இழந்து கொள்கிறது. மல்ரோனியின் கொள்கைகளால் அதிருப்தி அடைந்த வாக்காளர்களாலேயே தோல்வி ஏற்பட்டிருப்பதாக கட்சிக்குள் கருத்து நிலவுகிறது. பொருட்கள் சேவைகள் வரி, சுதந்திர வர்த்தகம் போன்ற விடயங்களால் பொருளாதாரம் மந்த நிலையடைந்து வேலைவாய்ப்புகள் குறைந்தன என்ற நம்பிக்கை காரணமாக கன்சர்வேட்டிவ் கட்சிக்கான ஆதரவு குறைந்திருக்கிறது.

புதிய ஜனநாயகக் கட்சி ஒன்ராறியோவில் படுதோல்வியைத் தழுவிக் கொண்டிருக்கிறது. ஒன்ராறியோ மாநில அரசைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டிருக்கும் இக்கட்சி இந்த மாகாணத்தில் ஒரு ஆசனத்தைக் கூடப் பெறவில்லை. நாடு பூராவும் மொத்தமாக ஒன்பது ஆசனங்களை மட்டுமே இக்கட்சி பெற்றது. இதன் தலைவரான ஒட்றி மக்லாக்லின் தனது தொகுதியான யூக்கொனில் வெற்றி பெற்றிருக்கிறார். சென்ற தேர்தலில் 43 ஆசனங்களைக் கொண்டிருந்த இக்கட்சி இம்முறை ஆறு வீத வாக்குகளை மட்டுமே பெற்றது. இக்கட்சியும் உத்தியோகபூர்வ கட்சி அந்தஸ்தை இழக்கிறது. இக்கட்சியின் தோல்விக்கு ஒன்ராறியோ மாநிலத்தில் கட்சி செல்வாக்கிழந்ததே காரணம் என்று சுட்டிக் காட்டப்படுகிறது. கட்சி தனது வாக்குறுதிகளை மீறியதால் அதிருப்தியடைந்த வாக்காளர்கள் லிபரல் கடசி பக்கம் திரும்பியதாக கருத்துக்கள் கூறுகின்றன.

கனடாவின் மேற்கு மாநிலங்களான அல்பேட்டா, பிரிட்டிஷ் கொலம்பியா பகுதிகளில் சீர்திருத்தக் கட்சி வெற்றி பெற்றிருக்கிறது. சஸ்கச்சேவானில நான்கு ஆசனங்களும் அல்பேட்டாவில மொத்தம் 26 ஆசனங்களில் 22 ஆசனங்களும் பிரிட்டிஸ கொலம்பியாவில் மொத்தம் 32 ஆசனங்களில் 24 ஆசனங்களும் இக்கட்சி பெற்றிருக்கிறது. சென்ற தேர்தலில் ஒரு ஆசனத்தை மட்டுமே கொண்ட இக்கட்சி இத்தேர்தலில் 52 ஆசனங்களைப் பெற்றிருக்கிறது. ஒன்ராறியோவில் இக்கட்சி 53

ம.ப.பார்க்க..

# கனடியப்பாராளுமன்றத்தில் சீக்கியர்களும் வெளிநாட்டினத்தவர்களும்

கனடியத் தேர்தலில் குடியேற்ற வாசிகளுக்கு எதிரான உணர்வு ஒரு புறத்தில தேர்தல் பிரசாரத்தில ஆயுதமாகப் பாவிக்கப்பட்டது. வெள்ளையினத்தவர்களின் வாக்குகளைச் சேர்ப்பதற்காக குடிவாளர்களின் வருகையைக் கட்டுப்படுத்துவதாக உறுதியளிக்கப்பட்டது. மறுபுறத்தில் குடியேற்றவாசிகள் பலர் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். லிபரல் கட்சியில் சில உறுப்பினர்கள் குடியேற்றவாசிகளே. புதிய ஜனநாயகக் கட்சியும் பல வேட்பாளர்களாக குடியேற்றவாசிகளாகவே நிறுத்தியிருந்தது.

1991 குடிசனத்தொகையின்படி ரொறன்ரோ மாநகரில் ஐம்பது வீதத்திற்கு மேற்பட்டோர் முதல் தடவையாக ஆங்கிலேயரோ, பிரெஞ்சுக்காரரோ அல்லாதவராக இருந்தனர். இதை இந்த தேர்தலில் பிரதிபலிப்பதற்காகவும் அந்தந்தப் பகுதியில் உள்ள இனத்தவர்களைச் சார்ந்தவர்களையே கட்சிகள் தேர்தலில் நிறுத்தியிருந்தன. இத்தாலியர் செறிந்த பகுதிகளில் இத்தாலியர்களும் சீக்கியர்கள் செறிந்த பகுதியில் சீக்கியர்களும் சீனர்கள் செறிந்த பகுதியில் சீனர்களும் என பலர் வேட்பாளராயினர். மால்ட்டன் பகுதியில் லிபரல் கட்சி சார்பில குர்பாக்ஸ் மாலி என்ற சீக்கியரும் வான்கூவரில் ஹேர்ப் தாலிவால் என்ற சீக்கியரும் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தான் சீக்கியர் என்ற விடயத்தில் பெருமைப்பட்டாலும் தான் முதலில் கனடியன் என்கிறார் மாலி. ஜாக் பாதுரியா என்ற இந்திய வம்சாவளியினரும் மார்க்கம் பகுதியில் லிபரல் சார்பில் வென்றிருக்கிறார்.

ஆர்மீனிய வம்சாவளியினரான சார்க்கிஸ் அசாதுரியன் என்பவர் லிபரல் கட்சியில் வெற்றி பெற்றிருக்கிறார். சீன, பிலிப்பைன், ஜப்பானிய வம்சாவளியினரும் வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

எற்ரோபிக்கோ பகுதியில கிரெனடா பகுதியிலிருந்து குடியேறிய கறுப்பினப் பெண்ணான ஷான் அகஸ்ரின் வெற்றி பெற்றிருக்கிறார். இவர் வீட்டு வேலைக்காரராக வந்து சேர்ந்து பல்கலைக்கழகம் வரை சென்று படித்து பாடசாலை அதிபராக கடமையாற்றியவர். இதைப் போலவே ஒவன் சவுண்ட் பகுதியில் மேயராக இருக்கும் ஒவிட் ஜாக்சன் என்ற கறுப்பர் லிபரல் கட்சி சார்பில் வென்றிருக்கிறார்.

இத்தேர்தலில் மொத்தம் 53 பெண்கள் தெரிவாகியுள்ளார்கள். இதில் லிபரல் கட்சியில் மட்டும் 36 பெண்கள் தெரிவானார்கள். றிபோர்ம் கட்சியில் ஏழு பேரும் கியுபெக் கட்சியில் ஒன்பது பேரும் கன்சர்வேட்டிவ் கடசியில ஒருவரும் புதிய ஜனநாயகக் கட்சியில் அதன் தலைவியும் தெரிவானார்கள்.

இத்தேர்தலில் 2155 பேர் மொத்தம் 295 ஆசனங்களுக்குப் போட்டியிட்டார்கள். வாக்காளர்களில் 71 வீதமானோர் வாக்களித்திருக்கிறார்கள்.

கியுபெக்கில் சுயேச்சை ஒருவர் வெற்றி பெற்றிருக்கிறார்.

## கனடிய தேர்தல்...

இடங்களில் இரண்டாம் இடத்தைப் பெற்றிருக்கிறது. ஒரு இடத்தில் வெற்றி பெற்றது. தீவிர பழமைவாதப் போக்குக் கொண்ட இக்கட்சி குடிவரவைக் குறைத்து அரசு வழங்கும் சலுகைகளில் வெட்டுக்களை கொண்டிருக்கும் நோக்கம் கொண்டது. வாக்காளர்களில பதினெட்டு வீதமானோர் இக்கட்சியை ஆதரித்திருக்கின்றனர்.

புதிய பிரதமரான கிறெற்ஷியன் உடனடியாக வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கான திட்டங்களை அமுல் படுத்தப் போவதாக தெரிவித்திருக்கிறார். அத்துடன் பொருட்கள் சேவைகளுக்கான வரிமுறையை மாற்றியமைக்கப் போவதாகவும் வடஅமெரிக்க சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை மீள் பேச்சுவார்த்தைக்குள்ளாக்கப் போவதாகவும் தெரிவித்திருக்கிறார். அத்துடன் தனியார் மயமாக்கப்பட்ட ரொறன்ரோ விமானநிலையத்தை மீண்டும் அரசுடைமையாக்குவது பற்றியும் ஆலோசித்து வருகிறார். மேலும் இராணுவத்தினருக்கு வாங்க உத்தேசிக்கப்பட்ட ஹெலிகொப்டர்களை ரத்துச் செய்யவும் உள்ளார்.

## கிழக்கில் தேர்தல்

அடுத்த தை மாதம் கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப் போவதாக ஜனாதிபதி அறிவித்திருக்கிறார். 87ம் ஆண்டுக்குப் பின்னர் முதலாவது தடவையாக நடக்கப் போகும் தேர்தல் இதுவாகும்.

மாநகரசபை, பட்டனசபைத் தேர்தல்கள் நடத்தப்படும் என்றும் அரசாங்க அதிகாரிகள் கலந்துகொண்ட கூட்டம் ஒன்றில் ஜனாதிபதி இதுபற்றித் தெரிவித்திருக்கிறார் என்றும் இலங்கை வானொலி கூறியது.

### அனுரா..

வங்கியொன்றின் இயக்குனராகப் பணியாற்ற முடியாது என்றும் எனவே தான் வேலை தேடியே வெளிநாடு செல்வதாகவும் கூறியிருந்தார்.

## ஜேர்மனியில் அகதிமுகாம் தீக்கிரை

இலங்கையர்கள் உட்பட பலநாட்டு அகதிகள் தங்கியிருந்த அகதிமுகாம் ஒன்று ஜேர்மனியில் தீக்கிரையாக்கப் பட்டிருக்கிறது. பல்கேரியா, இலங்கை, யூகோஸ்லாவியாவைச் சேர்ந்த பதினைந்து பேர் தங்கியிருந்த முகாம் ஒன்று ஆட்லன்பேர்க் என்ற இடத்தில் தீக்கிரையாக்கப்பட்டது. ஆயினும் யாரும் இந்த தீவிபத்தில் காயமடையவில்லை. கடந்த வருடம் பதினேழு வெளிநாட்டவர் நிறவெறித் தாக்குதல்களால் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஒன்பது பேர் இவ்வருடம் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

# சிவதாசனின்



# அசை

## கனடிய தேர்தல்

அக்டோபர் 25 நடந்து முடிந்த தேர்தல் அரசியல் வரைபடத்தையே மாற்றியமைத்திருக்கிறது. சில வருடங்களுக்கு முன் 295 மொத்த ஆசனங்களில் 211 ஐப் பெற்ற கன்சர்வேட்டிவ் கட்சி இரண்டே ஆசனங்களைப் பெற்று அவமானத்துக்குள்ளாகியிருக்கிறது. பிரதமர் கம் கம்பெல் தனது ஆசனத்தையே பறிகொடுத்திருக்கிறார். பகிரங்கமாகவே பிரிவினை கோரும் புளக் கியூபெக்குவா கட்சி எதிர்க்கட்சி ஸ்தானத்துக்கு வந்திருக்கிறது. பிரதேசவாரியான இந்தக் கட்சியும் றிபோம் கட்சியும் முறையே இரண்டாவது மூன்றாவது ஸ்தானங்களைப் பிடித்ததன் மூலம் நாடு தழுவிய எதிர்க்கட்சியாக, 9 ஸ்தானங்களை மட்டுமே கைப்பற்றிய நியூ டெமோக்கிறட்டிக் கட்சி பிரதிநிதித்துவம் பெறுகிறது.

எதிர்க்கட்சியினால் முழு நாட்டினையும் பிரதிநிதித்துவப்படுத்த முடியவில்லை. ஆண்ட கட்சி உத்தியோகபூர்வ கட்சி ஸ்தானத்தை இழந்திருக்கிறது. இடதுசாரிக் கட்சியான என்.டி.பி. உத்தியோகபூர்வ கட்சி ஸ்தானத்தை இழந்திருக்கிறது. தீவிர வலதுசாரிக் கட்சியான றிபோம் கட்சி, புதிய கட்சியாக இருந்த போதிலும் மேற்கு மாகாணங்களை வாரியெடுத்திருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக லிபரல் கட்சி பெரும்பான்மை ஆசனங்களோடு ஆட்சிக்கு வருகிறது.

புதிய குடிகளான எங்களுக்கு தேர்தல் முடிவுகள் தற்போதைக்கு ஆறுதலைத் தந்தாலும் எதிர் காலம் சுபிட்சமாக அமைய மாட்டாது என்பதைக் கட்டியம் கூறுவதாகவே படுகிறது.

நிறவெறியின் பின்னணியில் சுதேசகோஷம் எழுப்பும் றிபோம் கட்சி குடிவரவைக் குறைக்க எடுக்கின்ற நடவடிக்கைகள் பெருவாரியான வாக்குகளைப் பெற்றுத் தந்திருக்கிறது. இவர்கள் ஆளும் கட்சியாவில்லாது எதிர்க்கட்சியாகவிருப்பதனாலும், பாரம்பரிய வலதுசாரி வாக்குகளை கன்சர்வேட்டிவ் கட்சியிடமிருந்து இவர்கள் கவர்ந்து கொண்டதனாலும், இவர்களது திறமையின்மைகள் பற்றி மக்களினால் அறியப்படாமலிருப்பதனாலும் அடுத்த தடவை பெரும்பான்மை ஆசனங்களோடு ஆட்சியமைக்கும் சந்தர்ப்பம் அமைய நேரிடலாம். அத்துடன் பல சமூகநலத் திட்டங்களை ரத்துச்செய்வது இவர்களது முதன்மையான திட்டங்களில் ஒன்று என்றபடியால் புதிய குடிகளின் மீதான நெருக்குவாரங்கள் பல முனைகளிலும் பலம் பெறும்.

தற்போது ஆட்சிக்கு வரும் லிபரல் கட்சி புதிய குடிகளுக்கு நல்லனவே செய்தாலும் குடிவரவு விடயங்களில் திட்டிக் கொண்டு பல நல்ல விடயங்களைச் செய்தது. கன்சர்வேட்டிவ் கட்சி தான். நமது 'கப்பலோட்டிய தமிழர்கள்' கிழக்குக் கரையில் தரை தட்டியபோது திறந்த மனதுடன் வரவேற்ற மனிதர் கன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த பிறையன் மல்ரோனி தான். அப்போதைய எதிர்க்கட்சியாகவிருந்த லிபரல் கட்சியும் அரசியல் நாடகத்தைத் தான் ஆடியது. லிபரல் கட்சியினால் நாட்டின் பொருளாதாரக் கடிவாளம் நல்லமுறையில் கையாளப்படாவிட்டால் நமது பாடு சிக்கல் தான்.

இந்தத் தேர்தல் மட்டுமல்ல உலகின் எந்த மூலை முடுக்குகளென்றாலும் மக்களைக் கவரத்தவறும் தலைவர்களும் கட்சிகளும் வெற்றி பெறுவதில்லை. கொள்கைகள் நல்லனவேயானாலும் அவை சரியான முறையில் முன்வைக்கப்படாவிட்டால் வெற்றி கிட்டுவது அபூர்வம். இந்த மாதிரியான கவர்ச்சியான (Charismatic) தலைவர்கள் பிறப்பார்களே தவிர உருவாவதில்லை. ஹிட்லர் முசொலினி. எம்.ஜி.ஆர். றொனல்ட் றேகன், மல்ரோனி போன்ற இத் தலைவர்கள் வரிசையில் கிம் கம்பல் இல்லை. வெற்றியை இழந்து விடாமலேயே விலகிப்போகும் தன்மை இத்தலைவர்களுக்கு இருந்தது.

உலகில் நடப்பதெல்லாம் அற்புதங்களாயிருக்கும் போது இது மட்டுமென்ன, பொறுத்திருந்து பார்ப்போம்.

## மிடி மெலடீஸ்- ஒரு காதோட்டம்

சமீப காலமாக கனடியத் தமிழுலகில் பரபரப்பை ஏற்படுத்தி வரும் இசைக்குழு மிடி மெலடீஸ் என்று சொன்னார்கள் மொன்றியாலில் இருந்து கொண்டு பல சாதனைகளையும் புரிந்து வரும் இந்த தமிழிசைக் கலைஞர்களைக் காதினால் பார்த்து கண்ணினால் கேட்கும் சந்தர்ப்பம் சமீபத்தில் கிடைத்தது. ஓஹோவென்று மக்கள் சொல்லுமளவிற்கு அங்கு எதுவுமேயில்லை. மாறாக இந்த மக்கள் ரசனைகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட உன்னத கலை நிகழ்வொன்று அங்கு பிரசன்னமாயிருந்தது.

இந்த நிகழ்வுக்குரியவர்கள் பலர், குழுவின் தலைவர் எஸ்.வி.வர்மன், அவர் துணைவி சாந்தினி வர்மன், உத்தமன், சிவா, பாக்கியராஜ், விஷேட தாரகை மலேஷிய சண்முகநாதன் மற்றும் திறமை மிக்க வாத்தியக் கலைஞர்கள் அத்தனை பேரும் ஒருவரையொருவர் சளைக்காது பிரமாதமாகச் செய்திருந்தனர்.

மலேஷிய சண்முகநாதன் ஒரு அபூர்வ பிறவி. உலகத்தில் இவரைப் போல் ஏழு பேர் நிச்சயமாக இருக்கமுடியாது. இவர் ஒருத்தரால் இப்படியிருக்க முடியும், இவர் ஹொலிவூட்டில் இருந்திருந்தால் நாம் அதிர்ஷ்டக்காரராக இருந்திருக்க முடியாது. சிப்பிலியாட்டி விட்டார்.

கம்பியூட்டர் மூலம் புதிய இசை வடிவங்களை அமைப்பது இசையுலகிற்கு புதிதல்ல. இசைஞானி இளையராஜா, ரஹ்மான், தேவா போன்ற கலைஞர்கள் தமிழுலகிற்குப் புதிய பரிமாணங்களை இக்கம்பியூட்டர் மூலம் தந்திருக்கிறார்கள். இசைகளை ஏற்கனவே பதிவு செய்து கொண்ட ரசிகமணிகளுக்கு சுருதி தப்பாது அதே இசை வடிவங்களை மீள ஒப்புவித்தல் மிகவும் சிரமமான காரியம். அதிலும் பாரம்பரிய இசைக்கருவிகளால்

9ம்பக்கம் பார்க்க..

# ‘ராவய‘ ஆசிரியர் குழுவின் யாழ் பயணக் குறிப்புகள் 1

*('ராவய' பத்திரிகையின் புகைப்பிடிப்பாளர் பிரியஞ்சன் சுரேஷ் டி சில்வா உட்பட ஆசிரியர் குழுவைச் சார்ந்த சுனில் ஜயசேகர, நந்தன வீரரத்ன, ஹசக ரத்னமலல ஆகியோர் செப்டம்பர் மாதம் 27ம் திகதி தொடக்கம் அக்டோபர் 06ம் திகதி வரை யாழ் குடா நாட்டின் பல பகுதிகளிலும் பயணம் செய்தனர். இவர்கள் தமது பயணத்தின் போது நேரில் கண்ட யுத்தம், யுத்தக் கைதிகள், கெரில்லா கலாச்சாரம், வட பகுதி மக்களின் இன்றைய வாழ்க்கை தொடர்பான தகவல்கள் ராவய பத்திரிகையில் தொடர்ச்சியாக வரவுள்ளன. இப்பத்திரிகையாளர் குழு தமிழீழ விடுதலைப் புலிகளால் சிறைவைக்கப்பட்டுள்ள பொலீஸ் உத்தியோகத்தர்களைச் சந்தித்தபோது அப்பொலீஸ் உத்தியோகத்தர்கள் கூறிய கருத்துகள் சிலவற்றை தாயகம் வாசகர்களுக்காக தமிழாக்கம் செய்து சுருக்கமாக வெளியிடப்படுகிறது.*

*தகவல்; ராவய அக்டோபர் 24,1993 தமிழாக்கம் செ. லோகநாதன்)*

### *பொலீஸ் கான்ஸ்டபிள் நந்தனவின் கதை.*

"எனக்கு வயது 20 ஆக இருக்கும் போது நான் பொலீஸ் சேவையில் சேர்ந்தேன். நான் தான் எனது குடும்பத்தில் மூத்தவன் எனக்கு இளைய தம்பிமாரும் தங்கைகளுமாக ஒன்பது பேர் உள்ளனர். அப்பாவும் அம்மாவும் கூலி வேலை செய்தே எங்களை வாழ வைத்தனர். தற்போது அவர்கள் நோய்வாய்ப்பட்டுள்ளனர் அவர்களைக் கவனிக்க வேறு வழியில்லாத காரணத்தினுலேயே நான் பொலீஸ் சேவையில் சேர்ந்தேன். பொலீஸ் சேவையில் சேர்ந்து 6 மாத காலத்துள் LTTE யினரால் கைது செய்யப்பட்டேன். அதன் பின்னர் எனது குடும்பம் எதுவுமே இயலாநிலைக்கு தள்ளுப்பட்டது. பள்ளிக்குச் சென்று கொண்டிருந்த எனது இரு தம்பிமார் பள்ளிப் பயணத்தை நிறுத்தி கூலிவேலை செய்தே இன்று எங்கள் குடும்பத்தைக் காப்பாற்றுகின்றனர்."

"நாம் இருக்கிறுேமா இல்லையா என்பதைக் கூட தென்பகுதியின் தலைவர்கள் தேடிப்பார்ப்பதில்லை கடந்த மூன்று வருடகாலத்தில் எம்மைப் பார்க்கவாவது வந்தது மாதம்பாக அஸ்லஜி அடிகள், ஆயர் கெனத் பெர்னுன்டோ, வண பிதா ஒஸ்வேல்ட் பேத், ஆனந்த வீரசேகர ஆகியோர் மட்டுமேயாகும். எங்களுடைய பெற்றோர் யாழ்ப்பாணம் வந்திருந்த காலத்தில் துக்கமாகவும் இருந்தது. அதே நேரம் சந்தோசமும் அடைந்தோம்."

தம்மை விடுதலை செய்விக்க அக்கறை கொள்ளாதது மட்டுமன்றி அதற்கு தடைகளையும் ஏற்படுத்துபவர்கள் பற்றி விரக்தியுடன் ஜீ.டி.திலகரத்ன இவ்வாறு கூறினுர்.

"இந்த யுத்தத்தில் யாரும் வெற்றிபெறப் போவதில்லை. பொதுமக்கள் உயிர் இழப்பும் உடைமைகள் அழிவதும் மட்டும்தான். வடக்கில் நடக்கும் யுத்தத்தைப் பற்றி தெற்கில் உள்ள மக்களுக்கு எதுவும் தெரியாது. யுத்தம் வட பகுதி மக்களின் அவசியமும் அல்ல. தெற்கிலுள்ள அரசியல் வாதிகள் தமது பதவியை காப்பாற்றிக் கொள்ளவும் தமது இருப்பை தக்க வைக்கவுமே இந்த யுத்தத்தை முன்னெடுக்கின்றனர். அவ்வாறே சில சிங்களப் பத்திரிகைகளும் சிங்கள மக்களது மனதைச் சந்தோசப்படுத்தி தமது வியாபாரத்தை பெருக்குவதற்காக யுத்தத்தைப் பற்றி பேசுகின்றன. எவ்விதமான பொறுப்புணர்வும் அவர்களுக்குக் கிடையாது. இதற்கு நல்ல உதாரணம்தான் எம்மை விடுதலை செய்யுமாறு கோரி அரசாங்கத்துக்கும் L.T.T.E யினருக்கும் எதிராக உண்ணுவிரதம் செய்து கொண்டிருக்கும் போதே உண்ணுவிரதம் நின்று விட்டதாக பத்திரிகைகளில் எழுதினுர்கள். அன்று அப்பத்திரிகைக்கு தேவைப்பட்டது எமது விடுதலை அல்ல, வடக்குக்கு பண்டங்கள் அனுப்புவதை தடுப்பதற்கான உபாயம் மட்டுமே அவர்களுக்கு தேவைப்பட்டது."

உண்ணுவிரதம் பற்றி மேலும் கருத்துத் தெரிவித்த சிசிற ஷாந்த "எமது தீர்மானத்துக்கு அமையவே நாம் 39 பேரும் உண்ணுவிரதம் இருந்தோம். L.T.T.E யினுடைய வற்புறுத்தல்கள் காரணமாகவே நாம் உண்ணுவிரதம் இருந்ததாக தெற்கிலுள்ள பத்திரிகைகள் எழுதின. ............ என்பவர் எங்களுடைய உண்ணுவிரதத்தை பற்றி எழுதியது சரியாக எங்களுடன் கூடவே இருந்ததைப் போன்று. ஆனுல் அப்படியான ஒருவர் இந்தப் பக்கத்துக்கு வந்ததாகவே இல்லை. ஆனுல் கஷ்டப்பட்டது நாங்கள் தான்." என்றுர்.

L.T.T.E யினுல் கைது செய்யப்பட்டு சிறையில் இருக்கின்ற நிலையிலும் இப்பொலீஸ் உத்தியோகத்தர்கள் இனவாதத்தை முற்ருக நிராகரிக்கின்றனர். அதுமட்டுமன்றி வடக்கின் யுத்தக் களத்தை ஒருகாலமும் காணுத தெற்கிலுள்ள இனவாத அமைப்புகள், அவற்றின் தலைவர்கள், குறிப்பிட்ட சில பத்திரிகைகள் பற்றி மிகுந்த வெறுப்பே இவர்களிடம் காணப்படுகிறது.

"இன்று தெற்கில் இருந்து கொண்டு யுத்தம் பற்றி பேசும் எவரும் வடக்கின் யுத்தத்தைப் பற்றி எதையும் அறிய மாட்டார்ர்கள். அவர்களுடைய ஒரு பிள்ளையையாவது இராணுவத்திலோ பொலீசிலோ சேர்த்துள்ளார்களா? நாம் அறிந்த வரையில் யுத்தத்தைப் பற்றி பேசுகின்ற குணதாச அமரசேகரவின் மகன் வெளி நாட்டில் இருக்கிறுர். பேராசிரியர் நலீன் டி சில்வா வின் மகன் றேயல் கல்லூரியில் படிக்கிறுர். நலீன் டி சில்வா ஏன் தன்னுடைய மகனை இராணுவத்திற்கோ பொலீசுக்கோ தொழில் செய்ய அனுப்பவில்லை."

"எமது விடுதலையை இல்லாமல் செய்தது ...... பத்திரிகையாகும். அப்பத்திரிகையில் உள்ளவர்கள்

யாழ்ப்பாணத்தில் என்ன நடக்கிறது என்பதை அறியமாட்டார்கள் கொழும்பில குளிருட்டப்பட்ட அறைகளில் இருந்து கொண்டு இனவாதத்தை விதைத்து மக்களின் ஆத்திரத்தை துாண்டி பத்திரிகை விற்பது இலகுவானது. அதனால் இந்தப் பிரச்சனைக்கு தீர்வு காண்பது தவிர்க்கப்பட்டதுதான் மிச்சம்.

நாம் இன்றும் சிறையில் இருக்க நேர்ந்தது இதனாலேயே தான்."

"வடக்குக்கு பொருட்களை அனுப்பினால் L.T.T.E யினர் தான் பயன் பெறுவர் என பொருட்கள் அனுப்புவதற்கு எதிராக பத்திரிகைகள் கூறுகின்றன. ஆனால் தேவையான பொருட்கள் அனைத்தும் வேண்டிய அளவில் L.T.T.E யினரிடம் உண்டு. ஆனால் பொதுமக்களிடம் தான் இல்லை. பட்டரிகள் அனுப்பினால் இராணுவத்தினரின் கால்களை உடைக்க கூடிய குண்டுகளைத் தயாரிப்பார்கள் என்பது உண்மைதான். பெற்ரோல் குண்டுகள் தயாரிக்க யூரியா தேவை என்பதும் உண்மைதான். ஆனால் இவைகள் வேண்டிய அளவில் L.T.T.E. யினரிடம் உண்டு. அப்பாவி பொதுமக்களிடம் தான் இவைகள் இல்லை. மறுபக்கம் பார்ப்போமானால் சொல்லப்படுகின்ற பொருட்கள் மட்டும் தான் யுத்தத்திற்கு உதவியாக இருக்கும் என்றில்லை. நீர், அரிசி, மாவு, சீனி, போன்ற பொருட்களும் அவசியம். உண்டு குடித்தால் தான் யுத்தம் செய்ய முடியும். அப்படியானால் ஏன் அப் பொருட்களுக்கு தடை விதிக்கவில்லை."

"நாம் இன்று எதுவுமே செய்ய முடியாதவர்களாக நொந்து போயுள்ளோம்! யுத்தத்தை வியாபாரமாக்கி உள்ளவர்களுக்கும், தமது பதவியைக் காப்பாற்ற யுத்தத்தை முன்னெடுக்கும் அரசியல் வாதிகளுக்கும் எம்மை பற்றி அக்கறை இல்லை. செஞ்சிலுவைச் சங்கம் இல்லாவிட்டாம் நாம் இதை விடக் கஷ்டப்படுவோம். அவர்கள் தான் எமக்குத் தேவையான மருந்து வகைகளைத் தருகின்றனர். எங்களுடைய கடிதங்களை எமது பெற்றோருக்கு அனுப்பி வைக்கின்றனர்." என ராஜரன்னவும் மீரிகம சந்திரசேகரவும் கூறினர்.

# இப்படியும் சேதிகள்

## ஜனமித்திரன்

முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாச அவர்களால் தனது மிக நெருங்கிய வியாபாரியான எஸ்.எம்.ஏ. அலோசியஸ் அவர்களுக்கு 'கம் உதாவ' விழா பூமியைச் சுற்றி தகர வேலி போடுதல், பூமியில் மின்சார பல்ப்புக்கள் போடுதல் ஆகியவற்றுக்கான கொந்தராத்து வழங்கப்பட்டது. இக் கொந்தராத்துக்காக திரு அலாசியஸ் அவர்களின் வியாபார நிறுவனத்துக்கு கூலியாக மட்டும் ஐந்து கோடி அறுபது இலட்சம் ருபாய் வழங்கப்பட்டுள்ளது. விழா ஒன்றுக்கு தகரம் அடைக்க ருபா 20 இலட்சம் மின்சார பல்புகளுக்காக 20 இலட்சம் என 40 இலட்சம் ருபாய் கூலியாக வழங்கப்பட்டது. இதன்படி கடந்த 14 'கம் உதாவ' விழாக்களுக்கும் 5 கோடி 60 இலட்சம் ருபாய் வீடமைப்பு அதிகார சபையால் 'அலோசியஸ் குருப்' நிறுவனத்துக்கும் அதனுடன் இணைந்துள்ள "ரேணுகா இலக்ட்றிக்கல் நிறுவனத்துக்கும் செலுத்தப்பட்டுள்ளது.
தகவல் ராவய அக்டோபர் 24,1993

யாழ்தேவி தாக்குதல் பற்றி ஆய்வு பூர்வமான கட்டுரை எழுதிய 'டைம்ஸ் பாதுகாப்பு நிருபர் இக்பால் இதாஸ் அவர்களுக்கு படைத் தலைவர் லெப்டினனட் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன அவர்களால் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதை கண்டிக்கும் 'சுதந்திர பத்திரிகையாளர் இயக்கம்' இது தொடர்பாக பூரண விசாரணை நடாத்துமாறு ஜனாதிபதியை கோரியுள்ளது.
(தகவல் ராவய அக்டோபர் 24,1993)

### பன்னாட்டு தமிழுறவு...

அவலச்சாவுக்கும் நாமும் காரணர்கள் ஆகாமல் போலிக் கௌரவங்களையும். பிற்போக்குவாதங்களையும் அதனாலான அடிமைத்தனங்களையும போக்க இன, மத மொழி வெறித்தன்மைகளைக் கடந்து செல்ல வேண்டும். இதுதான் மனிதர்களின் ஆசை.. மிருகங்களின் ஆசை அல்ல.

இந்த மகாநாட்டை தூர நோக்காக பார்க்கும் போது நல்ல அம்சங்கள் இருந்தாலும் மேற்கூறியபடி மொழி இனவாதக் கருத்துக்களுக்காகவே நல்லவற்றையும் சொல்ல முற்படுகின்றார்கள் என்பதுதான் புரிகிறது. அதனால் அறிவியல் மாநாடாக பார்க்காமல் இன மாநாடாகப் பார்ப்பது பொருந்தும் ஈழத்தமிழர்களையும் இந்தியா மற்றும் நாடுகளில் இருந்து வந்தவர்கள் அனைவரையும் வேறுபடுத்திப் பார்க்க முடியாது. ஈழப்போராட்ட சிந்தனை கூர்மை அடைந்துவரும் இவ்வேளையிலும் சில ஈழத்தமிழர்களிடையேயும் விடுதலை என்பது சரியாக புரிந்து கொள்ள முடியாத தன்மையில் இருந்து கொள்வதினாலும் இந்திய, இலங்கைத் தமிழ்த் தேசிய இனத்துக்கு முன்னால் தமிழ் தமிழ் என்று பேசுவது. ஆண்ட பரம்பரை என்றும் ஆளுக்கு ஒரு தொகை சொல்லும், தமிழ் மக்கள் தொகைக்கு நாடு இல்லையே என்பதும் பழைய கதைகள். இந்த வாதம் தொடருமாயின் விடுதலை என்பது புரியாமல், இந்தியாவிலும் ஏனைய இனங்களை பகைக்க வழிகோலும், இதன் முந்திய மாநாடுகளைப்பற்றி எனக்குத் தெரியாது இம்மாநாடுமூலம் பார்வையாளரை ஏற்படுத்திய தாக்கமும் இதுதான்.
மீதி அடுத்த வாரம்

### அசை...

மீட்கப்பட்ட இசைவடிவங்களை கம்பியூட்டர் கருவிகளினால் மீள ஒப்புவிக்க முனைவது கிறைன்டரில் அம்மிச் சத்தம் எழுப்ப முனைவது போல தன்னால் முடியும் என வர்மன் நிருபித்திருக்கிறார்.

இசையின் வெற்றி, மனித நாடி நரம்புகளோடு சங்கமித்து ஆன்மாவை ஆட்கொண்டு உடலியக்கதிதைத் தன்வசப்படுத்துவதால் தான் நிர்ணயமாகிறது. அந்த வகையில் மூன்று மணித்தியாலங்களாக சொல்வழி கேளாது ஒடித்திரிந்த என் உடல் சொல்லித்தான் தெரியும்... இந்த நிகழ்ச்சி நல்லதொரு நிகழ்ச்சியென்று.. பார்க்காதவர்கள் வருந்தினால் அதற்கு நான் பொறுப்பாளியல்ல.

# பன்னாட்டு தமிழுறவு மன்ற மூன்றாவது மாநாடும் தேசிய வாதமும்: ஓர் பார்வை

**செ. தனபால்**

மாநாடு தேவைதானா தேவையற்றதா என்ற வாத பிரதி வாதங்களுடன் இந்த கட்டுரையை ஆரம்பிக்கின்றேன். முற்பது பேருக்கு மேற்பட்டவர்கள் பேச்சாளர், கவி கருத்தரங்குகளில் பங்குகொண்டார்கள். நாடகம், நாட்டியம், மற்றும் இசை நிகழ்சிகளிலும் மேலும் பலர் கலந்து கொண்டார்கள். ஓர் இலக்கிய மாநாடு என்று சுருக்கமாகச் சொல்லலாமா என்ற எனது தேடலுடன் நிகழ்சிகள் நடந்தேறின.

நல்லவற்றை மட்டும் கேட்டு எடுத்துச் செல்பவர்கட்கு அறிவு பூர்வமான மாநாடு என்று சொல்லலாம். இதனை ஓர் இலக்கிய கருத்தரங்க மகாநாடாக நான் கருதுகிறேன். முதலில் திருச்சியிலும் அடுத்து சென்னையிலும் மூன்றாவதாக பேர்லினிலும் நடந்தேறியுள்ளது.

வழமைபோல் பேசிவிட்டுப் போக கேட்போர் மக்களாக இருந்தவிட்டுப் போகும் நிலையில்தான் இந்த மகாநாடு அமைந்தது. ஒருவர் பேசி முடிய மக்களுடைய கேள்விகளுக்கு பதில் அளிக்கும் முறையில் ஒழுங்கு செய்யப்படவில்லை. ஒருவருக்கு முரண்பாடான கருத்தை ஒருவர் சொன்னால் பார்வையாளராக கேட்போராக இருக்கும் ஒருவர், பேசி முடிந்ததும் அந்தப் பேச்சில் முரண்பாடு இருந்தால் கேள்வி கேட்க வேண்டும். அதற்கு சில நிமிடம் ஒதுக்கப்பட வேண்டும். விளக்கத்திற்கு அவர் மீண்டும் பதிலளிக்க வேண்டும். அதுதான் இன்றைய ஆரோக்கியமான சிந்தனைக்கும் அரசியலுக்கும் பயன்படும் ஒன்றாகும்.

பெரிய அளவிலான மகாநாடுகளாக மிகக்கூடிய பேச்சாளர்களுடன் இப்படியான சந்தர்பத்தில் கருத்து மோதலைச் செய்ய முடியாமல், நேரமும் போதாமல் போய்விடுகின்றது. இந்த மாநாடு நான்கு நாட்கள் நடைபெற்றது. அதுவே போதாததாக வந்த பேச்சாளர்கள் பேசுவதற்கு போதிய நேரம் போதாமல் போய் விட்டதும் வருத்தத்திற்குரிய விடயம் அப்படிப் பேசியவர்களில் பலர் சுருக்கமாகவே தமது கருத்தை வெளியிட்டனர். திரும்பத் திரும்ப வேறு வேறு நிகழ்சிகளில் பங்கு பற்றிய சிலருக்கு சந்தர்ப்பங்கள் கிடைத்தது. சிலர் பத்து நிமிடங்களுக்குமேல் பேச முற்பட்டால் அறிவிப்பாளரால் ஒலிபெருக்கியை பிடித்து இழுக்க வேண்டிய நிலையைத்தான் பார்க்ககூடியதாக இருந்தது. நேரம் போதாமல் ஒரு விடயத்தினைச் சுருக்கமாகச் சொல்லும்போது மக்களுக்கு விளக்கம் போதாமல் தவறுதலாக புரிந்து கொள்ளும் நிலையையும் காணமுடிந்தது. பன்னாட்டுத் தமிழ் உறவு மன்றச்சூழல் அல்லது அந்த மேடை ஈழத்துப் பெண்களின் கருத்துக்கும் இடம கொடுத்திருந்த அதே வேளை ஆணாதிக்க கலாச்சாரத்திற்கு ஆதாரமாக இந்தியாவிலிருந்து பாட மட்டும்தான் பெண்ணால் முடியுமென்று பாட்டுக்காக ஒரு பெண் வந்திருந்தார்.

கேள்வி கேட்க முடியாத மேடையமைப்பு முறையானதால் அவர்கள் சொல்லும் முரண்பாடான நேரடிக் கருத்தையும் மறுக்க முடியாமல் போய்விட்டது. அங்கு வரமுடியாதவர் சமர்ப்பித்த கட்டுரை வாசிக்கும்போது வாசித்தவர் முழுவதும் வாசிக்காமல் வாசித்த பகுதிக்கும் நேர்முரணான கருத்தையும் சொல்லி விட்டுப் போனார். இது பெருந்தவறு. நான் கேட்டவரைக்கும் தமிழைப் பாதுகாக்க மற்றும் உரிமைகளைப் பாதுகாக்கும் மூன்றாம் மண்டல நாடுகள் உலக முதலாளித்துவத்தின் பிடியிலிருந்து விடுபடவேண்டும் என்ற கருத்துப்பட ஒரு தெளிவான பார்வையை என்னால் அறிய முடிந்தது. தமிழ்நாட்டின் பிரபல்யம் மிக்க ஒருவர் பேசும்போது, தான் பேர்லினில் தங்கியிருக்கும்போது சுகயீனம் ஏற்பட்டவேளை வைத்திய சாலைக்கு அழைத்துச் சென்றவர் ஒரு தமிழன், அதனால்தான் தமிழனை தமிழை நேசிக்கின்றேன் என பேசிக் கொண்டிருந்த வேளையில் உதாரணத்திற்கு ஒப்பிட்டார். (இத்தனைக்கும் அவர் தங்கியிருந்தும் தமிழ் மொழியைப் பேசுபவரின் வீடுதான்) கைதட்டப்பலர் இருப்பார்கள் தானே. (மனிதனின் கடமை(?) மறைந்துவிட்டது)

இந்த மாநாட்டில் முக்கியமாக மூத்தகுடி தமிழ்க்குடி என்றும் தமிழர் நம்பக்கூடிய அளவு ஆதாரமாகக் கூறுகிறார்கள், சரி ஏற்றுக்கொள்கிறோம் அதற்கு என்ன செய்வது? தமிழில் சொல்லப்பட்ட நல்ல கருத்துக்களையும் தத்துவங்களையும் நாம் கடைப்பிடிக்கின்றோமா? எத்தனை வீதம்? ஏன் ஏனைய உலக நாடுகளின் சராசரி மக்களிடம் கடைப்பிடிக்கும் நல்ல பழக்கவழக்கம் இல்லையா. ஒவ்வொரு மொழிகளிலும் தத்துவங்கள் இருக்கின்றன தன்தன் மொழிக்கும் அமுது என்று பெயர் கொடுத்து வர்ணிக்கலாம். எமக்கு மட்டும் சொந்தமல்ல. போலிக் கௌரவங்களுக்காக, பழம்பெருமை, அந்தஸ்து, தராதரம், தகுதி இந்த தமிழ்ச் சொற்களைப் பாவிப்போமானால் முதலில் நாம் அதைக் குழிதோண்டிப் புதைக்கவேண்டும். மொழியானது ஊடகமாக இருந்து ஒருவரை சமூகத்தில் சேர்த்து வாழ அறிவினைக் கொடுக்கின்றது தவிர வேறு ஒன்றினையும் அது ஆற்றவில்லை.

வளர்ந்து வரக்கூடிய அல்லது மாறிவரும் பாரம்பரிய பழக்க வழக்கங்களை நாம் இறுக்கமாக வைத்திருப்பதும் அதனை வைத்து தெரிந்தோ தெரியாமலோ பெருமைப்பட்டுக் கொண்டோம். அதனால் அதிலிருந்து விடுபடுவது பெருமை உடைந்துவிடுமோ என்ற அச்சத்தில் இறுக்கிப்பிடிக்கின்றோம். இளகும் போது ஜீரணிக்கமுடியாமல் பிற்போக்குவாதங்களுக்கு உடன்படுகின்றோம். மிகப்பெறுமதியான ஒரு மனித உயிரின் துடிப்புக்கும்

9ம் பக்கம் பார்க்க..

# A.R.K MARKET

## 31-35 St.Dennis Dr
## (Don Mills/Eglinton)

இலங்கை இந்திய உணவுப் பொருட்கள், மரக்கறி வகைகள், கடலுணவு வகைகளை மலிவு விலையில் பெற ...
தமிழ், ஹிந்தி வீடியோப் படங்கள் வாடகைக்குப் பெற...

★ பால், பழங்கள், உடன் மரக்கறிகள், இறைச்சி மீன் வகைகள் ★ கனடிய உணவுப் பொருட்கள்

★ **Frozen seafood**

**CD, Audio**
மலிவு விற்பனையில்

பழைய, புதிய தமிழ் வீடியோ
படங்கள் வாடகைக்கும்
விற்பனைக்கும்
(ஒரிஜினல் பிரதிகள் மட்டும்)

# ஏ.ஆர்.கே மார்க்கட்

## (416) 421 3429

# ATLANTIC AUTO CLINIC LTD

**1960 LAWRENCE AVE EAST**

## 755 8550

**CALL**
**MIKE or RAJAN**

**Car Certification**
**29.99**

Exhaust,starter,Shocks,Altenater,Clutch
Radio,Transmission,Air Conditon,
General Repair
பல வருட அனுபவம் மிக்கவர்கள்

| | |
|---|---|
| 4WHEEL ALLIGNMENT | 44.99 |
| BREAK SHOES | 29.99 |
| BREAK PADS | 24.99 |
| TUNE UP FROM | 34.99 |
| ENGINE SHAMPOO | 24.99 |
| FILTER 4 CYL | 16.99 |

உங்கள் வாகனங்களை
குறைந்த செலவில் சிறந்த முறையில்
கம்பியூட்டர் இணைப்புகளுடன்
திருத்திக் கொள்வதற்கு நகரில்
ஒரு சிறந்த ஸ்தாபனம்

Fuel Injections, Electronic
and Electric
திருத்துவதில் பல வருடம்
அனுபவம் உள்ளவர்கள்


We use
Quaker
State Oil




# GOOD BYE BALDNESS

**முடி உதிர்பவர்களுக்கு ஓர் நற்செய்தி**

ஒரு சிறு குமிழ்
உங்கள் கேசத்தை வளரச்
செய்கிறது



**பரீட்சித்துப்பாருங்கள்**
## TRY FIRST

**பலர் இச்சிகிச்சை மூலம்
பயனடைந்துள்ளார்கள்**

239 CARLTON STREET
TORONTO, ONTARIO
TEL: 922-0478

# ஊரான ஊரிலே.....

சிவப்பிரகாசம்

பல ஊர்களிலும் இருந்து குடியேறிய தமிழர்கள் இங்கு வசிக்கிறார்கள். பலர் இப்போதும் ஊர் BRAND NAME உடன். சிலருக்கு "யாதும் ஊரே கேளிர்". தாவடி ஆட்களுக்கு சரசாலை என்ற இடமே தெரியாமல் இருக்கும். அரியாலை ஆட்களுக்கு சிறுப்பிட்டி பற்றித் தெரியாமல் இருக்கலாம். திருமணப் பேச்சு எழும் சயமத்தில் தெரிந்தவர்களுக்குள் வரன் அமையாதபோது வேற்று இடங்களில் விவாகப்பிராப்தி ஏற்படத்தானே வேண்டும். அதற்கு ஒரு பாலம் தேவை. அதுதான் கலியாணப் புரோக்கர். ஒரு மனிதனுடைய வருங்காலத்தை நிச்சயிப்பதில் இவர்களுக்கும் பெரும் பங்கு இருப்பது உண்மை. எமது தற்கால சமூக அமைப்பில் இவர்களின் சேவை மிக அவசியம். சேவை என்பது சேர்த்து வைப்பதைச் சொன்னேன். பொருத்தமான சோடியை. தரகுப்பணத்தை மட்டுமல்ல.

"வாங்கோ வாங்கோ என்னைத் தேடி வாறவை எப்போதும் நிறைஞ்ச மனசோடைதான் போவினம் சோதிட விஷயமோ கலியாண விஷயமோ வைத்தியமோ எதுவெண்டாலும் எனக்கு அப்படி ஒரு ராசி" என்று மனதார வரவேற்கிறார் வயதான ஒருவர்.

"ஐயா ஒரு பொருத்தம் பார்க்க வேணும்." பெண்ணைப் பெற்றவர் சாதகத்தை நீட்டுகிறார். ஏற்கனவே மாப்பிளை பகுதியார் பொருத்தம் எனச் சொல்லியிருந்தாலும் இன்னொரு முறை பார்த்தால்தான் பலருக்கு திருப்தி ஏற்படும்.

"தட்சணையை தாங்கோ. சாமிப் படத்துக்கு முன்னால் வைத்துவிட்டு நல்ல காரியத்தை தொடங்குவம்."

தட்டை நீட்டுகிறார். இரண்டு தாள்கள் தட்டில் விழுகிறது. சாமிப் படத்தின் முன்னால் வைத்து கும்பிட்டு விட்டு மீண்டும் தட்டை நீட்டுகிறார்.

"சாமி இன்னும் அனுமதி தரவில்லை. தட்சணையை கவனியுங்கோ" என்கிறார் சோதிட புரோக்கர். மேலும் ஒரு தாள் தட்டில் விழ கன்னத்தில் குழி விழுகிறது. முன்னர் ஒருமுறை "தட்சணை காணாது. சாமி அனுமதி தரவில்லை. இன்னொரு நாள் வந்து பொருத்தம் பாருங்கோ" என வந்த இளைஞரிடம் தெரியாத்தனமாய் சொல்லி செமத்தியாய் வாங்கியதை மறந்து விட்டார்.

சாதங்களைப் பெற்றுக் கொண்ட சோதிடபுரோக்கர் அவர்களிடம் இருந்த பெண்ணின் படத்த கண்டுவிட்டார். "உதுதான் பெம்பிளைன்ரை படமோ. பாப்பம்" படத்தைப் பார்த்த புரோக்கருக்கு மூளையில் "ஏதோ" பளிச்சிட்டது.

இரண்டு சாதகங்களுக்கும் பொருத்தம் பார்த்துவிட்டு "இந்தப் பெடியனைக் கட்டிக் கொடுத்தால் எண்ணி மூண்டு மாசத்திலை மண்டையைப் போட்டிடுவான். நல்ல வேளை என்னிடம் காட்டினது" எனப் பெரிய குண்டொன்றைப் போட்டார். அப்படி ஒரு வயதான சோதிடர் கூறும்போது யார்தான் பயப்படமாட்டார்கள். இந்த சோதிடரிடம் வந்தது நல்லதாப் போச்சு என பெண்ணின் தகப்பன் நினைத்துக் கொண்டார்.

"ஆனால் என்னிடம் திறமான மாப்பிள்ளை ஒருவரின் சாதகம் இருக்கிறது. அந்தச் சாதகம் அச்சொட்டாப் உங்க மகளுக்கு பொருந்துகிறது. பேசி முடிப்பமோ?" என சோதிட புரோக்கர் சொல்ல பெண்ணின் தகப்பன் நன்றிப் பெருக்கோடு தலையசைத்தார்.

"பொடியன் தங்கமான பிள்ளை. சிலோனிலை கனக்கப் படிச்சவன். பிரான்சிலை இருந்து இப்பதான் இங்கை வந்திருக்கிறான். எனக்கு நல்லா தெரிஞ்ச பையன்" என சோதிடர் சொல்ல அது போதுமானதாக பெண்ணின் தந்தைக்குப் பட்டது.

பெண் பார்க்கும் படலமும் முடிந்து திருமண ஒழுங்கு வரை வந்துவிட்டது. மாப்பிள்ளையைப் பற்றி விசாரிக்க மாப்பிள்ளையின் ஊரவர் எவரையும் தெரிந்திருக்காமையால் புரோக்கர் சொன்னது அப்படியே ஏற்றுக் கொள்ளப்பட்டது. எத்தனையோ மதசமூக ஸ்தாபனங்களில் அங்கம் வகிக்கும் புரோக்கர் பொய்யா சொல்லப் போகிறார்? வெல்பெயருக்கு பின் பிரச்சனை வரும் என்று ரெஜிஸ்ரேசன் வேண்டாம் என முடிவெடுக்கப்பட்டது.

தற்செயலாக அந்த மாப்பிள்ளை பற்றிக் கிடைத்த தகவல் பெண்வீட்டாருக்கு அதிர்ச்சியை தந்தது. அந்த மாப்பிள்ளை ஏற்கனவே மனைவிமக்கள் எல்லாம் பிரான்சிலை இருக்கினம். புரோக்கரை கேட்க முயன்றபோது அவர் தொலைபேசி இணைப்பு கிடைக்க வில்லை. அவர் பிசியாம். அந்த கலியாணம் உடனே கைவிடப்பட்டது. முன்பு மூண்டு மாதத்தில் மண்டையைப் போட்டிடுவான் என அந்த சோதிட புரோக்கர் பார்த்த பொருத்தத்தை மீள இன்னொரு சோதிடரிடம் காட்டிய போது "இது திறமான பொருத்தம் அல்லவா. யாரது பொருத்தம் இல்லை யெண்டு சொன்னது" என அதிசயித்தார் அவர்.

இரண்டு பகுதியிடமும் இருந்து வரும் தரகுப்பணமான ஆயிரம் டொலருக்காக ஒரு புரோக்கர் செய்த ஏமாற்று வேலையை பார்த்தீர்களா? தினம்தினம் இப்படி எத்தனையோ! அதே சயம் பல நல்ல பொருத்தமான சோடிகளை இணைக்கும் நல்ல காரியங்களையும் இந்த தரகர்கள் செய்திருப்பது மறுக்க முடியாதது. திருமணம்பேசிக்கொடுப்பதற்கே யாரும் அற்ற எத்தனையோ பேருக்கு இவர்கள் பேருதவி செய்திருக்கிறார்கள். ஆனால் எமது இந்த இயலாமையை தமக்கு சாதகமாக ஆக்கிக் கொள்ள நினைப்பது இவர்களின் பேராசையின் விளைவு.

கலியாணத்துக்கு புரோக்கர்களை அணுகுபவர்களுக்கு சில ஆலோசனைகள்.

1. புரோக்கரே சோதிடராயும் இருந்தால் பொருத்தங்களை புரோக்கர் அல்லாத வேறு சோதிடரிடம் காட்டி ஊர்ஜிதப்படுத்திக் கொள்ளுங்கள்.

2. புரோக்கர் இன்னொரு பெயரை சொல்லி அங்கே பொருத்தம் பார்க்கச் சொன்னால் இருவரும் "சேர்ந்து" இருப்பதை உணர்ந்து அந்தச்

20ம்பக்கம் பார்க்க...

சகல விதமான மீன் வகைகள், இறைச்சி வகைகள், மரக்கறி வகைகள் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள...

**Antony Brothers Peoples Market**
1472 Queen St West
Tel:516 3903


**மாபெரும் மலிவு விற்பனை**

| | | |
|---|---|---|
| சிவப்புப் பச்சை அரிசி | 1கிலோ | 1.49 |
| முந்திரி வத்தல் 200 கி | | .99 |
| சக்கரை 450 கி | | 1.49 |
| பயறு 2 றாத் | | 1.49 |

**Antony Brothers Fashion House**
1484 Queen St West


| | |
|---|---|
| Ladies Clothes (Front open) | $13.99 |
| Maestro Phones (Call Display) | $99.99 |
| 8 pc நிறைகுடம் செட் | $47.99 |

**WE APOLOGIZE TO ALL OF OUR CUSTOMERS FOR THE SHORTAGE OF VITAMOL**




**VITAMOL by DR. ROBERT**

DUE TO THE OVERWHELMING DEMANDS FOR VITAMOL, WE HAVE EXPERIENCED SEVERE SHORTAGES. HENCE, WE APOLOGIZE TO ALL OUR CUSTOMERS. VITAMOL IS A NOURISHING MALTED FOOD DRINK MIX FORMULATED BY DR. ROBERT. IT IS THE ONLY MALTED NOURISHMENT MIX WITH VITAMINS, IRON, CALCIUM AND HONEY. YOU GET MORE IN EACH BOTTLE OF VITAMOL. COMPARE THE QUALITY, SIZE AND PRICE. DON'T SETTLE FOR ANY INFERIOR MALT BEVERAGE MIX. DEMAND VIATMOL, TODAY'S BEST BUY FOR QUALITY AND VALUE. VITAMOL IS RECOMMENDED FOR CHILDREN AND ADULTS.




**DR. ROBERT GLUCOSE**

GLUCOSE IS FOUND IN NATURE IN FRESH FRUITS AND VEGETABLES. DR. ROBERT GLUCOSE IS MADE WITH THE BEST NATURAL INGREDIENTS AND PURIFIED TO ITS HIGHEST QUALITY. DR. ROBERT GLUCOSE IS GOOD FOR QUICK ENERGY. IDEAL FOOD FOR THE BRAIN, RED BLOOD CELLS, LIVER & MUSCLES. EXCELLENT FOR FEEDING CHILDREN AND ADULTS BECAUSE IT IS USED QUICKLY BY THE BODY.




**NERVOGEN NERVE FOOD**

NERVOGEN NERVE FOOD: EXCELLENT FOR HARD WORKING TISSUES OF THE BODY, SUCH AS THE BRAIN, IMMUNE SYSTEM, KIDNEY, LIVER, GUT AND HEART. FOR GOOD MENTAL AGILITY DON'T SETTLE FOR LESS, DEMAND THE BEST.




**CHATAK CHATAK CHATAK**

CHATAK CHATAK MADRAS CURRY POWDER IS THE BEST CURRY POWDER ON THE MARKET TODAY. MADE WITH 475 YEARS EXPERIENCE. IT IS SUPERB AND SO GOOD, NO OTHER CURRY POWDER CAN COMPARE. DEMAND CHATAK CURRY POWDER TO EXPERIENCE MADRAS AS IT 'S BEST. ALSO AVAILABLE CHATAK MEAT SEASONING, FISH SEASONING, TANDOORI CHICKEN MIX, SALTED SEASONING, UNSALTED SEASONING.

SUPPLIES CAN BE OBTAINED IN USA, CANADA, AND THE WEST INDIES FROM UNIVERSAL FOODS & MERCHANDISE CO. (416) 535-3118 TORONTO, CANADA.
FOR SUPER VALUE, LOW WHOLESALE & RETAIL PRICES ON GIFT, TOYS, SRI LANAKAN GROCERIES & ALL THE ABOVE ITEMS CONTACT BUDGET SUPER SAVINGS DISCOUNT 1348 QUEEN ST. WEST (EAST OF LANSDOWNE) PHONE (416) 537-0394

# ஆனந்த பிரசாத்: இருத்தலிற்கான ஆவேச பிரகடனம்.

(திருத்தம் 1.10.93 இல் பிரசுரமான "முதலாளித்துவ கலாசாரப் பரப்பில் தத்துவ உற்பத்தியும்" என்ற கட்டுரையிலே கருத்து மயக்கத்தை ஏற்படுத்தும் பாரிய எழுத்துப் பிழைகள் ஏற்பட்டுவிட்டன. "சந்தேகிக்கலாம்" என்பது "சந்திக்கலாம்" என அமைந்து விட்டதை உதாரணத்துக்குச் சுட்டிக்காட்டுகின்றேன். விசாரணைத் தொடரின் பின்னிணைப்பில் பிரஸ்தாப பிழைகள் மீதான முழுமையான திருத்தமும் சில மொழிபெயர்ப்புகளும் வாசகர்கட்கு வழங்கப்படும்.)

கவிதைகள் உணர்வு சார்ந்தன, ஞாயம் (RAISON) சார்ந்தனவல்ல எனும் வரைவிலக்கணங்களை உலக மொழிகள் பலவற்றிலும் நாம் காணலாம். உணர்வே இலக்கிய உற்பத்தியின் ஊற்று. படைப்பாளியின் மனதில் யதார்த்த நிகழ்வுகள் ஏற்படுத்தும் பாதிப்பிற்கேற்ப இந்த உணர்வின் போக்குகள் மாற்றமடைகின்றன. உணர்வினை அந்நியமாக்கி இலக்கிய உற்பத்தியைச் செய்யென படைப்பாளிகட்கு நாம் ஆலோசனைகளைச் சொல்லுதல் அபத்தம். "ஜெகத்தினை அழித்திடுவேன்" எனப் பாரதி காட்டும் ஆவேச கோலம், ஜெகம் அழிக்கப்படவேண்டும் என்ற அர்த்தம் கொண்டதல்ல, மாறாக தனிமனித இருத்தலின் சுய உரிமை மீதான ஓர் காத்திரமான பிரகடனம். சிவப்புச் சாயம் பூசப்பட்டதே கலை எனும் போலிச் சூத்திரத்தின் உலக இடதுசாரி விமர்சகர்களிடமிருந்து கலையைக் காக்கவேண்டிய ஒரு தேவை இன்றும் எமக்கு உண்டு. கலையின் அரசியல் இயக்கம் வெளிச்சம் போட்டுக் காட்டப்படவேண்டிய ஒன்றல்ல. மறைமுகமான கலையின் அரசியல் இயக்கம் மீதான புரிவின்மையிலிருந்தே போலிவிமர்சகர்கள் ஜனிக்கின்றனர். வர்க்க அழகியல் மீதான குறுகிய பார்வைகள் .. ஓர் உலக விமர்சனக் கலாசாரத்திற்கு என்றும் குந்தகம் விளைவிப்பதாகவேயிருக்கும். இலக்கிய அழகியல் மீது, காத்திரமானதும் துணிச்சலானதுமான விமர்சனத்தை முன்வைத்த படைப்பாளிகளில் ஆல்பேர் காமுயு முதன்மைப்படுத்தப படவேண்டியவர். இவரது "புரட்சிக்குத் துள்ளியெழும் மனிதன்" L'HOMME REVOLTE இலக்கிய விமர்சனத்தின் நாம் கும்பிட்டுக்கொண்டிருக்கும் போலித்தனங்களை உடைத் தெறியும் தர்க்க மூலங்கள் பலவற்றைக் கொண்டுள்ளது. இந்தப் படைப்பு தமிழில் வருதல் ஆரோக்கியமானது என்ற குறிப்பை ஆனந்த பிரசாத் மீது எழுதும் இந்த வேளையில் உங்கள் முன் வைக்கின்றேன்.

★ ★ ★

1992 ஆம் ஆண்டு, கனடாவின் "காலம்" வெளியிட்ட "ஒரு சுயதரிசனம்" என்ற கவிதைத் தொகுப்பிலே, பிரசாத் மீதான குறிப்புகள், பின்வருமாறு அமைகின்றன.

"1975 லிருந்து எழுதி வரும் ஆனந்த பிரசாத், கனடாவிலுள்ள மாண்ட்ரியலில் வசிக்கிறார். வாழ்வு சிதைந்து அகதிகளாகிப்போன இலங்கைத் தமிழர்களின் அவலங்களைச் சொல்லும் கவிதைகள் இவருடையவை. இவர் துவக்க காலத்தில் எழுதிய, பிரசுரமான தனது கவிதைகளை தனது பிறப்பிடமான திரிகோணமலையில் இலங்கை ராணுவச் சுற்றிவளைப்பின் போது எரித்துவிட்டார். மிருதங்க இசையில் மிகுந்த புலமையுள்ள இவர் 'நிருத்தியா' அமைப்பில் மிருதங்க வித்துவானாக இருப்பதோடு மாண்ட்ரியலில் மிருதங்க வகுப்புகள் நடத்திக் கொண்டுள்ளார்."

★ ★ ★

"காலம்" எனும் காலாண்டிதழின் இணையாசிரியராகவும் உள்ளார், "தாயகம்" பத்திரிகையின் புகழ்பெற்ற "ஆடலுடன் பாடலைக் கேட்டு" பகுதியையும் எழுதிவருகின்றார் போன்ற குறிப்புகளையும், "காலம்" தனது குறிப்பில் சேர்த்திருக்கலாம்.

★ ★ ★

படைப்பாளி பற்றிய விமர்சகனின் பார்வை எது என்பதைக்காட்டிலும் படைப்பாளியின் பார்வை எது என்பதை அறிவதில் அதீத ஆர்வம் காட்டுதல் எனது இலக்கிய கலாசாரத்தின் பிரிக்கமுடியாத அமிசங்களில் ஒன்று. எனவே பிரசாத்தைப் பேசவிடுகின்றேன். அவர் என்ன பேசுகின்றார் என்பதைக் கேளுங்கள்.....

"எனக்கு முன்னே தெரிவதெல்லாம் குறுக்கும் நெடுக்குமான ஒளிக் கோடுகள் மாத்திரமே. இவைகளுக்குள் நான் குறிவைத்துப் பயணிப்பது ஒரு பேரொளி. அதனையே திசை பார்த்து எனது மரக்கலத்தை இளைக்க இளைக்க துடுப்புக்களை உந்தி உந்தி வலிக்கும் போது இன்னும் பல பரிமாணங்களில் வாழ்வை நான் தரிசித்தல் கூடும், 'ஒரு பேனையுடனும், நல்லதொரு மிருதங்கத்துடனும் வாழ்ந்து விடலாமென்ற எளிய நம்பிக்கைகளோடு இன்றளவுமிருக்கும் எனக்கு சௌகரியங்களோடு கூடிய வாழ்க்கையை அமைத்துக்கொள்ளும் சாமர்த்திய நுட்பங்கள் எப்படியெல்லாம் நடைமுறை வாழ்வில் பொதிந்துள்ளன என்கிற ரகஸியங்கள் புலம்புலமாய் பெயர்ந்து அலைந்து கொண்டிருக்கும் போதுதான் தெரிகின்றன..."

★ ★ ★

பிரசாத்தின் கவிதைகள் (சில) சற்றே ஆற்றுப் படுத்தப்படாதன என ரஜீன்

20ம் பக்கம் பார்க்க..

## இருத்தலியல் விசாரணைகள்

எஸ். கௌந்தி

# முதலாம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி

## திரு சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம்
## (கந்தசாமி கந்தம்மான் துன்னாலை)



**மலர்வு**
**8.4.1932**

**மறைவு**
**12.11.1992**

எமது அன்புத் தெய்வமே!
எங்கள் குடும்ப குலவிளக்காய்
தலைவனாய் விளங்கி எம்மையெல்லாம் நலமுடன்
வாழ வைத்தீர்கள்.. ஐயா
நினைக்கின்றோம் ஐயா உங்கள் நற்பணிகள் தன்னை
மதிக்கின்றோம் ஐயா உங்கள் பண்பைத் தினம்
துதிக்கின்றோம் உங்கள் பாதம்
வடிக்கின்றோம் கண்ணீர் நாமும்
முடித்திலமோ எம் கடனை என்று ஐயா
தவிக்கின்றோம் உம் பிரிவால் நாங்கள்
விதியோ வருத்தமோ என விளங்கிடாமல்
கதி கலங்க எமைத் துயரிலாழ்த்தி நாம்
எதிர்பாரா வேளை இறைபதம் எய்தி
ஓராண்டு சென்றாலும் ஆறாது எம் துயரம்

உங்கள் ஆத்மா சாந்திக்காக பிரார்த்தித்து
உங்கள் நினைவுடன் வாழும்
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
தகவல்: ஆனந்தன் 416 724 0648

---

# மரண அறிவித்தல்

## திரு கணேயா கிருபாநிதி

**(உரிமையாளர் மகாவலி ஸ்டோர்ஸ்**
**96 பழைய சோனகத் தெரு,கொழும்பு 12.)**



**மலர்வு**
**22.9.1958**

**உதிர்வு**
**25.10.1993**

புங்குடுதீவு 2ம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் கொழும்பை வசிப்பிடமாக கொண்டவரும் மகாவலி ஸ்டோர்ஸ் உரிமையாளருமாகிய திரு. கணேயா கிருபாநிதி அவர்கள் 25.10.93 திங்கட்கிழமை சென்னையில் காலமாகிவிட்டார்.

இவர் காலம் சென்ற பிரபல வர்த்தகர் திரு கணேயா மனோன்மணி தம்பதிகளின் அன்பு மகனும் காலம் சென்ற பாலச்சந்திரன் அருளம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் புனிதவதி, காலம் சென்ற சிவகுமாரி ஆகியோரின் அன்புக் கணவரும், அஸ்வினி, ஷாமினி, கிருபா சங்கர் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலம் சென்ற கிருபானந்தன், கிருபாமணி கிருபாராணி, கிருபாராசா, கிருபாமலர் கிருபாநந்தினி, கிருபாரஞ்சினி, கிருபாரமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சுதந்திராதேவி, வைத்திலிங்கம், புலேந்திரன், மல்லிகாதேவி, காலஞ்சென்ற சண்முகலிங்கம், வல்லவசீலன், ரத்தினரூபன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் 28.10.93 அன்று வியாழக்கிழமை கனத்த மயானத்தில் (கொழும்பில்) நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு
மகாவலி ஸ்டோர்ஸ்
96 பழைய சோனகத் தெரு, கொழும்பு 12
தொலைபேசி எண் :435019

ரொறன்டோ
530 0751 கிருபா
532 6740 வைத்திலிங்கம்

## மௌனத்தில் வாழும் உயிர்

வழமையான ராத்திரியிலும்
இருளாக
கும்மென்ற மழையிருட்டு
வழமையான போர்ச்சத்தத்திலும்
கடுமையான
வானதிரும் இடிமுழக்கம்
வழமையான நிசப்தத்தை
அடியோடு குழப்ப
சோவென அடைமழை

இப்படி ஒரு பொழுது
வந்து வாய்க்க வேண்டும்
எனக்கு!

கடும் இருளிலும்
போர் இரைச்சலிலும்
நிசப்தமான
ராத்திரியிலும் கூட
நீட்டி வைக்கப்பட்டிருக்கும்
அவர்கள் விழிகளையும்
தீட்டி வைக்கப்பட்டிருக்கும்
அவர்கள் செவிகளையும்
ஏய்த்து விடும் அப்பொழுது
தாராளமாய் போதும் எனக்கு!

காணும் அநீதிகளை
கண்டித்திட
நேரும் கொடுமைகட்கு
நியாயம் கேட்டிட
முடியாமல் போனது
உன் உயிரின் பெறுமதி உணர்ந்ததாலே!

மௌனியாக்கப்பட்ட போதிலும்
மனதிலும் சேகரிக்கப்பட்ட சினம்
துடியாய் துடிக்கிறது

பார்க்க
பேச
எழுத
கேட்க
சகலத்துக்குமான(க)
எனக்கான சுதந்திரத்தை
எனது மனதுள்ளேயே
சிறை வைத்த அவர்களை
சினம் ஆறும் வரை
திட்டித் தீர்க்க
அவ் ஒரே பொழுது
போதும் எனக்கு!

பேய் இருளில்
பேரிடியுடன்
பெய்யும் கடும் மழையில்
வான் நோக்கி
அவர்களைத் திட்டித் தீர்க்க
நடுக்கடலில் நின்று!

ஒரு மின்னல் வருமுன்னம்

அவ்வளவு தான் முடியும் என்னால்!

என்னுயிரின் மேல்
எனக்கு அளவில்லா ஆசை!

**அருண்**

(பி.கு: தப்பி வந்த கடிதத்தின் சாரம்)

## அகற்றப்பட்டவன்

நாலைந்து பிரேதங்களால்
எல்லையிடப்பட்ட வளவுக்குள்
நானும் வாழ்ந்துவிட்டுப் போயிருக்கலாம்.

எங்கும் வதிவதற்கு
அனுமதி உண்டு என்பதும்
மறுக்கப்படு மென்பதும்
என் புகலிடப்புரிதலானது கொடுமை

புகலிடம்
நலமெடுக்கக் கட்டப்பட்டு
விழுத்திவிடப்பட்ட மாட்டின்
தரையைக் காட்டுகிறது.

ஏன் இந்த நலமெடுக்கக் கட்டப்பட்ட மாடு
என் நினைவுகளில் இருந்து நீங்காதிருக்கிறது?
வரும்போது கடைசியாக நினைத்தது என்ன?
நாங்கள் எல்லாவற்றையும் நினைத்தோம் என்பதும்
குழப்பத்திற்குமேல் குழப்பமும்
சுமைக்கு மேல் சுமையுமாக
திண்ணையைக் கடந்தோம் என்பதும்

தெளிவான வரையறுப்போடு வரவில்லை என்பதும்
நினைத்தவைகள் மங்கலான நினைவுகளாகிக் கூட
இல்லாது மறந்து போயிற்று என்பதும்
இப்போது தெரிகிறது கொடுமை
போய்ச் சேர்ந்தால் காணும் என
நினைத்தது நினைவிருக்கிறது
ஈன இரக்கமின்றி எவ்வளவு கொடுமையாக
விரட்டப்பட்டேன்

**சுகன்**

## மடமை

நீ ஊர்சென்று வந்தாயாமே!
ஆமாம்!!
உனக்குத் திருமணம் முடிந்து விட்டதாமே
உண்மைதான்!!
சீதனம் எவ்வளவு வாங்கினாய்...?
சீதனம் வாங்குதல் கொடுமை!
இதனால் வாங்கவில்லை!!
அப்படியானால் காதல் திருமணமா....?!
இல்லை பெற்றோரால் ஏற்பாடு செய்யப்பட்டது!!
நம்ப மாட்டேன்!
சீதனம் இல்லையேல் காதல்தான்!

சீதனத்திற்காகவே திருமணம் செய்யும்
சீர் கெட்ட இவ்வுலகில் மனிதப்
பண்புக்கு மதிப்பேதும் இல்லையாம்!
திருமணச் சந்தையில் விலைமகனாய்ப்
போகாது பணமின்றி மணம் முடிந்தால்
நான் வாழத் தெரியாதவனாம்!!
வேடிக்கையாயில்லை.....!!

**சாந்தன் மார்க்கண்டு**

### இவ்வாரச் சிந்தனைக்கு

வெற்றியும் தோல்வியும் விளையாட்டியல்பு
ஒற்றுமைஉறவே உண்மைப்பயணம்

**கவிஞர் வி.கந்தவனம்**

# அயர்லாந்தில் தொடரும் வன்செயல்கள்

ஐ.ஆர்.ஏ என்றழைக்கப்படும் அயர்லாந்து குடியரசு இராணுவம் சமீபத்தில் நடத்திய வெடிகுண்டுத தாக்குதல் அதிர்வலைகளை ஐரோப்பாவில் பரவச்செய்திருக்கிறது. அக்ரோபர் மாதம் 23ம் திகதி பெல்ஃபாஸ்ற் நகரில் மக்கள் நடமாட்டம் மிகுந்த மையப்பகுதியில் மீன் கடையொன்றில் சக்தி வாய்ந்த வெடிகுண்டை ஐ.ஆர். ஏயினர் வைத்தனர். இந்தக் குண்டு வெடிப்பினுல் பொதுமக்கள் 10 பேர் கொல்லப் பட்டதுடன் 59 பேர் காயமடைந்தனர் கொல்லப பட்டவர்களில் இருவர் குழந்தைகள் மற்றும் நால்வர் பெண்கள், நால்வர் ஆண்கள். குண்டுவெடிப்பினுல் இப்பகுதி மக்கள் பெரும் பீதியடைந்த நிலையிலேயே இருக்கிருர்கள் இந்தக் குண்டு வெடிப்பின் பின்னர் தாமும் மரணத்துக்கு அண்மையில் இருப்பது போல உணர்வதாக இப்பகுதியில் வசிப்பவர் ஒருவர் கூறியுள்ளது மக்கள் எந்த அளவிற்கு பீதியடைந்துள்ளார்கள் எனக் காட்டுகிறது.

இக்குண்டுவெடிப்பைத் தொடர்ந்து சனிக்கிழமை இரவு ஐ.ஆர். ஏ. விடுத்த அறிக்கையில் நடந்த சம்பவத்திற்கு தாமே பொறுப்பு என்று குறிப்பிட்டதுடன் பொதுமக்கள் கொல்லப்பட்டமைக்காக மன்னிப்பும் கோரியுள்ளனர், பொது மக்களுக்கு பாதகம் ஏற்படுத்துவது தமது நோக்கமல்ல என்றும் U.F.F என்று அழைக்கப்படும் உல்ஸ்த்தார் விடுதலைப் போராளிகள் என்ற அமைப்பினர் மீது தாக்குதல் நடத்துவதே தமது நோக்கம் என்றும் குண்டு வைக்கப்பட்ட மீன்கடையில் U.F.F இனர் இரகசியக் கூட்டம் ஒன்றை நடத்த இருந்தனர் எனவும் அந்த மீன்கடை U.F.F இனர் சந்திக்கும் மையமாக இருந்ததாகவும் அதனுலேயே தாம் வெடிகுண்டை அங்கு வைத்ததாக தமது அறிக்கையில் குறிப்பிட்ட ஐ.ஆர்.ஏ வெடிகுண்டு வெடிக்கும் நேர அமைப்பில் ஏற்பட்ட தொழில் நுட்ப கோளாற்றினுலேய இந்த துயரமான தவறு நிகழ்ந்தது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு ஏற்ற வகையில் குண்டுவெடிப்பில கொல்லப்பட்டவர்களில் ஒருவர் ஐ.ஆர். ஏயின் உறுப்பினர். அது மட்டுமல்ல பல ஐ.ஆர்.ஏ உறுப்பினர்கள் காயமடைந்தும் உள்ளனர். ஆனுல் தமது அமைப்பைச் சேர்ந்த எவருமே இந்தக் குண்டு வெடிப்பில் கொல்லப்படவில்லை என புரட்டஸ்தாந்து தீவிரவாத அமைப்பான UFF கூறியுள்ளது. அது மட்டுமல்ல இந்தக் குண்டு வெடிப்புக்கான பதிலடியை தாம் விரைவில் கொடுப்போமென்று கூறியிருக்கும் UFF இதற்காக கத்தோலிக்க சமூகம் கொடுக்க வேண்டிய விலை மிக மிக அதிகமானது எனவும் குறிப்பிட்டுள்ளது.

கடந்த பல வருடங்களாக வட அயர்லாந்தில் தொடர்ந்து நடந்துவரும் வன்செயல்களில் மிகமோசமான ஒன்ருக இந்தக் குண்டுவெடிப்பு வர்ணிக்கப் படுகிறது. அதுமட்டுமல்ல இக்குண்டு வெடிப்புக்கு எதிரான கண்டனங்களும் பல தரப்புகளிலுமிருந்தும் எழுந்துள்ளது. அயர்லாந்து முழுவதற்குமான கத்தோலிக்க திருச்சபைத் தலைவர் டாக்டர் கஹால் டாலி 'கடந்த 25 வருடங்களில் நடந்த வன்செயல்களில் இது மோசமானது' எனக் கூறியதுடன் 'இச்சம்பவம் சமாதானம் தொடர்பான ஐ.ஆர்.ஏ யின் முயற்சிகளில் பலத்த சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது' எனக் கூறியுள்ளார் 'இது ஒரு இரத்தத்தை உறைய வைக்கும் படுகொலை' என பிரித்தானியப் பிரதமர் ஜோன் மேஜர் கண்டிக்க பிரதம எதிர்க் கட்சியான தொழிற்கட்சி "இத்தகைய பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்த மேலதிக படைகளை உஸ்தாருக்கு அரசு அனுப்ப வேண்டும்" எனக் கோரியுள்ளது.

கண்டனம் பலதரப்பிலிருந்தும் கிளர்ந்துள்ளது. ஐ.ஆர்.ஏயின் அரசியல் பிரிவான சின்ஃபெய்ன் அமைப்பின் தலைவரான ஜெரி அடம்ஸ் மிகுந்த கடுமையான வார்த்தைகளால் இத்தாக்குதலை சாடியுள்ளதுடன் "இத்தாக்குதல் தவறானது, மன்னிக்கப்பட முடியாதது" எனவும் கூறியுள்ளார்.

இந்தக் குண்டு வெடிப்பு பீதியையும் பதட்ட நிலையையும் கிளப்பியதுடன் மாத்திரமல்ல அயர்லாந்தில் அமைதியை ஏற்படுத்துவது தொடர்பான அரசியல் முயற்சிகளுக்கும் முட்டுக் கட்டையைப் போட்டுள்ளது. சின்ஃபெய்னுக்கும் சமூக ஜனநாயக தொழில்கட்சிக்கும் (SDLP) நடந்து வந்த பேச்சுவார்த்தைகள் தொடருமா என்ற கேள்விக்குறி எழுந்துள்ளது.

SDLP தலைவரான ஜோன் ஹியூமிற்கும் சின்ஃபெய்ன் தலைவர் ஜெரி அடம்ஸ்க்குமிடையில் நடந்து வந்த பேச்சுவார்த்தை சிக்கலான அரசியல் நிலையில் வரவேற்கத்தகுந்த நனவாக இருந்தது. இந்த அரசியல் நகர்வுக்கு அயர்லாந்துக் குடியரசில் பெருத்த ஆதரவு இருந்தது. வட அயர்லாந்தில் இது எதிர்க்கப்பட்டதன் காரணம் பெரும்பான்மையினரான புரட்டஸ்தாந்து சமூகத்தின் தலைவர்கள் மேற்படி நகர்வு பிரித்தானிய ஆளுமையை முடிவுக்கு கொண்டு வந்து விடுமே எனப் பயந்தமையே ஆகும்.

ஐ.ஆர்.ஏயின் நோக்கமும் அதுவே. ஒன்றிணைந்த அயர்லாந்து ஏற்படுவதே ஐ.ஆர்.ஏயினதும் சின்ஃபெய்னதும் நோக்கம். குண்டு வெடிப்பு ஏற்படுத்திய சிக்கலான நிலையை மாற்றும் முயற்சிகளும் மேற்கொள்ளப் படுகின்றன. உதாரணமாக பேச்சுவார்த்தைகளை முன்னின்று

## சுழலும் உலகம்



தி. உமாகாந்தன்

நடத்திய SDLP தலைவர் ஜோன்ஹியூமே பேச்சுவார்த்தைகளை தாம் தொடரவே விரும்புவதாகக் கூறுகிறார். "இதனால் நான் என்ன விபரீதங்களை எதிர்கொள்வேன் என்பது எனக்குத் தெரியும். நானும் ஒரு மனிதப்பிறவி. நடந்த சம்பவத்தால் நானும் நொருங்கிப் போயுள்ளேன். ஆனால் இத்தகை கொடுமைகளை முடிவுக்குத் கொண்டுவர நான் எனது அனைத்து சக்திகைளையும் பிரயோகிப்பேன்" எனவும் ஹியூமே கூறுகிருர்.

ஆனால் SDLP சின்ஃபெய்னுடன் பேச்சுவார்த்தைகளைத் தொடரப்போவதை பல தொழிற்சங்கங்கள் கண்டித்துள்ளன. பெல்ஃபாஸ்ற்றினுள்ள தொழிற்சங்கத் தலைவர்கள் தாம் கட்சியுடன் ஒத்துழைக்கப் போவதில்லை என்றும் அறிவித்துள்ளனர். இத்தகைய வன்செயல்கள் அமைதியை நோக்கிய முயற்சிகளுக்கு பெரும் இடையூறுகளைக் கொடுப்பது மாத்திரமல்ல ஐ.ஆர்.ஏ ஒரு பயங்கரவாத இயக்கம், அதனால் அவர்களுடன் பேச்சுவார்த்தைக்கே இடமில்லை என்ற பிரித்தானியப் பிரதமர் ஜோன் மேஜரின் கருத்து பலமடையவும் வாய்ப்பைக் கொடுக்கிறது.

"ஒரு அரசியல் தீர்வை வெடிக்குண்டுகளின் மூலம் யாருமே அடைய முடியாது" எனக்கூறும் பிரித்தானிய பிரதமர் ஜோன் மேஜர் இத்தகைய முயற்சிகளை அனுமதிக்கவும் கூடாது என்றும் கூறியுள்ளார். அது மட்டுமல்ல வட அயர்லாந்தை தாங்கள் ஆக்கிரமித்திருப்பதற்கு அங்கு எந்தவிதமான அரசியல் பொருளாதாரக் காரணங்களுமில்லை என்று பிரித்தானிய அரசு கூறியுள்ளதுடன் அங்கிருக்கும் மோசமான பொருளாதார சூழ்நிலைகளால் பெரும்பான்மை மக்கள் விரும்பின் தாம் அங்கிருந்து விலகவே விரும்புவதாகவும் கூறுகின்றது.

பல ஆண்டுகளாக தொடர்ந்து வருகின்ற வன்முறைகளால் சலிப்பும் விரக்தியுமடைந்த இரு தரப்பு மக்களும் அமைதித் தீர்வை நோக்கித் தள்ளப்படும்போது அதுவும் குறிப்பாக ஐ.ஆர்.ஏ யின் அரசியல் பிரிவான சின்ஃபெய்ன் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பங்கு கொண்டு தனது அரசியல் கோரிக்கைகளை முன்வைப்பதன் மூலம் ஐ.ஆர்.ஏயின் வன்செயல்களை வலுவிழக்கச் செய்வதற்கான ஒரு வாய்ப்பு இந்தக் குண்டுவெடிப்பினால் சிதறடிக்கப் பட்டிருக்கிறது.

"இத்தகைய வன்செயல்கள் மூலம் ஐ. ஆர்.ஏ. இந்த உலகில் எதைச் சாதிக்க விரும்புகிறது. அல்லது இதன் மூலம் என்ன நம்பிக்கையை மக்களிடன் ஐ. ஆர்.ஏ யினால் கட்டியெழுப்ப முடியும்" என்ற ஜோன் மேஜரின் கேள்விகளுக்கான பதிலை ஐ.ஆர்.ஏ வெடிகுண்டுகளின் மூலமே சொல்ல விரும்பினால் வன்முறைகள் தொடர்கதையாகும். இரத்தச் சிதறலும், உயிர்ப்பலியும் பீதியும் தொடரும். மாறாக சின்ஃபெய்ன் அரசியல் அரங்கிற்கு நகர்த்தப்பட்டு பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தால் அதன் மூலம் ஓர் அமைதித் தீர்வு அடைவதற்கான வாய்ப்புகள் ஏற்படும். அதனை எதிர் வரும் நாட்கள் நிட்சயிக்கும்.

## பென் சூரியனின் 'குட்டிக்'கதைகள்

# ஊருவிட்டு ஊரு வந்து பொண்ணுக்கு அலைஞ்சாலே..



அரும்பும் பருவத்தில், அதாவது மீசை அரும்பும் பருவத்தில் பாஸ்போட்டோடும் பேர்லின் டிக்கட்டோடும் வெளிநாடு வந்தவன் தேவன். அந்தப் பருவத்தில் பக்கத்து வீட்டு பார்வதியின் மகள் ரோகிணி மீது தேவனுக்கு காதல்.. ரோகிணி அப்போது ஆரும் வகுப்பு.. அவனது ஒரு தலைக்காதல் நிறைவேறும் முன் பேர்லினுக்கு கட்டி அனுப்பப்பட்டான். ஐரோப்பாவில் 'சுற்றுப்பயணம்' முடிந்து கனடா வந்த தேவன் இதுவரையும் எந்த தமிழ் பெண்ணையும் ஏறெடுத்துப் பார்த்ததில்லை. காரணம் கோப்பை கழுவும் வேலை அவனுக்கு இடம் கொடுத்ததில்லை. இதனால் அவனது கற்பு கவனமாக பாதுகாக்கப்பட்டு வந்தது.

இங்குள்ள பெட்டைகளும் ஸ்டேட்டஸ் பார்த்ததும் தேவனுக்கு தன் எதிர்காலம் சூனியமாகி விடுமோ என்ற பயம் ஏற்பட்டது. சில தரகர்மாரிடம் சொல்லிப் பார்த்தும் பயனில்லை. தேவனும் தனது 'கன்னிமையைக்' கழிக்க வழி இல்லாமல் கலங்கிப் போனான். காலமெல்லாம் தான் வாழாவெட்டியாக கன்னியாகவே காலம் கழிக்கப் போவதை நினைத்து தேவனுக்குப் பயம் வந்தது.

ஒருநாள் தனது கன்னிமையை எப்படியாவது இன்று கழிக்காமல் வீடு திரும்புவதில்லை என்று வீரசபதம் எடுத்துக் கொண்ட தேவன், ஜார்விஸ் வீதிப் பக்கமாக அலைந்தான். அங்கங்கே பெண்கள் நன்றாக மேனி மினுக்கிக் கொண்டு விற்பனைக்காக அலைந்து கொண்டிருந்தனர். பெண்களை அப்படி உடையில் நேரடியாய் காண தேவனுக்கு மெய் சிலிர்த்தது. இண்டைக்கு எப்படியாவது சிதம்பர ரகசியம்காண வேண்டும் என்ற முடிவில் எய்ட்ஸும் மண்ணுங்கட்டியும் என்று முணுமுணுத்துக் கொண்டிருந்த தேவனைப் பார்த்து ஒரு வெள்ளைப் பெண் 'ஹாய்.. உனக்கு பெண் சினேகிதி வேண்டுமா?' என்று கண்ணடித்தாள். 'ஹௌ மச்?' என்று தனக்கு தெரிந்த ஆங்கிலத்தில் தேவன் கேட்க.. அந்தப் பெண் தன் அடையாள அட்டையைக் காட்டி 'நான் ஒரு பொலிஸ். வந்து வானில் ஏறு' என்றாள். தேவனுக்கு ஐந்தும் கெட்டு அறிவும் கெட்டுப் போனது. தலைவிதியை நொந்து கொண்டு ஏறியவனுக்கு உள்ளே ஆறுதல் காத்திருந்தது.

உள்ளே... வேறு தமிழ் வாலிபர்கள் எட்டுப் பேர் தலையைக் குனிந்தபடி இருந்திருந்தார்கள்.

இருத்தலியல்..

குமார் மீது நான் எழுதியபோது குறிப்பிட்டேன் எனில், இவர் தனது ஆவேசத்தை ஆற்றுப்படுத்தவேண்டும் என்ற ஓர் மறைமுக ஆலோசனை என்னிடமுண்டு என்பதல்ல. எமது புகலிடக் கவிதா இயக்கத்துள் இவரது ஆவேசங்கள் மனித இருத்தல் வாதிப்பின் சாயம் பூசாத வெளிப்பாடுகளாகத் நம்மை இனம் காட்டுகின்றன. மரபும் எமது சொத்தே. அதனை அழித்தல் எமது இலக்கியத்துக்கு ஆரோக்கியமானதல்ல என்ற தெளிவோடு இவரது பேனாவின் இயக்கம் தொடர்வது பாராட்டப் படவேண்டியது. புதுக்கவிதைக்கு ஒரு "போர்முலா" தேடுதல் அப்பழுக்கற்ற வியாதியே. சங்க காலப் புலவர்கள் எனக்குப் புதுப் புலவர்களாகப்படின், என்னைப் பழமை வாதியெனச் சொல்லலாமா? கைலாசபதியினதும், நா.வானமாமலையினதும் "புதுச் சிந்தனைகளினது" ஆதார சுருதிகளாக இருப்போர் சங்காலப்புலவர்களே என்பது கூட எமது "முற்போக்கர் களுக்கு" இன்னமும் விளங்கவில்லையே என்பதையிட்டு வேதனைப்படலாம். தமிழின் சமகால இலக்கிய இயக்கத்துள் "புதுக்கவிதை"கள் எனப்படுவன ஓர் தனித்த அடையாளத்தை நிர்மாணம் செய்வதிலே வெற்றி கண்டபோதும் மரபுக் கவிதைகளும் சமகால யதார்த்தத்தினை நிகழ்வாக்க உதவிக்கொண்டேயுள்ளன என்பதற்கு ஈழமோகம் (சரிநிகர்,கொழும்புப் பத்திரிகையின் முதல் பக்கத்தில் 4 வரிகளில் எழுதுபவர்), கவிஞர் வி. கந்தவனம் (தாயகத்தில் இரண்டு வரிகளில் எழுதுபவர்), இனவாதக் கவிஞர்களான கி.முருகையன், காசி ஆனந்தன் புதுவை இரத்தினதுரை, மற்றும் புகலிடத்தின் இன்னொரு மனிதாபிமானக் கவிஞரான பரதேசிப் பாவாணர் போன்றோரை உதாரணமாக எடுக்கும்போது பிரசாத்தும் மறக்கப்படக் கூடாதவர். மரபுக்கவிதையையும் புதுக்கவிதையையும் தமது இலக்கியத் திற்காக வரித்துக்கொள்வோர் புகலிடத்தில் மிகக்குறைவே. அநேகமானோர் புதுக்கவிதைகளையே எழுதுகின்றனர். இந்தப் புதுக்கவிதைத் தேர்வின் மீதான பலரது நாட்டம் என்பதே, ஓர் மரபு நிராகரிப்பு என்றில்லாமல், மரபு தெரியாமை என்பதலிருந்தே தோன்றுகின்றது. ("துரத்தப்பட்ட அகதிக் குழுக்களின் உவாதைகள்" என்ற பொதுத்தலைப்பின் கீழ்.. இது தொடர்பாக விரிவாகப் பார்க்கப்படும்) பிரசாத்தின் கவிதைகளினது பொதுப்பண்பாக ஓர் தவிர்க்க முடியாத மரபின்ஆளுமை இருப்பதை அவதானிக்க முடிகின்றது. மொழிசார் கலாசாரப் பெறுமானங் களின் சிதைவினைத் தடுத்து நிறுத்த பிரசாத்தின் கவிதா இயக்கம் கைகொடுக்கின்றது.

★ ★ ★

"பருவகாலங்கள் மாறும்
வாழ்வின் பருவங்கள்
வலுவிழந்து போகும்
எப்போதாகிலும்
இரத்த புஷ்டியோடு
மனித நாதத்தை
மீட்டிக் கொண்டிருப்பேன்."
(அகதி)

* * *

"தோண்டிக் கொண்டே
யிருந்தார்கள்
புதையலுக்காகவல்ல
ஒரு லட்சம் பிணங்களைப்
போட்டுப் புதைப்பதற்காக..."
(புதையல்)

* * *

"துப்பாக்கிக்குள்
விரல்களைக் கோர்த்தபடி
குழந்தையைக்
கொன்று தள்ளும்
குரூரம் எனக்குள்
எப்படியடீ வந்தது?" (கண் கெட்டபிறகு)

மேலே கோடிட்டுக் காட்டப்பட்டவை, பிரசாத்தின் புதுக்கவிதைகளே. "தாயகத்"திலே இவர் அவ்வப்போது எழுதிவரும் "புதுக்கவிதைத்தவைகள்" கவனத்துக்கு எடுக்கப்படவேண்டியவை. விசாரணைத் தொடரின் எல்லை, கவிஞர்கள் மீதான மதிப்பீட்டின் விரிவிற்கு ஏற்றதல்ல. பிரசாத் கவிதைகளினது கருத்து ரீதியான பொதுப்பண்பு, அகதி வாழ்வின் அவலத்தை நிர்வாணமாகக் காட்டி இழந்து போன தேசம், புவியல் ரீதியான அந்நியமாதல் ஓர் தனிமனிதன் மீது போடும் சுமைகளைச் சிறப்பாகப் படம் பிடிக்கின்றதை அடிப்படையாகக் கொண்டது. கடந்தவாரம் அறிமுகத்துக்கு எடுக்கப்பட்ட சுகனது அண்மைக்காலக் கவிதைகளில் இந்தப் பிரிவாற்றுமை விரவிக் காணப்படுகின்றது. பிரசாத்தின் கவிதைகள் கருத்து ரீதியாகவும், வடிவியல் ரீதியாகவும் மீள் மதிப்பீட்டுக்கு உள்ளாக்கப்படுதல் ஆரோக்கியமானது என்ற குறிப்புடன் இவரது "வெளிச்சம்" கவிதையின் கடைசி வரிகளை கீழே தருகின்றேன்.

"நண்பனே, வா!
நேசத்தைப் பகிர்ந்து
கொள்வோம்
தேடுவோம், தேடுவோம்,
இன்று நானும், நீயும்
பார்ப்பதுபோல் இவ்வுலகம்
இல்லை இதை விடவும்
பிரகாசமானதாய்.....
அழகாய், பெரிதாய்....
அங்கும் மனிதர்கள்தான்!.."

அகதி வாழ்வு கொடியதுதான் இதற்குள்ளும் நம்பிக்கை தளராமல் மனித நேசத்துக்காக ஓங்கிக் குரல் கொடுக்கும் பிரசாத்தின் இலக்கிய இயக்கம்... ஆடுவதையும் பாடுவதையும் நான் யாசிக்கின்றேன்.

ஊரான ஊரில..

சோதிடரிடம் செல்லாதீர்கள்.

3. மாப்பிள்ளை பற்றியோ பொம்பிளை பற்றியோ புரோக்கர் கொடுக்கும் சான்றிதழ் அர்த்தமில்லாதது. அதைப் பொருட்படுத்தாதீர்கள்.

4. நீங்கள் கேட்கும் ஏதாவதுக்கு புரோக்கர் எரிந்து விழுந்தால் எங்கேயோ பொய் ஒட்டிக் கொண்டுள்ளது என சந்தேகியுங்கள்.

5. எந்தவொரு முடிவையும் புரோக்கரின் சொற்படி அல்லாமல் சொந்த விருப்பப்படி செய்யுங்கள்.(பெண் பார்க்கும் படலம், முகூர்த்தம் திருமணப்பதிவு செய்வது. விசாரணை படலம்)

(மேலே கூறப்பட்ட சம்பவம் முலாம் பூசப்பட்ட உண்மை)

# பாலையிலும் பயிர் வளர்ப்பர்

தொடர்ச்சி..

**சி.சிவசேகரம்**

முன்னுரிற் செக்கோஸ்லாவாக்கியாவின் சோவியத் சார்பு அரசின் ஒடுக்குமுறைக்குப் பாத்திரமானவரும் பின்பு நாட்டின் ஜனாதிபதியானவருமான வஸ்லாவ் ஹவெலின் சுயசரிதைப் பாங்கான (ஆனால் சுயசரிதையல்லாத) நாடகங்கள் இரண்டு லண்டனிற் புதிதாகத் தயாரிக்கப்பட்டன: ஆங்கிலத்தில் BBC தொலைக்காட்சியிற் காட்டப்பட்ட இந்த இரு நாடகங்களும் இலங்கைச் சூழலை வைத்தும் பிரத்தியேகக் காட்சி, தரிசனம் என்ற தலைப்புக்களிற் தழுவப்பட்டன. ஒடுக்குமுறையின் கீழ்ப் பிழைக்கத் தெரிந்தவர்கட்கும். பணிய மறுப்பவர்கட்கும் உள்ள முரண்பாட்டின் இரண்டு அம்சங்களூடாக, ஒடுக்கப்படுபவர் பணிய மறுத்தல் மூலம் ஒடுக்கலின் கருவிகளாகச் செயற்படு கிறவர்களைப் பரிதாபகரமானவர்களாகக் காட்ட முடிவதைச் சித்தரித்த இந்த நாடகங்கள் தழுவல்கள் என்று அறிவிக்கப்பட்டதைக் கண்டவர்கள் தழுவல்கள் பற்றிய தமது மாமூலான முறைப்பாட்டை முன் வைத்தனர். இதே நாடகங்கள் ஒரு மேடையேற்றத்தின் போது, வேண்டுமென்றே தழுவல்கள் என்று சொல்லப்படாத நிலையில், எவருமே அவை அயலினின்று பெற்றவை என ஊகிக்கவில்லை. (அகச் சார்பான விமர்சனம் என்றால் என்னவென்று தெரியாதவர்கட்கு இது ஒரு சின்ன உதாரணம்)

வங்கமொழி மூலத்தையுடைய பிரச்சனைக்குரிய நாடகமான பாரத தர்மம் மேடையேறிய போது பி.பி.ஸி மஹாபாரதம் (பி.ஆர் சோப்ராவின் மஸாலா) தொடரைக் காட்டி வந்தது. வியாக்கியானம் தொடர்பான சில ஆட்சேபனைகள் இருந்த போதும் சாதி ஒடுக்கலை இன்னொரு கோணத்திலிருந்து சித்தரித்த இந்த நாடகத்தின் சிறப்பான கதையமைப்பும் தயாரிப்பும் மிகுந்த வரவேற்பைப் பெற்றன.

இவ்வளவுக்கும், லண்டனில் அகதிகளாக வந்த தமிழ் இளைஞர்கள் மத்தியில் நாடகம் பார்க்கும் ஆர்வம் உள்ள அளவுக்கு லண்டனில் நிலை பெற்ற தமிழ்ச் சமுதாயத்தின் மத்தியில் நாடகம் பற்றிய அக்கறை இல்லை. அவர்களிற் கலையுணர்வுள்ளவர்களைக் கவராமல் லண்டனில் ஒரு நாடக இயக்கத்தையும் கட்டியெழுப்புவது மிகவும் சிரமமான காரியம் இந்த உண்மைக்கு அவைக்காற்றுக் கலைக்கழகம் கடந்து இரண்டு மூன்று ஆண்டுகளாக முகங் கொடுக்கிறது.

லண்டன் தமிழ்ப் பாடசாலைகளில் (சனிக்கிழமைகளிற் தமிழ் வகுப்புக்களை நடத்தும் அமைப்புக்கள்) கல்வி பயிலும் குழந்தைகளை வைத்துக் தயாரிக்கப்பட்ட இரண்டு இசை நாடகங்கள் (சி. மௌனகுருவின் தப்பி வந்த தாடி ஆடு, வேடரை உச்சிய வெள்ளைப் புறுக்கள்) இரண்டு முக்கியமான வெற்றிகளைப் பெற்றன. நாடகங்களின் வெற்றி சிறுவர் மத்தியிற் தமிழிற் பேசி நடிக்கும் ஆர்வத்தை வளர்த்துள்ளது. பெற்றோர் மத்தியிற் தரமான நாடகம் பற்றிய அக்கறை சிறிது ஏற்பட்டுள்ளது இது எதிர் காலத்தின் லண்டன் தமிழ் நாடக இயக்கத்திற்கு ஒரு பரவலான தளமாக அமையக் கூடும்.

தாஸீஸியஸின் அணுகுமுறை வித்தியாசமாக இருந்தது. லண்டனில் நாடகத் துறையைப் பொறுத்த வரை, தனியராகவே வந்த அவர் தனது நாடகங்கட்கு ஸ்தாபனரீதியான ஆதரவை நாடினார். இம்முறை அந்த ஆதரவு விடுதலைப் புலிகளது அனுதாபிகளிடமிருந்து வந்தது. தாஸீஸியஸ் இலங்கையிற் தயாரித்தளித்த நா.சுந்தரலிங்கத்தின் அபசுரம் என்ற அபத்த நாடகம் (Theatre of the absurd) குழந்தை சண்முகலிங்கத்தின் கூடி விளையாடு பாப்பா, மஹாகவியின் புதிய தொரு வீடு என்ற பாநாடகம் என்பனவற்றையும் புதிதாக இளைய பத்மநாதனின் மீண்டும் ராமாயணம் மீண்டும் பாரதம் என்ற நாடகத்தையும் 'களரி' என்ற அமைப்பினூடு தயாரித்தளித்தார். இவை யாவும் அரசியற் பாங்கான நாடகங்களே 'மீண்டும் ராமாயணம் மீண்டும் பாரதம்' நாடகத்தை அவர் வியாக்கியானஞ் செய்த விதம் தமிழ் இனவாதப் போக்கானது என்ற ஒரு விமர்சனமும் இங்கு குறிப்பிடத் தக்கது. இதை விட, இலங்கை அரசியல் நிகழ்வுகளை வைத்து மனிதத்துவத்தை வலியுறுத்தும் பாங்கில் அவர் தயாரித்த 'எங்கே போகிறோம்?' ஸ்விற்ஸர்லாந்தில் Sri Salami என்ற பேரில் தமிழ், ஜேர்மன், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் (ஏககாலத்தில்) கிண்டல் நாடகமாக மேடையேறியது 'களத்தில்' என்ற பேரில் அண்மையிற் தயாரிக்கப்பட்ட நாடகம் நவீன நாடகப் போக்குக்குரியது. செய்திகளையும் உலக நடப்புக்களையும் மேடை நிகழ்ச்சியாக்கும் இவ்வாறான முயற்சி தமிழருக்குப் புதியது. தாஸீஸியஸ் ஒரு அற்புதமான நடிகர். Theatre எனப்படும் நாடக அம்சத்தை ஆழமாக உணர்ந்த நல்ல தயாரிப்பாளர் அவரது திறமைகள் தமிழ் நாடகத் துறையின் விருத்திக்குப் போதியளவு பயன்படுகிற நிலை இன்று இல்லை. அவர் இவ்விஷயம் பற்றி ஆழமாய் சிந்திப்பது நல்லது.

அவைக்காற்றுக் கலைக்கழகத்தினர் இரண்டு வருடங்களுக்கு முன்பு ஒழுங்கு செய்த நாடக விழாவில் தாஸீஸியஸ் பங்குபற்றியது பலரையும் மிகவும் மகிழ்வூட்டிய விஷயம் . இவ்வாறான ஒத்துழைப்பு பின்னரும் சாத்தியப்படாமை தமிழ் நாடகத் துறை ஒரு இழப்பு என்பது வருத்தத்துக்குரிய உண்மை.

நாடகம் பற்றிப் பாலேந்திராவின் விஷய ஞானமும் மேடை பற்றிய அவரது நுண்ணறிவும் அயராத உழைப்பும் ஆனந்தராணி, நிர்மலா, கிருஷ்ணராஜா, மனுவேற்பிள்ளை, சாந்தகுணம் உட்பட்ட பல நல்ல நடிகர்களது ஆதரவும் மட்டுமே ஒரு நாடக இயக்கமாகி விடாது. லண்டன் வாழ் தமிழரின் பாமரத்தனம் தொடரும் வரை, நாடகத் துறை செழிப்பது கடினம். நல்ல ரசனை பல திசைகளினலும் கட்டியெழுப்பட்டாலொழிய நாடகம் போன்று கலைஞர் சுவைஞர் நேரடி உறவும் கூட்டு உழைப்பும் அவசியமான ஒரு கலை செழிக்க முடியாது. பாலேந்திரா இலங்கையிற் தழுவல் நாடகங்களைத் தயாரித்த போது 'இறக்குமதி' என்று சிலர் கூச்சலிட்டார்கள். உண்மையில் லண்டனில் இப்போது பாலேந்திரா தருவன தான் இலங்கையிலிருந்து பெறப்பட்ட இறக்குமதிகள். இந்த மண்ணில் இன்னமும் முழுதாக, உருப்படியாகத் தமிழில் எதுவும் விளையவில்லை. புதிய முயற்சிகளின் விளைவாகச் சிறிய முளைகள் தெரிகின்றன. நிழல் கொடுக்கவும் நீரூற்றவும் இயலாதவர்கள் நெருப்பையாவது கொட்டாமலிருப்பார்களாக.

# ஈழம் ஒரு தொடர்கதை

## 2-2

மலையகத் தொழிலாளர்கள் கட்டங் கட்டமாக இரு தடவை இந்தியாவுக்கு அனுப்பப்பட்டபோது இலங்கையில் தமிழர் தொகை விகிதாசாரத்தால் குறைந்ததுடன் பல பாராளுமன்ற ஆசனங்களையும் இழக்க நேரிட்டது. இங்கே நாம் நோக்க வேண்டிய முக்கிய விடயம் என்னவெனில் ஈழம் என்பது வடக்கு கிழக்குடன் மட்டுப் படுத்தப்பட்டுப் பிரிக்கப்பட்டால் இந்த தோட்டத் தொழிலாளர்கள் நிலை என்ன என்பதே. அவர்கள் ஸ்ரீலங்காவின் சட்டதிட்டங்களுக்கமைய தங்களைப் படிப்படியாக இனமாற்றம் செய்து கொள்வதா அல்லது போராடுவதா? இங்கு 1981ம் குடிசனமதிப்பு புள்ளி விபரங்களிலுள்ள இணைப்புக்கள் இரண்டை தருகிறேன்

இணைப்பு ஒன்று இலங்கையின் சிறுபான்மையினங்கள் தொகை பற்றி ஆய்வு செய்யவும், இணைப்பு இரண்டு மலையகத் தமிழர் பரம்பல் பற்றியும் கிழக்கு மாகாண மக்கள் விகிதாசாரம் பற்றி ஆய்வு செய்யவும் பயன்படும்.

முதலில் மலையக மக்கள் பற்றிப் பார்ப்போம். இணைப்பு இரண்டில் நுவரெலியாவைக் கவனிக்க.. சிங்களவர் சிறுபான்மையாகவும் (35. 9.%) மலையகத் தமிழர் பெரும்பான்மையாகவும் (47.3%) உள்ளனர். பதுளை (21.1%) இரண்டாவது இடத்தைப் பெறுகிறது. இரத்தினபுரி கண்டி முறையே மூன்ருவது நான்காவது இடங்களைப் பெறுகின்றன. வவுனியா பற்றித் தனியாகப் பார்ப்போம்.

இப்போது நாம் இங்கு ஒரு

### இணைப்பு 2

| மாவட்டம் | சிங்களவர் | இலங்கைத் தமிழர் | இந்தியத் தமிழர் | முஸ்லிம்கள் | ஏனையோர் |
|---|---|---|---|---|---|
| கொழும்பு | 77.9 | 9.8 | 1.3 | 8.3 | 2.7 |
| கண்டி | 75.0 | 4.9 | 9.3 | 9.9 | 0.9 |
| மாத்தளை | 79.9 | 5.9 | 6.7 | 7.2 | 0.3 |
| கேகாலை | 86.3 | 2.1 | 6.4 | 5.1 | 0.1 |
| பதுளை | 68.5 | 5.7 | 21.1 | 4.2 | 0.5 |
| இரத்தினபுரி | 84.7 | 2.3 | 11.1 | 1.7 | 0.2 |
| நுவரெலிய | 35.9 | 13.5 | 47.3 | 2.8 | 0.5 |
| வவுனியா | 16.6 | 56.9 | 19.4 | 6,9 | 0.2 |
| திருமலை | 33.6 | 33.8 | 2.6 | 29.0 | 1.0 |
| அம்பாறை | 37.6 | 20.1 | 0.4 | 41.6 | 0.3 |

தர்க்கரீதியான விவாதத்தை முன் வைப்போம். அதாவது வழக்கம்பரை மைதானத்தில் 1976ல் தமிழீழப் பிரகடனம் செய்யப்பட்டபோது அதிலே ஒரு பிரகடனம் ஸ்ரீலங்கா வாழும் தமிழர்கள் தமிழீழத்தில் குடியேறலாமென கூறுகிறது. இது எவ்வளவு தூரத்துக்கு நடைமுறை சாத்தியமானது.
ஈழப்பிரகடனத்துக்குப் பலவருடங்களுக்கு முன்பே திருமலைப் பாதயாத்திரை காலத்தில் தந்தை செல்வா இவ்வாறு தமிழர்களைக் குடியேறும்படி கேட்டார். ஆனல் அது தோல்வியில் முடிந்ததை இணைப்பு இரண்டில் வவுனியா, திருகோணமலை, அம்பாறையில் இந்திய மக்களின் விகிதாசாரத்தைப் பார்த்தால் புரியம்.

வவுனியாவில் 19.4% மலையகத்தமிழர் எனும் போது இது 1970 77 ஸ்ரீமாவோ ஆட்சிக்காலத்தில் இருந்த இறக்குமதிக் கட்டுப்பாடுகளால் மலையகத்தில் ஏற்பட்ட பஞ்சம் காரணமாக நிலக்கடலை விவசாய உற்பத்தியில் ஈடுபடப் புலம் பெயர்ந்தோர் என்பதைக் கவனத்திற் கொள்ளல் வேண்டும். ஆகவே இத்தகைய சூழல் மீண்டும் தெற்கில் ஏற்பட்டால் மலையக மக்கள் குறிப்பிடப்படும் ஈழத்துக்குப் புலம் பெயர்வார்கள் என எதிர்பார்க்க முடியுமா?

இது பின்வரும் விடயங்களில் தங்கியிருக்கும். முதலாவது ஈழமக்கள் எப்படி மலையக மக்களை நடத்துவார்கள் என்பதிலும், ஈழ அரசியல் ஸ்திரப்பாடு (நன்நெறி) என்பதிலும் தங்கியுள்ளது. இரண்டாவது சிங்கள அரசு அவர்களை எப்படி நடத்துகிறது என்பதையும் ஒரு நூற்ருண்டுக்கு மேலாகத் தமது பாரம்பரிய பிரதேசமாயிருக்கும் இடத்தைவிட்டு தமது சொத்துக்களை விட்டு எவ்வளவு மக்கள் ஈழப்

### இணைப்பு 1

| இனங்கள் | விகிதம் | மக்கட்தொகை |
|---|---|---|
| சிங்களவர் | 74.0 | 10,985,000 |
| தமிழர் | 18.2 | 2,687,000 |
| (இதில் இலங்கை | 12.6%, இந்தியா 5.6%) | |
| முஸ்லீம் | 7.4 | 1,056,972 |
| ஏனையோர் | 0.4 | 59,400 |
| | 100% | 14,788,372 |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள மக்கட் தொகையினர் மதரீதியாக பின்வரும் விகிதாசாரத்தில் அமைகின்றன.

புத்தமதம் 67% இந்து 18%
இஸ்லாம் 7% கிறிஸ்தவம் 8%

பிரதேசத்தில் குடியேறுவார்கள் என்பதையும் பொறுத்தது.

இங்கு நாம் ஒரு விடயத்தைக் கவனிக்க வேண்டும் வடக்கு கிழக்கை இணைத்த ஈழப்பிரதேசத்தை நாம் பெறும்போது ஸ்ரீலங்காவில் வதியும் ஏனைய மக்களுடைய மொழி சிங்களம் என்பது உறுதிப் படுத்தப்படும். இந் நிலையை வடக்கு கிழக்குக்கு வெளியில் வாழும் மக்கள் ஏற்றுக் கொள்வதை தவிர வழியில்லை. ஆகவே அந்த மக்கள் இனம் மாறுவது தவிர்க்க முடியாதது. இது ஏற்கனவே கறுவா உரிப்பதற்கும் கள் இறக்குவதற்கும் என மலபார் (கேரளா) இராமநாதபுர மாவட்டங்களிலிருந்து கொண்டு வரப்பட்டு களுத்துறை மாவட்டம், நீர்கொழும்பு, சிலாபம், குருநாகலையில் வாழ்ந்து இன்று சிங்களவராக உருவமாற்றம் பெற்ற மக்கள் வரலாற்றிலிருந்து பெறப்பட்ட படிப்பினையின் முடிவாகும்.

இன்னொரு விடயம் மலையக மக்களின் அரசியல் பாரம்பரியமாகும். சுதந்திர இலங்கையில் மாறி மாறி ஆட்சிகளில் இருந்த ஐ.தே.க இரண்டிலும் மலையகப் பிரதிநிதிகளான தொண்டமான், அஸீஸ் ஆகியோர் தேசிய ரீதியாக இணைந்து செயற்பட்டனர். இன்றும் செயற்படுகின்றனர். இன்னொரு அரசியல் சக்தி இடதுசாரிகளாகும். இவர்கள் சில காலங்களில் பலமுள்ள சக்தியாகவும் சில காலங்களில் பலவீனமடைந்தும் இருந்துள்ளனர். ஆனால் இவர்களும் தேசிய சக்தியேயன்றிப் பிரிவினைச் சக்திகளாக இருக்கவில்லை. மலையகத்தில் பிரிவினைச் சக்திகள் வளர்ச்சியடைய முடியாமலிருந்தமைக்கு அவர்களின் அரசியற்பார்வை, பிராந்தியச் சூழல் என்பன காரணமாக இருந்திருக்கின்றன.

எனவே இவைகள் எல்லாம் பாதகமான அம்சங்களாகவே நாம் கொள்ள வேண்டும். மக்கட் தொகையின் அடிப்படையில் எட்டு லட்சம் மக்கள் (இணைப்பு1) இந்தியத் தமிழராவர். இவர்கள் அப்படி சிங்கள மக்களாக மாற்றமடையும் பேராபத்து உண்டு. ஆகவே நாம் வரலாற்றைப் பின்னோக்கி நகர்த்தி எமது முடியாட்சிக்குரிய பிரதேசத்தை அல்லது பிரதேசங்களை பிரித்தெடுக்க முயற்சிக்கும் போது வரக்கூடிய பிரச்சனைகளுக்கு எந்தவித தீர்வுகளை வைப்பது என்பதை தெளிவாக வரையறுத்துக் கொள்ள வேண்டும். இல்லையேல் ஒரு அரசியல் இலக்கை நோக்கி நாம் முன்னேறுவதில் தடைகளும் தெளிவின்மையும் உண்டு.

1947ம் ஆண்டுக்கு முன்பு இலங்கை இந்தியா ஆகிய இரு நாடுகளுக்கும் கடவுச் சீட்டு இல்லாமல் இங்கிருந்த அங்கும் அங்கிருந்து இங்கும் பிரயாணம் செய்ய முடியும். இந்த நிலையை இன்று நடைமுறைப்படுத்தும்படி வேண்டுகோள் விடமுடியுமா? அதனால் தான் பழைய வரலாற்று அடிப்படை ஆதாரங்களை வைத்துக்கொண்டு அச்சொட்டாக அவ்விதமான தீர்வுகள் வேண்டுமெனப் போரிடுவது மாறி வரும் உலகின் யதார்த்தங்களின்றும் நாம் விடுபட்டு தனிமைப்பட ஏதுவாகிறது.

இலங்கைத் தமிழர்களுக்கென அரசு இருந்ததையும் வடக்குக் கிழக்கு அவர்களின் பாரம்பரிய பிரதேசம் அல்லது தாயகம் என்பதில் வரலாற்று ரீதியான உண்மை உண்டு. ஆனால் இன்று அதைப் பிரிப்பதில் உள்ள பாதகமான அம்சங்களில் மலைநாட்டு தமிழர் பற்றிப் பார்த்தோம்.

அடுத்து முஸ்லீம்கள் பற்றியும் கிழக்கு மாகாண இன்றைய மக்கட் பரம்பல் பற்றியும் பார்ப்போம். முஸ்லீம்கள் பற்றி தனியானதொரு அத்தியாயம் வருவதனால் விபரமாக அதிலே புள்ளி விபரங்களுடன் பார்க்கலாம். கிழக்கு மாகாணம் பற்றியே இங்கு முக்கியமானது.

கிழக்கு மாகாண மக்கட் பரம்பலை அண்மைக்காலங்களில் பிரச்சனைக்கு ரியதாக இருந்த யூகோஸ்லாவிய மாநிலமான போஸ்னியாவின் மக்கட் பரம்பலுடன் ஒப்பிடலாம். இது இனக் குழுக்கள் தனித்தனிக் கிராமங்களிலும் பல பிரதேசங்களில் கலந்தும் உள்ளனர். கிழக்கு மாகாண நிலை பற்றி ஆய்வு செய்யும் போது பல விடயங்களை நாம் கருத்துக்கெடுக்க வேண்டியுள்ளது.

இன்று வடக்கு கிழக்கு இணைப்பு பற்றி ஏதோ பெரிதாகப் பேசப்படுகின்றது. முதலில் இந்த வடக்கு கிழக்கின் எல்லைகளை வகுத்தவர்கள் யார்? அது எந்த அடிப்படையில் வகுக்கப்பட்டது என்பது முக்கியமான விடயமாகும். 1815 இல் கண்டி இராச்சியமும் ஆங்கிலேயர் வசம் வீழ்ச்சியடைந்த பின்னர் முழு இலங்கையும் ஆங்கிலேயர் வசம் வந்தது. அவர்கள் தான் பரிபாலன வசதி கருதி ஒன்பது மாகாணங்களாகப் பிரித்தார்கள். அவர்கள் அப்படிப் பிரிக்கும் போது எந்த அடிப்படையில் பிரித்தார்கள். தேயிலை, றப்பர், தெங்குப் பொருள் ஆகிய ஏற்றுமதிச் சரக்குகளை உற்பத்தி செய்யும் வலயங்களை நிர்வாக வசதி கருதி தனித் தனி மாவட்டங்களாகவும் நெற்செய்கையுடன் சம்பந்தப்பட்ட வட, வடமத்திய, கிழக்கு மாகாணங்களை மூன்றாகவும் பிரித்தனர்.

ராஜரட்டை, மாயரட்டை, உருகுண வெள்ளையரால் வேறுவிதமாகப் பிரிக்கப்பட்டன. வடமத்திய மாகாணம் எனப்படும் அனுரதபுர, பொலன்னறுவை ஆகிய இரு மாவட்டங்களை எடுத்தால் 'புலத்தி நகர்' எனப்படும் பொலனறுவையின் பெரும்பகுதி தமிழர் வாழ்ந்த பகுதியாகும். ஆனால் இன்று இது பற்றி யாரும் குறிப்பிடுவதில்லை. ஏதோ வெள்ளையரால் பிரிக்கப்பட்ட வடக்கு கிழக்கு எமது தாயகம் என்பதில் ஆங்கில சட்டதிட்டங்களில் அதீத நம்பிக்கையுள்ள நமது தலைவர்களும் மக்களும் சரியென ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறார்கள்.

வடக்கு, வட மத்திய, கிழக்கு மாகாணங்களின் நெற்செய்கையை கருத்திற் கொண்டு இந்த மாகாணங்கள் பிரிக்கப்பட்டனவா அல்லது மொழிவாரியான பாரம்பரிய பிரதேசம் என்ற அடிப்படையில் வெள்ளையர்கள் இதைப் பிரித்தனரா என்பது முக்கிய வினாவாகும்.

தொடரும்

# குறுநாவல்

# வன்னி மண்



வ.ந. கிரிதரன்

இச்சமயத்தில் வவுனியா நகர பொலிஸ் நிலையத்தைச் சுற்றி 'சேகுவேரா' இளைஞர்களிடமிருந்து தங்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையாக மண் மூடைகள் ஆங்காங்கே போடப்பட்டிருந்தன. இம்மண் மூடைகளை வேடிக்கை பார்த்தபடி வந்து கொண்டிருந்த போது, வவுனியா நகரசபை மைதானத்தில் மூன்று ஹெலிகொப்டர்கள் வந்திறங்கின. 'சப் மெஷின் கண்'களுடன் சிங்களச் சிப்பாய்கள் நகரசபை மைதானத்தைச் சுற்றியிருந்த கழிவு நீர் செல்வதற்காக வெட்டப்பட்டிருந்த கால்வாய் பகுதிக்குள் மறைந்து நின்று பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்திக் கொண்டிருந்தார்கள். முதன்முதலாக என் வாழ்வில் 'சப்மெஷின் கண்'களைப் பார்த்தது அப்பொழுதுதான் அன்றிலிருந்து புரட்சி அடக்கப்பட்ட காலம' வரை அடிக்கடி புகையிரத நிலையங்களில், வீதிகளில், சிங்களச் சிப்பாய்கள் 'சப்மெஷின் கன்'களுடன் திரிவதைப் பார்ப்பது பழக்கமாகிவிட்டது. ஒரு சில சமயங்களில் 'மெஷின் கண்' பொருத்தப்பட்ட திறந்த ஜீப்புகளில் சிங்களச் சிப்பாய்கள் செல்வார்கள். அவர்களை அவ்விதம் பார்ப்பது எங்களிற்கொரு வேடிக்கையான அனுபவம். எந்த விதப் பயமும் எங்களிற்கேற்பட்டதில்லை. அவர்களும் தமிழர்களுடன் அன்பாக, இயல்பாக நடந்து கொண்டார்கள். சிங்கள இளைஞர்கள் விடயத்தில் மட்டும் எச்சரிக்கையாக, சந்தேகத்துடன் நடந்து கொண்டார்கள். இந்த சப்மெஷின் கன்களைப்பற்றி நெடுநாள் எனக்கொரு சந்தேகமிருந்தது. இதன் சூழலைச் சுற்றி துளைகள் பல கொண்டதொரு பகுதியிருக்கும், குளிர் தன்மையைத் தருவதற்காக ஆனால் அந்தக் கால கட்டத்தில் முதன் முறையாக அதனைக் கண்டபோது பலவிதமான கதைகள் எங்களை ஈர்த்தன. அவற்றிலொன்று சமயத்தில் அந்தத் துளைகள் வழியாக ஐநூறு குண்டுகளைச் சுடலாமென்பதுதான். சிங்களப் பொலிசாரைப் பொறுத்தவரையில் அவர்களை நான்' சப்மெஷின்கன்' களுடன் கண்டதில்லை. வழக்கம்போல் நீண்ட ரைபிள் தான் அவர்களது ஆயுதம். இது அன்று ஆனால் இன்றோ.. ஒரே மண். ஆனால் எத்தனை விதமான நிகழ்வுகள் எல்லாவற்றிற்கும் சாட்சியாக அமைதியிலாழ்ந்து கிடக்கும் என் பிரியமான வன்னி மண்.

வன்னி மண். இந்த மண்ணில் கழிந்து விட்ட என் பால்ய காலத்து நினைவுகள் ஒவ்வொன்றுமே நெஞ்சின் ஆழத்தில் பசுமையாகப் பதிந்து கிடக்கின்றன. இந்த மண்ணில் கழிந்து விட்ட காலத்தின் ஒவ்வொரு கணமும் தெளிவான விம்பமாக நெஞ்சில் விரிகின்றது. காடுகள்.... குளங்கள்... வயல்கள் திரும்பிய பக்கமெல்லாம் இயற்கையின் தாலாட்டு. இந்த மண்ணின் மேல் நிற்கும் போது புனிதமானதொரு உணர்வினை, கூடவே இனிமை கலந்ததொரு உணர்வினை நானடைவது வழக்கம். இம்மண்ணின் நினைவுகளும் எனக்கு அதனைத் தான் ஏற்படுத்தி விடுகின்றன. குளங்களென்றதும் தான் ஞாபகத்திற்கு வருகின்றது... இந்த மண் குளங்கள் மலிந்த மண்... மூலைக்கு மூலை குளங்கள் எங்கள் வீட்டிற்கண்மையில் கூட நிறைய குளங்கள் காணப்பட்டன. பட்டாணிச்சுப் புளியங்குளம், வேப்பங்குளம், நெழுக்குளம், நாவற்குளம், பண்டாரிக் குளம், வைரவபுளியங்குளம், வவுனியாக்குளம் இறம்பைக்குளம், பேயடிச்சான் கூழாங் குளம், இப்படிக் கூறிக்கொண்டே போகலாம். இம்மண்ணின் ஊர்ப்பெயர்கள் கூட மாங்குளம், புளியங்குளம், பாவற்குளமென்று முடிவதைக் காணலாம். நாவற்குள மென்றதும் தான் ஞாபகத்திற்கு வருகின்றது. வேறொன்றுமில்லை 'அடங்காத் தமிழனின்' ஞாபகம் தான்.. இந்த வன்னிமண்ணிற்கு ஒரு பெயருண்டு. அடங்காப்பற்று என்றும் இம் மண்ணைக் கூறுவதுண்டு. எந்தவொரு அரசுகளிற்கும் அடிபணியாது இம்மண்ணை வன்னி மன்னர்கள் ஆண்டு வந்ததாலேற்பட்ட காரணப்பெயர் அது. அது சரி, மகாராணியாரிற்குக் கணிதம் படிப்பித்துப் பெருமை பெற்ற கணித மேதைக்கு ஏனிந்த பட்டப்பெயரென்று நீண்டகாலமாக நான் மண்டையைப் போட்டுடைத்ததுண்டு. ஒரு காலத்தில் அடங்காப்பற்றின் பாராளுமன்ற உறுப்பினராகயிருந்த காரணத்தினால் ஏற்பட்ட பெயராகயிருக்குமோ என்று கூடச் சிந்தித்ததுண்டு. ஆனால் வளர வளரத்தான் (அறிவைத் தான் கூறுகிறேன்) காரணம் விளங்கியது..... வெறியடங்காத் தமிழன், சாதிவெறி அடங்காத்தமிழனென்பது. மாவிட்டபுர ஆலயத்தில் இவர் நடத்திய போராட்டம் தமிழர் வரலாற்றின் முக்கியமான பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதொரு காலகட்டமல்லவா.... இந்த அடங்காத் தமிழன் வெட்டுவித்த குளம்தான் இந்த நாவற்குளம் என்பது. எங்கள் வீட்டிலிருந்து வடக்காக, யாழ்ப்பாணம் நோக்கிப் புகையிரத பாதை வழியாகச் சென்றால் இக்குளத்தினை அடையலாம்.

அடங்காத் தமிழனென்றதும் இன்னுமொரு ஞாபகம் வருகின்றது. என்னுடைய நண்பரொருவர் மொறட்டுவைப் பல்கலைக் கழகத்தில் கட்டடக்கலை பயின்றவர். இந்த

அடங்காத் தமிழனின் பேரனொருவர் இவர்களிற்கு ஒரு பாடம் கற்பிக்க வருவதுண்டாம். பெயர் கூட ஏதோ அச்சமடையாதவன் என்பது போன்ற பொருளிலுள்ள பெயராம். கிசுகிசு மாதிரியிருக்கிறதா? இந்திய சமாதானப் படையினரின் காலத்தில யாழ்ப்பாணத்தில் கீர்த்தி பெற்று விளங்கிய அசோகா ஹோட்டலை வடிவமைத்த கட்டடக் கலைஞர் இவர்தான். இந்த ஹோட்டல திறக்கப்படுவதற்கு முன்பு என் நண்பருடன் இக்கட்டடத்தைப் பார்க்க ஒருமுறை சென்றுள்ளேன். குறைந்தளவு வெளியைக் கூடிய அளவு பயனுள்ளதாகி அமைக்கப்பட்ட கட்டடமென்று நண்பன் அது பற்றிப் புகழ்ந்து கூறியதுண்டு. முக்கியமான விஷயமென்றால் ....இந்த அடங்காத் தமிழனின் பேரனிற்கு ஒழுங்காகத் தமிழ் தெரியாதாம். எத்தனையோ ஆயிரக்கணக்கான மைல்களிற்கப்பால் இருந்து கொண்டு இன்று எம்மவர்கள் தமிழைப் படிக்கிறார்களில்லையே என்று கவலைப்படுகின்றோம். ஆனால் சொந்த மண்ணிலேயே அதுவும் அடங்காத் தமிழனொருவனின் பேரனிற்குத் தமிழ் தெரியவில்லையென்றால்.... இந்தப் பேரனைப்பற்றி என் நண்பர் இன்னுமொரு கதையையும் கூறுவதுண்டு. ஒரு முறை மாணவர்களை இந்த அடங்காத் தமிழனின் பேரன் களனி விகாரைக்குக் கூட்டிச் சென்றிருக்கின்றார். பொதுவாக சிங்களவர்கள் பௌத்த குருமாரின் கால்களில் விழுந்து ஆசி பெறுவது வழக்கம். ஆனால் தமிழர்களைப் பொறுத்த வரையில் அவ்விதமான பழக்கமெதுவுமில்லை. அன்று களனி விகாரைக்குச் சென்ற சிங்கள மாணவர்களெல்லாம் வழக்கம் போல் பௌத்த குருவின் கால்களில் விழுந்து ஆசி பெற்றார்கள். தமிழ் மாணவர்களைப் பொறுத்த வரையில் மரியாதையாகக் கைகளைக் கூப்பியதுடன் சரி. ஆனால் அடங்காத் தமிழனின் பேரன் மட்டும் எல்லோர்க்கும் முன்பாக பௌத்த குருவின் கால்களில் விழுந்து ஆசி பெற்றாராம். இதிலுள்ள சரி பிழையை ஆராய நானிங்கு வரவில்லை. இது அவரவர் விருப்பம். ஆனால் இதுபற்றி என் நண்பன் வேடிக்கையாக "அடங்காத்தமிழனின் பேரன் அடங்கிக் கிடந்ததைப் பார்க்கேக்கைச் சிரிப்பாயிருந்தது. இப்பிடித்தான் நிறைய அடங்காத் தமிழன்கள் எங்கள் தலைவங்களா வந்து விடுறாங்கள். மொழிக்காகத் தன்மானத்திற்காகக் கூக்குரலிடுறாங்கள். ஆனா இவங்கட குடும்பங்களைப் பார்த்தா எத்தனையோ பேரின்ற குடும்பத்தவங்களிற்கு ஒழுங்காக தமிழ் தெரியாது. மானவுணர்ச்சி கிடையாது." என்று அடிக்கடி கூறுவதுண்டு. உண்மைதான்.

நாவற்குளம் பலவேறு நினைவலைகளைத் தோற்றுவித்து" விட்டது. இந்தக் குளத்திற்கு அண்மையில் செல்லும் புகையிரத பாதை எங்கள் வாழ்வில் முக்கிய மானதொரு விடயத்தைப் பிடித்து விட்டிருந்தது. ஒரு புறம் காடு, மறுபுறம் பெரியதொரு நிலப்பரப்பை உள்ளடக்கிய விவசாயக் கால்நடைப் பண்ணை. இவற்றிற்கிடையில அமைதியாக நீண்டு கிடக்கும் புகையிரதப் பாதை. தண்டவாளங்களில் காதுகளை வைத்து தொலைவிலேதாவது புகைவண்டி வருகின்றதாவென்று ஆராய்வது எங்களது விளையாட்டுக்களிலொன்று. இன்னுமொரு விளையாட்டு சோடா மூடியை ட்ரெயின் வரும்போது வைத்துவிட்டு வேடிக்கை பார்ப்பது இவ்விதம் விரிவடைந்திருக்கும் சோடா மூடியின் நடுவில் துளைகளிட்டு, நூல் கோர்த்து, இரு கைகளாலும் நூலின் இரு முனைகளையும் பற்றியிழுத்து.... நடுவில் சுழலும் சோடா மூடியைப் பார்த்து வியந்து நிற்பது.... இதுவும் எங்களது பொழுது போக்குகளிலொன்றுதான். ஒவ்வொரு முறை புகைவண்டி அப்பகுதியைக் கடக்கும்போதும், அதுவரை மரங்களில் மௌனமாக இலைகளைச் சப்பிக் கொண்டு, அல்லது பேன் பார்த்துக் கொண்டிருக்கும் குரங்குகளெல்லாம் சத்தம் போட்டபடி கொப்புக்களில் துள்ளித் திரிவதைப் பார்க்கவும் வேடிக்கையாகத்தானிருக்கும்.

இந்தப் புகையிரதப் பாதை இன்னுமொரு விடயத்திற்கும் பிரசித்தம். எனக்குத் தெரிந்து குறைந்தது மூன்று பேராவது இப்பகுதியில் புகைவண்டி முன் விழுந்து தற்கொலை செய்து கொண்டிருக்கின்றார்கள். இவர்களில் முதலாவதாகத் தற்கொலை செய்து கொண்டவரின் பெயர் ராமன். இந்திய சமூகத்தைச் சேர்ந்தவர். இவரை நான் ஒரு முறைதான் பார்த்திருக்கின்றேன். அப்பொழுது நாங்கள் வவுனியா சென்றிருந்த புதிது... எங்கள் வீட்டிற்கருகாக காடு மண்டிக் கிடந்தது. ஒரு முறை ஏதோ குழப்படி செய்து விட்டு, பிரம்புடன் வந்து கொண்டிருந்த அப்பாவிடமிருந்து தப்புவதற்காக அருகில் மண்டிக்கிடந்த காட்டுப் பகுதிக்குள் ஓடிவிட்டேன். பார்த்தீர்களா... அடக்குமுறையிலிருந்து தப்புவதற்காக ஓடிய என்னை எவ்விதம் இம்மண்ணின் காடுகள் சூழ்ந்த அமைப்பு காப்பாற்றி விட்டதென்பதை.. இதுதான் இவ் வன்னி மண்ணின் பிரதானமான பலத்திலொன்று. காடுகள் மண்டிக் கிடந்த வன்னிமண்ணின் அமைப்பு ஒரு காலத்தில் பண்டார வன்னியன்களை ஏனைய அடக்கு முறைகளிலிருந்து சுதந்திர புருஷர்களாக நடமாடிட வைத்ததென்றால்.. இன்றும் கூட பண்டார வன்னியன்களின் பாதுகாப்புக் கவசமாக விளங்கி நிற்கின்றதென்றுதான் சொல்ல வேண்டும். அப்பாவின் பிரம்படிக்கு அஞ்சி அருகிலிருந்த காட்டிற்குள் ஓடியதை அமைதியாக நின்று பார்த்திருந்துவிட்டு அப்பாவிடம் கூறி என்னைக் காட்டிக் கொடுத்த எட்டப்பன் தான் இந்த ராமன். பொதுவாகத் துரோகிகளின் எட்டப்பர்களின் முடிவு சோகத்தில்தான் முடிவது வழக்கம். அதற்காக யாரும் பெரிதாக அழுவது கிடையாது. ஆனால் இந்த எட்டப்பனின் கதையும் சோகத்தில் முடிந்த போது எனக்குச் சிறிது துக்கமாகக் கூடவிருந்தது. அதன் பிறகு சிறிது காலம் ராமனின் தலைவேறு முண்டம் வேறாகக் கிடப்பது போன்ற காட்சிகள் என் நெஞ்சில் தோன்றி என்னைப் பயமுறுத்துவது வழக்கம். அது வரை அப்பாவிற்கு என்னைக் காட்டிக் கொடுத்து எனக்குப் பிரம்படி வாங்கித் தரக் காரணமாயிருந்ததால் ராமன் மேல் எனக்கிருந்த கோபம் கூட அன்றிலிருந்து என்னை விட்டு ஓடிவிட்டது. ராமனை நான் மன்னித்துவிட்டேன்.

தொடரும்

# சமாதான மாநாடும் பாஞ்சாலியின் புரிந்து கொள்ளலும்

**செழியன்**

1993 ஏப்ரலில் ரொறன்டோ கனடாவில், இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவது தொடர்பாக நடைபெற்ற ஆரம்ப மாநாடு பற்றி சரிநிகர் முப்பதாவது இதழில் பாஞ்சாலி என்ற பெண் எழுதியுள்ளார். இம்மாநாடு தொடர்பாக பல வேலைகளில் இணைந்து செயலாற்றியிருந்த போதும் இங்கு எழுதுகின்ற எனது கருத்துக்கள் மாநாட்டு அமைப்புக்குழுவின் கருத்துக்கள் அல்ல என்பதையும் வாசகர்களின் கவனத்துக்கு முதலிலேயே தெரியப்படுத்துகிறேன்.

பாஞ்சாலி என்ற புனைப்பெயரில் எழுதிய பெண் இம்மாநாட்டு அமைப்பாளர்களில் ஒருவர். மாநாடு நிகழ்ந்து முடிந்த பின் குமுறி எழுதியுள்ள இந்த பெண்நிலைவாதி(?) மாநாட்டுக்கு முன் அமைப்பாளர்களில் ஒருவராக இருந்து கொண்டு என்ன செய்தார்? இது ஒரு மிகமிக முக்கியமான விடயமல்லவா? மாநாட்டு அமைப்பாளர்களில் ஒருவராக இருந்து ஒரு பெண்ணின் கடமை என்ன? மேலும் தன்னை பெண்நிலைவாதி என கருதிக் கொள்ளும் இவர் எவ்வாறு செயலாற்றியிருக்க வேண்டும்?.

மாநாடு தொடர்பான விடயங்களில் சிறப்பாக பெண்களின் பங்கு, நிலை தொடர்பான விடயங்களில் அக்கறையோடு செயல்பட்டு அமைப்புக்குழு முன் ஆலோசனைகளையும், பிரேரணைகளையும் சமர்ப்பித்திருக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் பாஞ்சாலிக்கு இருந்தது. ஆனால் மாநாட்டை ஒழுங்கமைப்பதில் பெண் என்ற வகையில் எந்த பங்கையும் செலுத்தாது தனது கடமையில் இருந்து தவறி பாஞ்சாலி எல்லாம் நடந்து முடிந்தபின் ஏனைய அமைப்பாளா களின் மீது குற்றம் சுமத்தி பகிரங்கமான முறையில் கருத்து வெளியிட்டுள்ளார். தான் இருந்த அமைப்பு கமிட்டியில் பெண்களுக்காக ஒரு துரும்பு ஆலோசனையை கூட வழங்க வக்கில்லாத பாஞ்சாலி மாநாட்டுக்குப்பின் இவ்வாறு நடந்து கொள்வதில் இருந்தே பெண்கள் தொடர்பாக உணர்வு பூர்வமான செயற்பாட்டை எந்தளவுக்கு இவர் கொண்டுள்ளார் என்பது வெளிச்சமாகத் தெரிகிறது.

மேல் தட்டு வர்க்கப் பெண்களின் பெண்விடுதலையே இப்படித்தான் இருக்கும் என்பதற்கு பாஞ்சாலி நல்ல உதாரணம் பெண் விடுதலை, பெண் உரிமைபற்றி ஏதாவது பத்திரிகையில் ஒரு குறிப்பு, ஏதாவது ஒரு கூட்டத்தில் ஒரு முழக்கம் முழங்க மட்டுமே இலாயக்கானவர்கள். இதற்கு அப்பால் உண்மையாக பெண்களின் பிரச்சனைகளுக்காக உணர்வு பூர்வமாக செயற்படுகின்ற எண்ணத்தையே இவர்களிடம் காண முடியாது.

இம்மாநாடு இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதை நோக்கமாகக்கொண்டது. (பாஞ்சாலியும் இதை ஒத்துக் கொண்டுள்ளார்) சிங்கள, தமிழ், முஸ்லீம்கள் கலந்து கொண்ட இவ்வாரம்ப மாநாடு அதன் நோக்கத்தை பொறுத்த வரை பல சிறப்புகளைக் கொண்டது. இம்மாநாட்டில் பெண்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என பாஞ்சாலி ஒரு பிரேரணையை கொண்டு வந்திருந்தார். இது பாஞ்சாலியின் அரசியல் வறுமையை காட்டுகிறது. பல்வேறு வகைப்பட்ட மாநாடுகள் அன்றாடம் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. ஒவ்வொரு மாநாட்டுக்கும் திட்டவட்டமான நோக்கம் இருக்கும் அந்த பிரதான நோக்கிலிருந்து வேறு திசைக்கு இழுத்துச் சென்று மாநாட்டை குழப்பும் பிரேரணைகள், பேச்சுக்களை சம்பந்தப்பட்டவர்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும். சமாதானத்தை நோக்கமாக கொண்டு வந்தவர்கள் திட்ட வட்டமாக பெண்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும் என்ற பாஞ்சாலியின் எதிர்பார்ப்பு அவரது அறியாமையிலிருந்து எழுந்ததேயாகும்

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் இலங்கையின் சனத்தொகையின் பாதிஅளவினரான பெண்களும் இலங்கைய அரசியலில் இணைந்து கொள்ள வேண்டும். இதற்கான தடைகள் என்ன? அவற்றை நீக்க என்ன வகையில் செயலாற்ற வேண்டும் என்று சமாதானத்திற்காக உழைப்பவர்கள் ஆழமாக ஆராய்ந்து தடைகளை நீக்க செயலாற்ற வேண்டியது அவசியமானதாகும்.

நமது மாநாட்டு தீர்மானம் (பக்கம் 5, பகுதி 4) பின்வருமாறு கூறுகிறது.

இலங்கையில் ஏற்படுத்தப் படக்கூடிய நிரந்தரமான சமாதானத்திற்கு நமது சமூகத்தின் பாதியாக வாழ்கின்ற பெண்களின் காத்திரமான முழுமையான பங்களிப்பு இன்றியமையாதது என்பதை இம்மாநாடு தீவிரமாக வலியுறுத்துகிறது. இந்த சமாதான முயற்சியில் பெண்களின் எல்லா மட்டத்திலுமான பிரதிநிதித்துவமும் பங்களிப்பும் உறுதி செய்யப்பட வேண்டும். இவ்வாறாக பெண்களின் பங்கு பற்றலுக்கு தடையாக இருக்கின்ற நிலைமைகளை அகற்றுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் நாம் தீர்மானிக்கிறோம்.

ஆனால் பாஞ்சாலி எழுதும் போது பெண்கள் தொடர்பான மாநாட்டு தீர்மானத்தை இருட்டடிப்பு செய்துள்ளார். அத்தோடு மட்டுமல்ல அன்னையர் முன்னணி உட்பட இன்னும் சில பெண்கள் அமைப்புக்கு ரொறன்டோ மாநாட்டுக்கான அழைப்பு, அனுப்பப்பட்ட விடயம் நன்கு தெரிந்து பின்னரும் கூட, "அன்னையர் முன்னணி" போன்ற அமைப்புகளை அழைத்து அவர்களது அனுபவங்களை பகிர்ந்து கொள்ளாமை ஒரு பெரும் குறைபாடு என்று பாஞ்சாலி கயமைத்தனமாக எழுதியுள்ளார்.

மாநாட்டில் பிள்ளை பராமரிப்பிற்கான வசதிகள் எதுவும் செய்யப்படவில்லை இதனால் பெண்களில் பங்குபற்றல் குறைவாக அமையும் என்று குறைப்பட்டுள்ளார் பாஞ்சாலி. பாஞ்சாலி இவ்வாறு நீங்கள் உணர்வது உண்மையாயின் இந்த ஆலோசனையை மாநாட்டுக்கு முன்னர் அமைப்பு கமிட்டியிடம் தெரிவித்து இதனை அமுல்படுத்துவதற்காக அல்லவா செயற்பட்டிருக்க வேண்டும்.

( செய்ய வேண்டியதை செய்ய வேண்டிய நேரத்தில் செய்யாமல் பிறகு தன் மீது

மட்டும் எந்தப் பிழையும் இல்லை என்ற மாதிரி ஒரு எழுத்து)

ஏப்ரல் மாநாட்டிற்கு பிள்ளை பராமரிப்பிற்கான வசதிகள் இல்லை என்ற காரணத்தால் எவரும் கலந்து கொள்ளாமல் விடவில்லை. அதேவேளை பாஞ்சாலியின் ஆலோசனையை எதிர்காலத்தில் நிச்சயம் கருத்திற்கெடுத்துக் கொள்ள வேண்டும்.

இச்சமயத்தில் மற்றோர் முக்கியமான விடயத்தை இங்கு மிக அவசியம் என நினைக்கிறேன். மாநாட்டு ஒழுங்குகள் பெண்கள் ஏன் பங்குபற்றலை ஊக்குவிக்கவில்லை. என்று குற்றம் சாட்டும் பாஞ்சாலி பிள்ளை பராமரிப்பு வசதி செய்யப்படவில்லை என்றே சுட்டிக் காட்டுகிறார். அத்தோடு இம்மாநாட்டில் விரல் விட்டு எண்ணக் கூடிய பெண்களே கலந்து கொண்டனர் என்று "குத்தி" க் காட்டுகிறார். ஏதோ மாநாட்டு அமைப்பு கமிட்டியின் தவறினால் தான் ஆண்களுக்கு சமமாக அணிதிரண்டு வரவேண்டிய பெண்கள் வராமல் போய் விட்டனர் என்ற கோபம் பாஞ்சாலிக்கு மாநாட்டுக்கு அழைக்கும் படி வேறு ஒரு பெண்ணின் பெயரைக்கூட சொல்லத் தவறிப் போன பாஞ்சாலி குதிரை மீது அமர்ந்து மலர்களை பார்க்கின்றவரின் நிலையில் இருக்கிறார்.

சமூகத்தின் அன்றாடப் பிரச்சனைகளில் பெண்களின் பங்குபற்றல் என்பது பொதுவாக விரல் விட்டு எண்ணக் கூடியதாயே இருக்கிறது. இதற்காக பலத்த சமூக காரணங்கள் இருக்கின்றன. இந்த அடிப்படைகளை புரிந்து கொள்ளாமல் பெண்களை அணிதிரட்டல் என்பது சாத்தியமில்லை. இன்னும் நாம் இங்கு புலம் பெயர்ந்து வாழ்கிறோம். கடந்த காலத்தில் சமூக சிந்தனையோடு சமூகவேலைகளில் ஈடுபட்டவர்கள் தமக்குத் தமக்கு கிடைத்த கசப்பான அனுபபவங்களோடு புலம் பெயர்ந்து வந்து சொந்த வாழ்க்கைக்குள் முடங்கிக் கிடக்கின்றனர். இவர்களில் ஆண், பெண் என்று இருபாலாரும் உள்ளனர் எனினும் பெண்களுக்கு கடந்த கால சமூக வாழ்வின் அனுபவம் மிகவும் கசப்பானது. இந்நிலையில் இந்த பெண்களையெல்லாம் மாநாட்டுக்கு வாருங்கள், ஊர்வலத்துக்கு வாருங்கள் என்ற அழைப்பிதழ்கள் அரங்குக்கு அழைத்து வரமாட்டாது. அல்லது பாஞ்சாலி கூறுவது போல பிள்ளை பராமரிப்பு வசதிகள் எல்லாம் செல்லுபடியாகாது.

பெண்களின் பங்கு பற்றல் மிகவும் ஆழமாக ஆராய்ந்து செயலாற்ற வேண்டிய பாரதூரமான விடயம். பாஞ்சாலி அதனை புரிந்துகொள்ளாமல் கொச்சைப் படுத்துகிறார்.

பிள்ளை பராமரிப்பு வசதிகள் எதுவும் இல்லாமலே இலங்கைப் பெண்கள் அரசியல், சமூக வேலைகளிலும் பெண் உரிமைக்காகவும் தொழிற்படுகின்ற அனுபவங்களை பாஞ்சாலி பகிர்ந்து கொள்ள வேண்டும் அடக்குமுறைக்கு எதிராக போராட வேண்டும் என முனையும் பெண்கள் பிள்ளை பராமரிப்பு வசதி இல்லை என்பதற்காக போராடாமல் இருந்து விடமாட்டார்கள் கடைசியாக பாஞ்சாலி நீங்கள் கூறியது போலவே பெண்விடுதலை, பெண்நிலை வாதம் பற்றி ஒரு உணர்த்திறன் வழங்கும் கூட்டத் தொடரை ஒழுங்கு செய்ய வேண்டியது அவசியம், இது ஆண்களுக்காக மட்டுமல்ல முக்கியமாக உங்களுக்காக. நீங்கள் முதலில் சரியாகப் புரிந்து கொண்டால் தான் பிறகு ஆண்களுக்கு விளக்க முடியும்.

# ஸ்காபரோவில் சதங்கை நர்த்தனாலய நாட்டிய நிகழ்ச்சி

*சிவ சுப்பிரமணியம்*

16.10.93 சனிக்கிழமை அன்று வின்சன் சர்ச்சில் கொலிஜியேற் அரங்கத்தில் சதங்கை நர்த்தனாலய நாட்டியப் பள்ளி மாணவர்களின் நாட்டிய நிகழ்ச்சி இடம் பெற்றது.

தமிழ் நிகழ்ச்சிகளின் வரிசையிலே இதுவும் இருபது நிமிடம் தாமதமாகத்தான் தொடங்கியது. இந்நேரம் சில விசிலடிப்புகள்.. சரியாக 5.55 க்கு விழா தொடக்கத்திற்கான விளக்குகள் ஏற்றப்பட்டும் விழா சரியான நேரத்திற்கு தொடங்கவில்லை. இதன் காரணம் நடன நிகழ்ச்சிக்காக மேடையில் கட்டப்பட்ட சேலைகளை அகற்றும்படி மின்சார இணைப்பாளர்கள் பணித்துள்ளார்களாம். அதனால் ஒரு நிகழ்ச்சிக்குத் தேவையான சேலைகளை விட்டு மிகுதி சேலையாவற்றையும் அகற்ற வேண்டிய சூழ்நிலை அவர்களுக்கு ஏற்பட்டு விட்டது. அதற்கு விழாக்குழுவினர் பொறுப்பல்ல என்பது பின்புதான் புரிந்தது.

அன்றைய அடைமழையின் மத்தியிலும் மண்டபம் நிறைந்த சூழ்நிலையிலே விழாத் தொடங்கியதும் எல்லோரும் நிகழ்ச்சிகளை ரசித்துப் பார்த்ததைக் காணக்கூடியதாக இருந்தது. தொண்ணூற்றுக்கு மேற்பட்ட பிள்ளைகள் பங்குபற்றிய இந்நிகழ்ச்சியில் மூன்றரை வயதுக் குழந்தைகள் தொடக்கம் பங்கேற்றனர்கள்.

இவ்விழாவிற்குப் பிரதம விருந்தினராக இராமநாதன் கல்லூரி முன்னைநாள் அதிபர் திருமதி புவனேஸ்வரி சச்சிதானந்தம் அவர்கள் தனது உரையின்போது நாம் எமது நாட்டிலிருந்து இங்கு வரும் போது எமது உடமைகள் யாவற்றையும் இழந்து வந்தோம் என்றுதான் இவ்வளவு நாளும் நினைத்திருந்தோம் ஆனால் இப்போதுதான் புரிகிறது. நாம் எல்லாவற்றையும் விட்டுவிட்டு வரவில்லை நமது விலைமதிப்பற்ற கலை, கலாச்சாரத்தையும் இங்கே கொண்டு வந்துள்ளோம். இதனை வாசு போன்ற சில கலைஞர்கள் காப்பாற்றுகிறார்கள் என்று. ஆம் இந்தக் கலை நிகழ்ச்சியினைப் பார்த்தவர்களுக்கு மட்டும்தான் புரிந்திருக்கும் திரு.வாசுவும் அவரது மாணவர்களும் அதனைக் காப்பாறுவார்கள் என்பது.

இந்த நிகழ்ச்சியில் நடந்த நிகழ்ச்சிகளை தனியாகப் பார்த்திருந்தால் இன்று எம்மவர்கள் தாங்கள் தாங்கள் பார்த்த நிகழ்ச்சிகள் தான் சிறந்தது எனக் கூறியிருப்பார்கள். அந்த அளவுக்கு நிகழ்ச்சிகள் அமைந்திருந்தன எனக் கூறினால் அது மிகையாகாது.

ஐந்து மணி நேரம் நாட்டிய நிகழ்ச்சி மட்டுமே நடந்த இந்த அரங்கத்தில் விசிலடிப்புகளும் கூக்குரல்களும் இல்லாது அமைதியாக குறிப்பிட்ட நேரத்தில் விழா முடிந்தது மனதுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. இப்படியான நல்ல நிகழ்ச்சிகளை நடத்தினால் விசிலடிப்பவர்களினதும் கூக்குரல் இடுபவர்களினது தொல்லையில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம்.

# உலகை வலம் வரும் செய்(ம)திகள்

## விஞ்ஞானப்பிரகாசன்

satellite எனப்படும் உபகோள்கள் மனித வாழ்வில் நிறையவே பின்னிப் பிணைந்துள்ளன. வீடுகளின் கொல்லைப் புறமாக கோப்பை வடிவிலான அன்டெனாக்கள் இருப்பதைக் கண்டிருப்பீர்கள். உபகோள்களில் இருந்து தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பெற்றுக் கொள்ள இவை உதவுகின்றன. பூமியைச் சுற்றி சந்திரன் வருவதுபோல இவையும் வலம் வருவதால் இவற்றிற்கு செய்மதி, உபகோள் என்று பெயர்.

உபகோள், செய்மதி எனப்படும் இந்த சட்டலைட்டுக்களைப் பற்றி முதலில் யோசித்தவர் ஆர்தர் சி.கிளார்க் என்ற விஞ்ஞான எழுத்தாளர். தற்போது இலங்கையை இரண்டாவது தாயகமாக வரித்துக் கொண்ட இந்த ஆங்கில எழுத்தாளர் மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் வேந்தராகவும் இருந்தவர். இவர் தான் முதன் முதலாக இலங்கையில் 'டிஷ் அன்டெனா' பயன்படுத்தியவர். 2001:The Space Odyssey என்ற இவரது நாவல் பின்னர் படமாக வந்தது. தற்போதைய விண்வெளிப் பயண திரைப்படங்களுக்கு எல்லாம் முன்னோடியாக இருந்தது அந்த நாவல்.

இவர் தான் முதன் முதலில் இந்த செய்மதிகள் மூலம் செய்திகளை உலகெங்கும் அனுப்பலாம் என்று முன்மொழிந்தவர். தற்போதைய வானொலி, தொலைக்காட்சி அலைகள் எல்லாம் மின்காந்த அலைகளாகவே அனுப்பப்படுகின்றன. இந்த அலைகள் நேர்கோட்டில் தான் பயணம் செய்கின்றன. பூமி உருண்டை வடிவானதாய் இருப்பதால் இந்த அலைகளால் உலகத்தைச் சுற்றி வர முடியாது. வானொலி அலைகளில் சிற்றலை வரிசை மட்டும் பூமியின் மேலுள்ள வளிமண்டலத்திலும் பூமியிலும் மாறி மாறித் தெறித்து உலகைச் சுற்றி வருகின்றன.

இந்த நிலையில் உலகம் முழுவதும் இந்த அலைவரிசையை அனுப்ப என்ன வழி என்று சிந்தித்த போது தான் உபகோள்கள் பற்றிய கருதுகோள் பிறந்தது. பூமியின் மேல் ரொக்கட் மூலம் ஒரு உபகோளைச் செலுத்தி விட்டால், பூமியில் இருந்து அனுப்பும் அலைகளை இந்த உபகோள் பெற்று பெரிய பரப்பளவிலான பிரதேசத்திற்கு ஒளி(லி)பரப்பு செய்யும். ஆனால் இதில் ஒரு சிக்கல் உண்டு. பூமி தன்னைத்தானே சுற்றிக் கொண்டுள்ளது. எனவே பூமியின் மேல் வான்மண்டலத்தில் உபகோளைச் செலுத்தினால் வேகமாறுபாட்டால் இரண்டும் தொடர்பிழந்து விடும். இதனால் பூமி சுற்றும் வேகத்தில் செல்லக் கூடிய விதத்தில் உபகோள்களை உருவாக்கினால் அவையும் பூமியுடன் சேர்ந்து சுற்றும் போது நிலையாகவே நிற்பது போன்று தோன்றும். இவற்றை geo stationary உபகோள்கள் என்பர். இவ்வாறான மூன்று உபகோள்களை பூமியின் மேல் சமதூர இடைவெளியில் நிறுத்தி விட்டால் உலகம் முழுவதும் தொடர்பை ஏற்படுத்தலாம் என்பதே ஆர்தர் சி. கிளார்க்கின் கனவு.

உதாரணமாக ஆஸ்திரேலியாவில் நடைபெறும் கிரிக்கட் பந்தயம் ஒன்றை ஆசியாவின் மேல் உள்ள உபகோள் ஒளிபரப்பும் போது அது ஜப்பான் முதல் கிழக்காபிரிக்கா வரையான பிரதேசத்திற்கு ஒளிரப்பலாம். ஆனால் அதை ஐரோப்பாவில் உள்ளவர்கள் பெற வேண்டுமாயின் ஐரோப்பாவின் மேல் உள்ள உபகோளுக்கு அந்த அலைகள் அனுப்பப்பட ஐரோப்பா ரசிகர்களுக்கு அந்த நிகழ்ச்சி ஒளிரப்பாகும். அதை வட அமெரிக்காவில் உள்ளவர்கள் பெற வேண்டுமாயின் ஐரோப்பாவின் மேல் உள்ள உபகோள் அதை வட அமெரிக்க பிரதேசத்தை கவனிக்கும் உபகோளுக்கு அனுப்ப அது அந்த அலைகளை வட அமெரிக்காவில் விநியோகிக்கும். இப்படி மூன்று உபகோள்களை மட்டும் கொண்டே முழு உலகிற்கும் ஒளிபரப்பு செய்யலாம்.

இந்த உபகோள்கள் தொலைத் தொடர்புகளில் தான் முக்கியமான பங்கு எடுக்கின்றன எனினும் வேறு வேலைகளுக்கும் பயன்படுகின்றன. இந்தியா போன்ற நாடுகள் இங்குள்ள விற்பனை நிலையங்கள் ஒரே இடத்தில் வீடியோ வாடகை முதல் திருமணப் பொருத்தம் வரை பார்ப்பது போல, Multi Purpose உபகோள்களை அனுப்புகின்றன. இவை மூலம் தொலைத்தொடர்பு, காலநிலை போன்ற பல செயற்பாடுகள் செய்யப்படுகின்றன. மேற்கு நாடுகள் பல தனித்தனித் தேவைகளுக்கு என தனியான செய்மதிகளை அனுப்புகின்றன. நாடுகள் மட்டுமன்றி தொலைத் தொடர்பு நிறுவனங்களும் சொந்தமான செய்மதிகளை விண்ணில் ஏவுகின்றன.

தொலைபேசித் தொடர்புகளுக்கு இவை பயன்படுவதால் தான் வட அமெரிக்காவிலிருந்து எங்களால் கொழும்புக்கு தொடர்பு கொள்ள முடிகிறது. சில தொலைபேசி இணைப்புகளுக்கு நேரடி உபகோள் தொடர்பு உண்டு. உதாரணமாக கப்பல்களில் இருப்பவர்கள் உலகம் பூராவும் பேசுவது இந்த வகையான தொலைபேசிகளால் தான். கிட்டு தனது தலைவர்களுடனும் பாரிஸ் உடனும் தொடர்பு கொண்டது இவ்வாறான தொலைபேசி மூலமாகத்தான். சாதாரண தொலைபேசிக்குள்ளால் செய்யக்கூடிய அனைத்தும் உலகம் பூராவும் அனுப்பக் கூடியதாயிருப்பதற்கு காரணம் இந்த உபகோள்கள் தான்.

இதை விட காலநிலை முன்னறிவிப்புகளுடன் தொலைக்காட்சிப் படங்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள். மேகங்கள் செல்லும் விதத்தைக் கொண்டு கால நிலை மாற்றத்தை அறிந்து கொள்ள இந்த உபகோள்கள் உதவுகின்றன. அத்தோடு கப்பற் போக்குவரத்தின் போது. கப்பல்கள் தங்களது நிலையை அறிந்து கொள்ள உதவியான உபகோள்களும் உண்டு. இந்த உபகோள் களுடன்

தொடர்பு கொண்டால் பூமியின் எந்தப் பாகத்தில் நீங்கள் நிற்கிறீர்கள் என்பதை துல்லியமாக அறிந்து கொள்ள முடியும். இந்த கருவிகள் தற்போது சில ஜீப்களில் பொருத்தப் பட்டிருக்கின்றன. இதனால் பாலைவனம் ஒன்றிலோ காடொன்றிலோ வழிதவறினாலும் உங்களால் இலக்கை அடைய முடியும்.

எண்ணெய் வளங்கள், கடலில் மீன் வளங்கள் போன்றவற்றைக் கூட அறிந்து கொள்ளக் கூடிய வலிமை வாய்ந்த செய்மதிகள் உருவாகி விட்டன. இவற்றை விட உளவு பார்ப்பதற்கு விசேடமான செய்மதிகள் அனுப்பப்படுகின்றன. இவை மற்ற நாடுகளின் இராணுவ நடமாட்டம், ஆயுதக் கொள்வனவு, விமானங்களின் நடமாட்டம் என்பவற்றை அறியப் பயன்படுகின்றன. மிகத் துல்லியமாகப் படம் பிடிக்கும் கருவிகளை இந்த செய்மதிகளில் பொருத்தி தெளிவான படங்கள் கூட எடுக்கலாம்.

★ ★ ★

ரீகன் காலத்தில் உபகோள்களில் லேசர் கதிர் கருவிகளைப் பொருத்தி யுத்தம் செய்யும் முறை பற்றியும் ஆலோசிக்கப்பட்டது. Star wars என்ற செல்லப் பெயரில் Strategic Defence Initiative (SDI) என்றழைக்கப்படும் இந்த திட்டம் பின்னர் கைவிடப்பட்டது.

★ ★ ★

செய்மதிகளின் வலிமை குறைவாக இருக்கும் போது பூமியில் உள்ள அன்டெனாக்கள் உருவத்தில் பெரியனவாயும் சக்தி வாய்ந்தவையாகவும் இருக்க வேண்டும். அப்போது தான் அவற்றால் வருகின்ற மின்னலைகளை தெளிவாக கிரகிக்க முடியும். செய்மதிகளின் வலிமை மிகவும் அதிகரிக்கும் போது அன்டெனாக்கள் வெறும் கோப்பை வடிவில் ஓரிரு அடிகள் விட்டமுடையனவாக இருந்தாலே போதும். இவ்வாறான தொலைக்காட்சி செய்மதிகளை ஏவி வட அமெரிக்காவில் நானூறுக்கும் மேற்பட்ட அலைவரிசைகளில் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பும் முயற்சி நடைபெறுகிறது. இதனால் உங்கள் கூரையின் மேலோ, ஜன்னல் மேலோ உங்கள் சாப்பாட்டுக் கோப்பை அளவிலான சிறிய அன்டெனாவைப் பொருத்தி நிகழ்ச்சிகளைப் பார்க்க முடியும். இந்த செய்மதி தொழிற்பட்டால் சாதாரண தொலைக்காட்சி, கேபிள் தொலைக்காட்சிகளை மக்கள் கைவிட்டுவிடுவார்கள் என்று இந்த செய்மதிகளுக்கு Death Star என்று பெயரிட்டிருக்கிறார்கள்.

★ ★ ★

முன்பு 83 கலவரத்தின் போது யாழ் நூலகம் எரிந்த படங்களை தாங்கள் செய்மதி மூலமாக பார்த்ததாக பல ஐரோப்பாவிற்கு புலம் பெயர்ந்த தமிழர்கள் சொல்லக் கேட்டேன். அவர்களின் கருத்துப்படி அந்தப் படங்கள் உபகோள்களால் படம் பிடிக்கப்பட்டன. அது தவறான கருதுகோள். நிருபர்கள் நேரடியாகப் பிடிக்கும் படத்தை பின்னர் செய்மதி மூலம் மற்ற நாடுகளுக்கு அனுப்புகிறார்கள். மற்றும்படி உபகோள் மூலம் வானிலிருந்து படங்களை தெளிவாகப் படம் பிடிக்க முடியும். ஆனால் அவை மேலிருந்து பார்க்கும் போது எப்படியாக தோன்றுமோ அவ்வாறே படம் பிடிக்கப்படும். பக்கத்திலிருந்து படம்பிடிக்கும் என்று கருதினால் அது ஒளியியல் விதிகளுக்கு முரணானது.

★ ★ ★

முன்பு ஸ்கைலாப் எனப்படும் விண்வெளி ஆய்வுகூடம் செயலிழந்து மீண்டும் பூமியில் மோதுவது பற்றி பெரும் பரபரப்பு வந்திருந்தது. இந்தியாவில் பலர் உலகம் அழியப் போகின்றது என்று துக்கம் கொண்டாடி தங்கள் சொத்துக்களை மலிவான விலையில் விற்றிருந்தார்கள். தற்போது சீன செய்மதி ஒன்று செயலிழந்து பூமியில் பிரவேசிக்க உள்ளது. இது என்ன பாதிப்பை ஏற்படுத்தும் என்பது விழுந்த பின்னர் தான் தெரியும்

★ ★ ★

இந்த செய்மதிகளைப் பயன்படுத்தித் தான் பல பத்திரிகைகள் வெவ்வேறு பிராந்தியங்களில் தங்கள் பத்திரிகைகளை ஒரே நேரத்தில் வெளியிடுகின்றன. இதேயோசனையை வீரகேசரியும் கொண்டிருந்து ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் ஒரே நேரத்தில் தினசரிப் பத்திரிகை விட முயன்றால் இங்கே மறுபிரசுரக்காரர் பலர் துண்டைக் காணோம், துணியைக் காணோம் என்று ஓட வேண்டியதுதான்.



# ஜே.வி.பி.யின் வரலாற்றுக் கதை

வசந்த திசாநாயக, பற்றிக்பெர்ணன்டோ
சரத் த சில்வா, ரஞ்சித் குமார

தமிழாக்கம்; செ. லோகநாதன்

***அரசாங்கம் பாரிய அளவிலான அடக்குமுறைக்கு தயாராவதாக செய்திகள் பரவுகின்றன. ஜேவியும் அதற்கு முகங் கொடுக்க தயாராகிறது***

ஜேவிபி யின் செயல் முறைகள் அதிகரிக்கும் போது, அரசாங்கத்தின் அடக்குமுறை நடவடிக்கைகளும் அதிகரிக்கின்றன. ஆயினும் அவை ஜேவிபியின் செயல் முறைகளை முற்றாக தகர்ப்பவையாகக் காணமுடியவில்லை. 1986ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18ம் திகதி தேசிய புலனாய்வு பிரிவு (NIB) ஜேவிபியின் செய்கைகள் தொடர்பாக விளக்கமான அறிக்கையொன்றை பாதுகாப்பு அமைச்சுக்கு சமர்ப்பித்தது. ஆனாலும் அவ் அறிக்கைக்கேற்ப பதில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டதாக தெரியவில்லை. ஆனால் அரசாங்கம் ஜேவிபிக்கு எதிரான தமது "மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதல்களை" தீவிரப்படுத்தியது. கைது செய்வது நாடு பூராவும் இடம் பெற்றது. உண்மையிலேயே அனேக இடங்களில் ஜேவிபிக்கு எதிரான நடவடிக்கைகள் அரசாங்கத்தின் வழிகாட்டல்களுக்கு அமைய அல்ல பெரும் பாலும் அவ்வப் பிரதேசத்து பொலீசாரின் அவசியங்களுக்கு ஏற்பவே இடம் பெற்றன. எவ்வாறாயினும் நாடு பூராவும் கைது செய்தலும், தடுத்து வைத்தலும் இடம் பெற்றன. 1987ம் ஆண்டு ஜனவரி மாதம் 18ம் திகதி பிபிசி செய்தியின்படி நாட்டின் தென்பகுதியில் மட்டும் கைது செய்யப்பட்டிருந்தோர் தொகை 3000க்கும் அதிகமாகும். இதனிடையே 1987ம் ஆண்டு பெப்ரவரி மாதம் அரசாங்க அதிபர்களின் மாநாடு ஒன்று நடைபெற்றது. ஜேவிபியின் கூற்றுப்படி ஜேவிபியை அடக்குவதற்கான நடவடிக்கைகள் பற்றி ஆராயவே இம்மாநாடு நடாத்தப்பெற்றது.

இவ்வாறான நிலைமைகளின் கீழ் பாரிய அளவிலான அடக்குமுறை நெருங்கிக் கொண்டிருக்கிறது என்னும் முடிவுக்கு வந்த ஜேவிபி தலைமை அதற்கமைய செயல்படுமாறு கட்சிக்கு ஆலோசனை வழங்கியது. கட்சிக்கு புதிதாக அங்கத்தவர்களைச் சேர்ப்பதை இடை நிறுத்தம் செய்வதாகவும் 1987 பெப்பரவரி மாதத்தில் தீர்மானிக்கப்பட்டது.

1987ம் ஆண்டு மார்ச் மாதம் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி வகுப்புகள், உரை நிகழ்த்தல், கல்வி முகாம்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டன. இதற்குப் பதிலாக ஊழியர்களுக்கு ஆயுத பயிற்சி வழங்குவதற்காக முழுப் பலத்தையும் பிரயோகிக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டங்களிலிருந்தும் ஆயுதப் பயிற்சி பெற்ற 25 பேரை பிரதான குழுவுக்கு வழங்குமாறும் அறிவிக்கப்பட்டது. ஆனாலும் இதனை நிறைவேற்ற முடியவில்லை.

1987 ஏப்பிரல் மாதம் அளவில் சகல பிரதேசங்களிலிருந்தும் தகவல்களைத் திரட்டி அவற்றை மத்தியப்படுத்தலையும் செய்து முடிக்க வேண்டும்எனவும்தீர்மானிக்கப்பட்டது. 1971 ஏப்பிரல் கிளர்ச்சியை நினைவு கூர்ந்து 1987 ஏப்பிரல் 5ம் திகதி விஜேவீரவின் கசெட் ஒன்றும் வெளியிடப்பட்டது. உலகம் பூராவும் ஜனநாயக அலை மோதுவதாகவும் அடுத்த போராட்டம் இலங்கையிலேயே எனவும் இலங்கை புரட்சியை கருத்தரித்துள்ளது எனவும் நாம் தற்போது போராட்டத்தின் இறுதிக் கட்டத்தில் உள்ளோம் எனவும் விஜேவீர கூறியிருந்தார்.

1987ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் நாடு பூராவும் இரகசிய உரையாடல்கள் நடைபெற்றதோடு ஏற்படும் நிலைமைகளுக்கு முகங் கொடுக்க அனைவரையும் தயாராக இருக்குமாறும் அறிவிக்கப்பட்டது. பாதுகாப்பான ஸ்தானங்களையும் திருமணம் செய்தவர்களாயின் குடும்பத்தை தங்க வைப்பதற்கான இடங்களை தேடிக் கொள்ளுமாறும் ஆலோசனை வழங்கப்பட்டது. அவ்வாறே அனைவரிடமிருந்தும் உறுதி மொழியும் பெறப்பட்டது.

**தேசபக்த மக்கள் இயக்கம்**

ஜேவிபியின் செயல்கள் வளர்ச்சி பெறுவதுடன் கூடவே அதன் ஆயுதப் பிரிவை விசேட குணம்சம் பொருந்திய ஆயுத அவயமாக மாற்றவேண்டிய அவசியமும் ஏற்படுகிறது. இதற்கமையவே 1987ன் ஆரம்ப பகுதியில் தேசபக்த மக்கள் இயக்கம் ஸ்தாபிக்கப்பட்டது. தேசபக்த மக்கள் இயக்கம் உருவாக்கப்பட்ட பின்னர் தனி நபர் படுகொலைகள் உட்பட சகல ஆயுத நடவடிக்கைகளும் தேசபக்த மக்கள் இயக்கத்தாலேயே மேற் கொள்ளப்பட்டது.

ஜேவிபியும் தேசபக்த மக்கள் இயக்கமும் ஒன்றுக்கொன்று தொடர்பு அற்ற வேறுபட்ட இரு அமைப்புகள் எனக் காண்பிப்பதற்கு ஜேவிபி முயற்சித்த போதிலும் தேசபக்த மக்கள் இயக்கம் என்பது ஜேவிபியின் ஆயுதக் கரமே என்பது எவருக்குமே இரகசியமான ஒன்றல்ல. "தாய் நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாப்பதற்காக தேசபக்த மக்களால் உருவாக்கப்பட்ட அமைப்பே" என ஜேவிபி அதனை அறிமுகப்படுத்தியது. ஆனால் தேசபக்த மக்கள் இயக்கம் என செயல்பட்டது ஜேவிபியே அல்லது போனால் ஜேவிபியின் ஆயுதப் பிரிவே என்பது பின்னர் நிருபணமாகியது. ஜேவிபியின் அரசியல் குழு உறுப்பினரும் அதன் ஆயுதப் பிரிவின் தலைவருமான சமன் பியசிறி பெர்ணன்டோ அவர்களை தேசபக்த மக்கள் இயக்கத்தின் தலைவராக கீர்த்தி விஜேபாகு என்னும் பெயரில் செயல்பட்டார்.

தேசபக்த மக்கள் இயக்கத்தின் மத்தியப்படுத்தப்பட்ட வழிகாட்டலின் அதன் இணை உறுப்பாக 'தேசபக்த மக்கள் ஆயுதப் படையணி" என்னும் பெயரில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆயுதக்

குழுக்கள் பிரதேச ரீதியாக உருவாக்கப்பட்டன.

'தேசபக்த மக்கள் ஆயுத படையணியின் இணைந்த ஆணையிடும் தலைமையகம்" மூலமாகவே இப்பிரதேச ஆயுதக்குழுக்களுக்கு கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன. ஒவ்வொரு மாவட்டங்களிலும் உருவாக்கப் பட்டிருந்த தேசபக்த ஆயுத படையணிகள் பின்வருமாறு .

கொழும்புரஞ்சித் பராக்கிரம படையணி
கண்டி கெப்பட்டிபொல படையணி
காலி கமல பந்து படையணி
மாத்தறை சுசில் விக்கிரம படையணி
குருணகலை நிமல் கருணாதிலக படையணி
களுத்துறை கருணாரத்ன படையணி
அநுராதபுரம் பத்மசார படையணி
மாத்தளை முனிதாச படையணி
திருகோணமலை விமலரத்ன படையணி
அம்பாந்தோட்டை குணசேன வர்ண பட்டபந்தி படையணி

பின்னர் இப்படையணிகளுக்கு மேலதிகமாக மாணவர் பிரிவின் நிமர் பாலசூரிய படையணி, பிக்குமார் முன்னணியின் குடகஹபொல படையணி என்னும் பெயர்களில் இரு படையணிகள் ஸ்தாபிக்கப்பட்டன.

## ஆயுதங்களைப் பெறுவதற்காக இராணுவ முகாம்களையும் பொலீஸ் நிலையங்களையும் தாக்குதல்

ஆரம்ப காலத்தில் களவுகள் மூலமாக சிறிய அளவிலேயே ஆயுதங்கள் சேகரிக்கப்பட்டன. அவை பிரதானமாக குழல் துப்பாக்கிகளேயாகும். காலிப் பிரதேசத்தில் விலைக்கு வாங்கிய SMG ஒன்றுதான் முதன் முதலில் ஜேவிபியிடம் இருந்த தானியங்கி ஆயுதமாகும். பின்னர் ஆயுதப் படையுள் இருந்த ஜேவிபி அங்கத்தவர்கள் தானியங்கி ஆயுதங்கள் ஒன்று இரண்டை களவாடிக் கொண்டு வந்தனர். 1987 ஜனவரி மாதம் பெந்தோட்டை பொலீஸ் நிலையத்திலேயே இவ்வாறான முதலாவது திருட்டு இடம் பெற்றது. இங்கு 303 ரக றைபிள் ஒன்றும் 10 குண்டுகளும் களவாடப்பட்டன.

1987ம் ஆண்டு மார்ச் மாதத்தில் கொத்தலாவலை பாதுகாப்பு பீடத்திலிருந்து 35 குண்டுகளுடன் T 56 ரக றைபிள் ஒன்றும் பனாகொடை முகாமிலிருந்து 60 குண்டுகளுடன் இன்னும் ஒரு T 56 ரக றைபிளும் முகத்துவாரத்தில் அமைந்துள்ள ரெக்ஹவுஸ் முகாமிலிருந்து இன்னொன்றுமாக களவுகள் பல இடம் பெற்றன. ஆயினும் இவ்வாறான களவுகள் மூலமாக மட்டும் ஜேவிபியின் மதிப் பீட்டின்படி வளர்ந்து வந்த நிலமைகளுக்கு முகங்கொடுக்கக் கூடிய அளவு ஆயுதங்களை பெற்றுக்கொள்வது கடினமாகும். "நெருங்கிக் கொண்டிருக்கும் பாரிய அடக்கு முறையை" எதிர்கொள்ள வேகமாகவும், பெருமளவிலும் ஆயுதங்களை சேகரிப்பது அவசியமாகும். ஆதலால் துரிதமாகவும், அதிக அளவிலும் ஆயுதங்களைப் பெறுவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட பாதை இராணுவ முகாம்களையும் பொலீஸ் நிலையயங்களையும் தாக்கி ஆயுதங்களைக் கைபற்றுதலாகும். இவ்வாறாக இராணுவ முகாம்களையும் பொலீஸ் நிலையங்களையும் தாக்குவது ஆயுதங்களை பெற்றுக் கொள்ளும் பாதையாக மட்டுமன்றி ஜேவிபியின் சக்தியை பரீட்சித்துப் பார்ப்பதையும் அவற்றுக்கு பெரும் பிரச்சாரத்தை பெறுவதையும் நோக்கமாகவும் கொண்டிருந்தது.

தேசபக்த மக்கள் இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் ஆயுதங்களைப் பெறுவதற்காக இராணுவ முகாம்களும் பொலீஸ் நிலையங்களும்தாக்கப்பட்டன. 1987 ம் ஆண்டு ஏப்பிரல் 14 ம் திகதி கண்டியில் பல்லேகெல என்னுமிடத்தில் அமைந்திருந்த இராணுவ முகாமே முதலாவதாக தாக்கப்பட்டது. இத் தாக்குதல் மூலம் T 56 ரக தானியங்கி றைபிள் 12ம், SMG 7ம் கைப்பற்றப்பட்டன.

காலி கோட்டையும், மகியங்கனை, குடா ஓயா பயிற்சி முகாம்களும் தாக்கப்பட்டபோதிலும் அவை அவ்வளவு தூரம் வெற்றி அளிக்கவில்லை. காலி கோட்டை மீது தொடுக்கப்பட்ட தாக்குதலை பூரணமாக தோல்வியிலேயே முடிந்தது.

ஆரம்பத்தில் தொடுக்கப்பட்ட தாக்குதல்கள் திட்டமிடப்பட்ட போதிலும் பயிலுநிலைச் சுபாவத்தையே கொண்டிருந்தன. தாக்குதல்களை மேற்கொண்ட சில இடங்களில் அதே தினம் காலையிலே துப்பாக்கிகளைச் சேகரித்து தாக்குதல்களுக்காகச் சென்றனர். அவ்வாறே தாக்குதல்களுக்குச் சென்றவர்களும் அவ்வளவு தூரம் பயிற்சி பெற்றிருக்கவில்லை. யுத்த விவகாரம்தொடர்பான செய்கை முறைப் பயிற்சிகளையும் பெறவில்லை. ஆரம்ப காலத்தில் உள்ளுக்குள் இருந்து தகவல்களைப் பெற்று தாக்குதல்களை ஒழுங்கு படுத்தியது பிற்காலத்திலேயேயாகும். சில சந்தர்ப்பங்களில் தாக்குதல்களுக்காகச் சென்றவர்கள் இறுதிநேரம் வரை தாம் எதற்காகச் செல்கிறோம்என்பதைக்கூட அறிந்திருக்கவில்லை. குழல் துப்பாக்கிகளும் குழல் நீளத்தால் வெட்டிக் குறைக்கப்பட்ட துப்பாக்கிகளும்மட்டுமே பாவிக்கப்பட்ட பிரதான ஆயுதங்களாகும்.

வீடுகளிலுள்ள துப்பாக்கிகளையும் தோட்டாக்களையும் அபகரித்துச் செல்லுதல் 1987ம் ஆண்டு மே மாதம் அளவில் தீவு பூராவும் ஆரம்பமாகியது. இவை தேசபக்த மக்கள் இயக்கத்தின் பெயராலேயே செய்யப்பட்டன. இவ்வாறான தாக்குதல்களும் அபகரிப்புகளும் காரணமாக அரசாங்கம் மட்டுமன்றி ஏனைய அனைவரும் ஜேவிபி பற்றி மிகை மதிப்பீடு செய்தனர். ஜேவிபியினரும் தம்மைப் பற்றி பெரிதாக எண்ணத் தொடங்கினர். ஆயினும் ஜேவிபி எதிர்ப்பார்த்தவாறு பாரிய அடக்குமுறை நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளவில்லை. நிலவிவந்த அடக்குமுறை ஓரளவுக்கு அதிகரிக்கப்பட்டது மட்டுமேயாகும்.

களவு, அபகரிப்பு தவிர கொழும்பு பாதாள உலகத்திலிருந்தும் ஆயுதங்கள் விலை கொடுத்து வாங்கப்பட்டன. (ஆயுத விற்பனை, போதை வஸ்து கடத்தல், கொலை, சூது, விபசாரம் சட்டவிரோத ரீதியாக சர்வதேச தொடர்புடன் செயல்படுவதை சிங்கள மொழியில் பாதாள உலகம் என அழைக்கப படுகிறது) ஜேவிபி யினர் பாதாள உலகத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தி ஆயுதங்களை விலைக்கு வாங்கியது மட்டுமல்ல பாதாள உலகத்திலிருந்து கொலைகாரர்களையும் கூலிக்குப் பெற்றுக் கொண்டார்கள் எனவும் தகவல்கள் உள்ளன.

(தொடரும்)

மத பீடங்களில் காதல் கூச்சல் போடுபவர்கள் ஒரு புறம்.. இன்னுமொரு சுவாரஸ்யமான சம்பவம் கேள்விப்பட்டேன். நம்மாளு ஒருவர் சப்வேயில் போய்க் கொண்டிருந்த போது ஒரு அழகான பெண் வந்து பேச்சுக் கொடுத்தாள். அழகான பெண் தானாகவே வந்து பேசுகிறாள்.. பின்னர் விலாசம் கேட்கிறாள்.. எப்போ வீட்டில் நிற்பாய் என்கிறாள்.. எப்படி இருக்கும். . நம்மவரோ கிறங்கிப் போனார். தான் வார இறுதியில் வீட்டில் நிற்பதாக கூறி விட்டு வீடு வந்து சேர்ந்தார். அவரது பிரச்சனை தற்போது வீட்டில் இருக்கும் அசமந்தங்களை எப்படி வெளியே கிளப்புவது என்பது தான்.. அழகான பெண் தனியே வரும் போது வீட்டில் கல்லுப் பிள்ளையார் மாதிரி மற்றவர்கள் உட்கார்ந்திருந்தால் என்ன தான் செய்ய முடியும்? ஒரு மாதிரி மற்றவர்களை வெளியே அனுப்பி விட்டு மன்னன் காத்திருந்தான். வந்து கதவைத் தட்ட மெய் சிலிர்த்துப் போய் கதவைத் திறந்தால் பெண் இன்னொருவருடன்... என்னவென்று பார்த்தால் அவர்கள் மதம் பரப்புகின்றவர்கள். இந்த ஜீவனை 'பாவப் படுகுழியிலிருந்து மீட்க' வந்தவர்கள். இவரோ 'மோக பாவம்' செய்வதற்கு தயாராக நின்றிருக்கிறார்..

★ ★ ★

சரி.. சென்ற வாரம் இரண்டாம் தடவையாக புளூஜேய்ஸ் உலகத்தொடர் போட்டிகளில் வெற்றி வாகை சூடியிருக்கிறார்கள். ஏதோ உலக நாடுகள் முழுவதையும் வென்ற மாதிரி.

# போடு புள்ளடி! வீட்டுக்கு நேரே!

*அறுஞர் கல்லாநிதி கியூறியஸ் ஜி*

. பேஸ்போல் விளையாட்டில் சிறந்து விளங்கும் ஜப்பான், கியூபா போன்ற நாடுகள் எதுவுமே விளையாடாமல் வட அமெரிக்காவின் இரு நாடுகள் மட்டுமே விளையாடி விட்டு உலக கிண்ணம் என்கிறார்கள். ஐரோப்பாவில் உள்ள நாடுகளின் குழுக்கள் விளையாடும் உதைபந்தாட்டப் போட்டிக்கு ஐரோப்பியக் கிண்ணம் என்று தான் பேர். அவர்கள் கூட உலகக் கிண்ணம் என்பதில்லை.

★ ★ ★

இப்போது கொஞ்சம் பேஸ்போல் எனக்கு பிடிபட ஆரம்பித்திருக்கிறது. விளையாட்டு வீரர்களை அடையாளம் காணத் தொடங்கியிருக்கிறேன். சிறு வயதில் யார் பாடினாலும் அது சௌந்தரராஜனும் சுசீலாவும் தான். பின்னர் தானே மற்றக் குரல்களை அடையாளம் காண முடிந்தது. அது மாதிரி... ஒரு தடவை ஜோர்ஜ் பெல் விளையாடுகிறானா என்று ரசிகர் ஒருவரைக் கேட்ட போது ஒரு மாதிரிப் பார்த்து 'அவன் வேறு குழுவில் விளையாடப் போய் கன காலமாகிறதே' என்று சொன்னதோடு எனக்கு வாழ்க்கையும் பேஸ்போலும் வெறுத்துப் போய் விட்டன.

★ ★ ★

Die hard fans க்காக.... இந்த உலக கிண்ணத்தை ஜேய்ஸ் தான் தொடர்ந்து தட்டிப் பறித்தார்கள் என்றில்லை. New York Yankees 49ம் ஆண்டு முதல் 53ம் ஆண்டு வரை ஐந்து தடவைகள் தொடர்ந்து வென்றிருக்கிறார்கள். அதே குழு 1936 முதல் 39 வரை நான்கு தடவைகள் தொடர்ந்து வென்றிருக்கிறது. Oakland A's 72 முதல் 74 வரை மூன்று தடவைகள் வென்றிருக்கிறார்கள்.

★ ★ ★

நம்மூரில் எல்லே என்ற விளையாட்டு இருக்கிறது. மூங்கில் தடியால் பந்தை அடித்து ஓடுதல்.. சரியாக பேஸ்போல் மாதிரித் தான். இது தான் நம் நாட்டில் தேசிய விளையாட்டு. இந்த போட்டி ஒன்றில் சிறு வயதில் கியூறியஸ் விளையாடியிருக்கிறான். நம்மூரில் இந்த விளையாட்டுப் போட்டி நடத்துமாறு விளையாட்டமைச்சு அறிவித்திருக்க வேண்டும். இதற்கு ஒரு பயிற்சியாளர் நம்மூருக்கு வந்து இரண்டு நாள் பயிற்சி தந்ததும் நாங்கள் தயார். ஆனால் ஒரு பெரிய 'கச்' ஒன்றை சிறுவயதில் ஓடிப் பிடித்தது எல்லாம் இநத புளூஜேய்ஸ் ரசிகர்களுக்கு எங்கே தெரியப் போகிறது. சொன்னாலும் இவர் புளுகிறான் என்பார்கள் என்பதால் தன்னடக்கத்துடன் அதை என் வாயால் சொல்வதை தவிர்த்துக் கொள்கிறேன்.

★ ★ ★

புளூ ஜேய்ஸ் வென்றதும் ரொறன்ரோ துள்ளிக் குதிக்கிறது. இத்தனைக்கும் ஒருவரைத் தவிர மற்றவர்கள் எல்லாம் வேறு இடங்கள், நாடுகளிலிருந்து வந்தவர்கள். குழுவை சொந்தமாக்கியுள்ள லாபாட் பியர் நிறுவனம் மட்டும் ரொறன்ரோவில் உள்ளது. விளையாட்டே வியாபாரம் ஆகிய பின்னர் விளையாட்டுணர்வு என்ற விடயமே இல்லாமல் போகிறதே.



இன்று அரசியல்வாதிகளும் இந்த வெற்றியை கனடாவின் வெற்றி என்ற மாதிரி துள்ளுகிறார்கள். ஆனால் வெளிநாட்டவர்கள், அகதிகள் பற்றி சொல்பவர்கள் இந்த குழுவில் பலர் கறுப்பர், வெளிநாட்டார் என்பது பற்றி மறந்து போகிறார்கள்.

★ ★ ★

புளூ ஜேய்ஸ் என்றதும் வேலை செய்யும் இடத்தில் அனைவரும் உயிரை விடுகிறார்கள். வேலை நேரத்தில் ரேடியோவில் நேர்முக வர்ணனைக்காக அலைவார்கள். போட்டி முடிவுகளை தெரிய வேண்டும் என்ற துடிப்பில் என்னிடம் கேட்டால் "who cares?" என்று சொல்வேன். அடிக்காத குறையாக பச்சைத் தூசணத்தால் அபிசேகம் செய்வார்கள். ஒரு ஓட்டம் எடுத்தால் போதும்.. கூச்சல் போட்டு துள்ளிக் குதிப்பார்கள். இந்த விளையாட்டில் வெற்றி பெறுபவர்கள் பற்றி பந்தயமும் பிடிப்பார்கள்.

நேர்முக வர்ணனையைக் கேட்காத ஒரு சிலரில் நானும் ஒருவன்.

★ ★ ★

விளையாட்டு என்றால் இப்படி அலைகின்றவர்கள் ஒரு அரசியல், தேர்தல் விடயம் என்றால் அலட்டிக்கவே மாட்டார்கள். போன முறை அமெரிக்கத் தேர்தலின் போது வேலை நேரத்தில் அடிக்கடி செய்தி கேட்டு யார் வெல்கிறார்கள் என்று அடிக்கடி 'ஒலிபரப்பு' செய்தது நானும் இன்னொரு பர்மியனும். அப்போது அவர்கள் தங்கள் பங்கிற்கு 'Who cares?' என்று சொல்லாத குறையாகக் கேட்டார்கள். ஒரு தலைவிதியை, அன்றாட வாழ்வை பாதிக்கின்ற விடயம் பற்றி அலட்டிக்காமல் எப்படி இவர்களால் ஒரு விளையாட்டில் இவ்வளவு அக்கறை செலுத்த முடிகிறது?

★ ★ ★

இம்முறை வேலை செய்த பர்மியன் 'டாக்டராக' படிக்கப் போய் விட, நான் மட்டுமே நிமிடத்திற்கு நிமிடம் கனடிய தேர்தல் பற்றி கேட்டு முடிவுகளை சொல்ல வேண்டியிருந்தது. மெஷின் வேலை செய்கின்ற போது அந்தச் சத்தத்தினுள் பாரமான ரேடியோவை காதோடு வைத்து கேட்டுக் கொண்டிருக்க வேண்டிய நிலை.. எங்களுக்கு இருக்கின்ற ஆர்வம் இவர்களுக்கு ஏன் இல்லை? போன வாரம் தான் ஆளுக்கு ஆள் ரேடியோவை வைத்துக் கொண்டு துள்ளிக் குதித்தும் முகத்தைத் தொங்கப் போட்டும் கொண்டு அலைந்தார்கள். சொந்த நாடு.. சொந்த அரசாங்கத்திற்கு தேர்தல்.. அதை விட விளையாட்டு முக்கியம் என்றால்... ராமன் ஆண்டாலும் ராவணன் ஆண்டாலும் இவங்களுக்கு என்ன கவலையோ?

போகிற போக்கில் தேர்தலில் புளூ ஜேய்ஸ் கட்சிக்கு வோட்டுப் போடுவார்கள் போலிருக்கிறது. அது தான் ஸ்டாரில் ஒரு காட்டூன் வந்தது. Cito Gaston For PM என்று.. அதாவது புளூ ஜேய்ஸ் மனேஜரை பிரதமர் பதவிக்கு போட்டியிடும்படி கோருகிறது அந்தக் காட்டூன்.

★ ★ ★

தமிழ் சமூகத் தலைவர்கள் (இவர்கள் யார் என்பது எனக்குத் தெரியாது. ஒன்றில் ஈழச் சங்கங்களில் இருப்பவர்களாக இருக்க வேண்டும்) லிபரல் கட்சியை நேரடியாக ஆதரிக்கிறார்கள் என்று ஸ்டாரில் வந்த கட்டுரை ஒன்றில் கிடந்தது. ஆனால் இந்த தேர்தலில் நம்மாளுங்களின் நிலைப்பாட்டில் எனக்கு மிகவும் பிடித்த ஒன்று.. ஒரு 'தகவல்' சஞ்சிகை கூறியிருந்தது.. அதன் ஆசிரியர் கருத்தில்.. நாம் கனடாவில் ஒரு கட்சியை மட்டும் ஆதரிக்கக் கூடாது. . எல்லாக் கட்சிகளையும் (கொஞ்சக் கொஞ்சப் பேர்) ஆதரிக்க வேண்டும் என்று.. என்ன செய்ய? அவரது அனுபவம் அப்படி அந்தந்த காலத்தில் ஆட்சியில் இருப்பவர்களை ஆதரித்த பழக்க தோசம்.

சரி என்று படுகிறவர்களை ஆதரிப்பதில் என்ன தப்பு? இதென்ன நம்ம நாடா? சிங்களக் கட்சிகளில் யார் தோற்றாலும் முதலில் அடிப்பது மலையகத் தமிழர்களுக்குத் தான். தாங்கள் தோற்றது இவர்களால் தான் என்று.

★ ★ ★

தமிழன் தமிழன் தான். ஊரில் ஐ.தே. கட்சியை ஆதரிப்பான். சுதந்திரக் கட்சியை ஆதரிக்க மாட்டான். காரணம் அதன் இடதுசார்ந்த தனம். கனடாவில் கன்சர்வேட்டிவ் கட்சியை ஆதரிக்க மாட்டான். லிபரல் கட்சியை ஆதரிப்பான். காரணம் லிபரல் கட்சி குடிவரவாளர்களுக்கு சார்பானதால்.. இங்கே லிபரல் கட்சியின் இடதுசார்ந்த தனம் மறந்து போய் விடும். ஆனாலும் கன்சர்வேட்டிவ் ஆட்சிக்காலத்தில் 'பந்தம்' பிடித்து 'மானியம்' பெறுவான்.

இதற்குள் தந்திரமாக எல்லாக் கட்சிகளையும் ஆதரிக்க வேண்டும் என்றால்... இது சந்தர்ப்பவாதம்.

★ ★ ★

இம்முறை ரொறன்ரோவின் பத்திரிகைகள் வரிந்து கட்டிக் கொண்டு ஒவ்வொருவரை ஆதரித்தன. குளோப் அண்ட் மெயில் கிம் காம்பெலை ஆதரித்தது. ஸ்டார் கிறெற்சியெனை ஆதரித்தது. சண் வரிந்து கட்டிக் கொண்டு சீர்திருத்தக் கட்சியை ஆதரித்தது. ஒன்ராறியோவில் சீர்திருத்தக் கட்சி ஏதோ வெட்டி வீழ்த்தப் போகிறது என்று சண் கனவு கண்டது. ஒரே ஒரு ஆசனம் மட்டுமே கிடைத்தது.

★ ★ ★

நம்ம நாட்டு தேர்தல் என்றால் அதன் சுவாரஸ்யமே தனி.. மேடை போட்டு கூட்டம்.. மாலைகள் தலையை நிறைக்கும். வழமையாக போடுகின்ற மாலையை தலைவர் கழற்றி வைக்க.. அது பின்புறமாக வந்து 'றிசைக்கிள்' செய்யப்படும். வரிசையாக வந்து இரத்த திலகம் இடுபவர்கள்.. இரத்தம் கொப்பளிக்கப் பேசுபவர்கள்.. தோரணம் கட்ட தென்னங்குருத்து.. வாழைகள்.. மேடைகள்.. ஊர்வலங்கள். . கோஷங்கள்.. போடு புள்ளடி வீட்டுக்கு நேரே.. தேர்தல் என்றால் ஒரே கோலாகலம்..

வீடு வீடாக வாக்கு வேட்டை.. தேர்தல் நாளில் சாராயப் போத்தல்கள். .. வாக்காள அன்பர்கள் குஷியில் வாக்குப் போடுவார்கள். கள்ள வோட்டுப் போட.. கைவிரல் மையை அழிக்கும் கூட்டம் ஒரு புறம்... அரசாங்கம் மறுபுறத்தில் ஆயுதமுனையில் குண்டர்களை வைத்து வாக்குப் பெட்டிகளை தனது வாக்குகளால் நிரப்பும்.

★ ★ ★

எனக்குத் தெரிந்த வாத்தியார் ஒருவர் ஒரு தேர்தலில் ஒரு வேட்பாளருக்கு வாக்குப் போட்ட ஒரு காரணம்.... அவர் வீட்டுக்கு வந்து வாக்குக் கேட்டது தான். கொள்கை என்பது பற்றி யோசிக்காமல் ஒரு வாத்தியாரே இந்த நிலைமையில் இருக்கிறார் என்றால் சாதாரண மக்கள் எப்படி வாக்களிப்பார்கள் என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

★ ★ ★

பாவம் குமார் பொன்னம்பலம்.. தேர்தல்

கேட்க வரும் போது எக்கச்சக்கமான பணத்துடன் யாழ்ப்பாணம் வருவார். வந்ததும் சிலரைக் கையில் வைத்துக் கொண்டு சேலைகள் வாங்கிக் கொடுத்தாராம். ஒரு முறை தேர்தலில் பத்தாயிரம் சேலைகள் வாங்கிக் கொடுத்து குருநகர்ப் பகுதியில் பைபிளின் மீது சத்தியம் வாங்கிக் கொண்டு (மதமாற்றம் செய்வோர் கவனிக்க) சேலை கொடுத்தாராம். சிலர் சேலை சரியில்லை என்று திருப்பியும் கொடுத்தனராம்.

பிரசார வேலையில் ஈடுபட்டவர்களுக்கு 77 இல் பதினைந்து ரூபாவும் 'மொக்கன்' கடையில் கொத்து ரொட்டியும் வழங்கப்பட்டது. போனவர்களும் பிரசார முடிவில் கூட்டணிக்கோ போடுங்கோ என்றதில் கடைசியில் குமார் தோல்வியுற்றது தான் மிச்சம்.

இதைப் போல மாட்டின் கூட்டணியை விட்டு விலகி தேர்தலில் நின்ற போது மாட்டினுக்கு சென். ஜேம்ஸ் நிலையத்தில் விழுந்த வாக்குகள் ஏழு. அதில் மாட்டினும் மனைவியும் அடக்கம். ஆனால் மாட்டின் வீட்டில் அன்று சாப்பிட்டவர்கள் தொகை ஐயாயிரம் என்று என் நண்பன் ஒருவன் பாடசாலை நாட்களில் தமாஷாகக் கூறினான்.

★ ★ ★

மாவட்டசபைத் தேர்தல் நடந்த போது தானே புலிகள் கந்தர்மடத்து வாக்குச் சாவடியில் இராணுவம் மீது தாக்குதல் நடத்த, அருகில் இருந்த ஓலைக் குடிசைகள் எரிக்கப்பட்டன. வாக்குச் சாவடிகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு.. ஆயுத முனையில் தேர்தல் நடத்துவதும் ஆயுத முனையில் குழப்புவதும் நம் நாட்டுப் பாரம்பரியங்கள். இந்த நாட்டில் இதெல்லாம் காணக்கிடைக்காது. தேர்தல் வாசடிகளில் பொலிஸ் கிடையாது. கியூ கிடையாது. போனமா? வாக்களித்தோமா? என்று வர வேண்டியதுதான்.

★ ★ ★

இந்திய நிலைமை இன்னும் மோசம்.. பம்பாயில் சென்ற தேர்தலில் ஒரு தொகுதியில் நூறுக்கு மேற்பட்டோர் தேர்தலில் போட்டியிட.. அந்த வாக்குச்சீட்டு பத்திரிகை சைஸில் இருந்ததாம். அத்தோடு கட் அவுட் போட்டு போத்தல் வீசா விட்டால் தேர்தல் முடியாது. தொண்டர்கள் கத்திக்குத்து.. கொலை, தீக்குளிப்பு.. இத்யாதி..

காத்தமுத்து என்பவருக்கு ஊரில் செல்வாக்கு இருந்தால் அவர் சண்டியனாக இருந்தால் என்ன, கொலைகாரனாக இருந்தால் என்ன எல்லாக் கட்சிகளும் அவருக்கு வலை வீசும்... அவருக்கு என்ன கொள்கை இருக்கிறது, கொள்கைப் பிடிப்பு இருக்கிறது என்பது பற்றி எல்லாம் கிடையாது. பழக்கடைப் பாண்டியன் என்ற பேட்டை ரவுடி கூட எம்.ஜி.ஆர் ஆட்சியில் மந்திரியானார்.

காத்தமுத்துவுக்கு செல்வாக்கு இருந்தால் உடனே மாற்றுக்கட்சிகள் காத்தமுத்து என்ற பேரில் உள்ளவர்களை பிடித்து தேர்தலில் சுயேச்சையாக நிறுத்தும். இதன் மூலம் வாக்காளர்களைக் குழப்பி வாக்குகளைப் பிரிப்பதே நோக்கம்.

★ ★ ★

இங்கு தேர்தலில் சில ஊழல்கள் நடந்தன. கட்சிகளுக்கு ஆசனம் கேட்டவர்கள் வேறு பகுதியில் இருந்தவர்களை எல்லாம் தங்கள் பகுதியில் வசிப்பதாக கூறி கூட்டி வந்து செல்வாக்கைக் காட்டினார்கள். லிபரல் கட்சியில் சிலரின் நடவடிக்கைகளுக்கு தமிழர்களும் உடந்தையாக இருந்ததாக கேள்வி. இதே போல லிபரல் கட்சியின் ஆசனத்துக்கு போட்டியிட்ட இரு சீக்கியர்களின் குழுக்களுக்கு இடையில் பெரும் யுத்தமே வரும் நிலை இருந்தது. தற்போது லிபரல் கட்சியில் ஒரு சீக்கியர் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். ஆனால் வழமையான சிங் என்ற பெயரைக் காணோம்.

லிபரல் கட்சியில் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் பொறுப்பு தலைவரிடமே முழுமையாக கையளிக்கப்பட்டது. முன்னாள் ரொறன்ரோ மேயர் ஆர்ட் எக்கிள்ரனை அவர் நியமித்த போது அந்தப் பகுதியைச் சேர்ந்த முன்னைய லிபரல் வேட்பாளர் கோபம் கொண்டு சுயேச்சையாகப் போட்டியிட்டு தோல்வியுற்றார்.

★ ★ ★

This newspaper is published by
Georgicka communications.
A member of
Ethnic Press Council Of Canada.

Editor: George R.Ckrhushchev

P.O.Box 1031, Station "F",
Toronto, Ont, M4Y 2T7.

Tel: (416) 920 9081
Fax: 963 5738
E mall:71650,3216 Compuserve

இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவனத்தினால் வெளியிடப்படுகிறது.
ஆசிரியர்:
ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்

உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறோம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள்.

ஆக்கங்களை மீளப் பெற விரும்புபவர்கள் சுயவிலாசமிட்ட முத்திரையிட்ட அஞ்சற்கூடு அனுப்பவும். படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

**தாயகம் சந்தா விபரம்**

கனடா ஆறுமாதம் $30
வெளிநாடுகள் ஆறு மாதம் US$60
வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)

ANTONY BROTHERS

516 3903

ஒரே இடத்தில் உங்கள் அனைத்து இலங்கை,
இந்திய, கனடிய உணவுப் பொருட்
தேவைகளுக்கும் நாட வேண்டிய இடம்

# அன்ரனி பிறதர்ஸ்

**1472 Queen St West**
**(Queen/Lansdowne),**
**Toronto, Ont. M6K 1M4**

வாரத்தில் ஏழு நாட்களும்
காலை 9 மணி முதல் இரவு 11 மணி வரை

✪ தமிழக, இலங்கை
வாரப்பத்திரிகைகள்,
சஞ்சிகைகள் உடனுக்குடன்

உடன் மீன், இறைச்சி,
பழவகைகள்
மலிவு விலையில்

✪ முத்திரை, சிகரெட், TTC Tickets,
Lottery Tickets


✪ போட்டோக்கொப்பி,
ஃபாக்ஸ் வசதிகள்

✪ லேசர் இசைத்தட்டுக்கள்
மலிவு விலையில்

தமிழ், ஹிந்தி, மலையாள
வீடியோக்கள் வாடகைக்குப்
பெறலாம்

# ANTONY BROTHERS

**TEL:(416) 588-0733**
**TEL/FAX:(416) 516 3903**




சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உடைகள்,
பரிசுப் பொருட்கள், அலங்காரப் பொருட்கள்
அனைத்தும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள

# ANTONY BROTHERS FASHION HOUSE

**1484 QUEEN ST WEST**

**588 0310**

**SIVA'S TRADING CO LTD**

**321-2739**

அனைத்து வகையான இலங்கை,
இந்திய உணவு வகைகள்,
பலசரக்கு வகைகளை மலிவு
விலையில் பெற்றுக் கொள்ள

# சிவாஸ் ரேடிங் கோ

## 3852 FINCH AVE EAST

**KENNEDY/FINCH**

இலங்கையிலிருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
உடன் இறால், நண்டு,
கணவாய், மீன் மற்றும்
கடலுணவு வகைகள்
மலிவு விலையில்

உலகெங்கும் செல்வதற்கான
விமானச்சீட்டுக்களை மலிவுவிலையில்
பெற தொடர்பு கொள்ளுங்கள்
சுந்தரலிங்கம் (சுந்தரி)

**தோசை, இடியப்பம், அப்பம்**
**சுடச்சுடக் கிடைக்கும்**

**இந்தியா ருடே, பேசும்படம்,**
**சினிமா எக்ஸ்பிரஸ், ராசி பலன்,**
**பொம்மை தவிர்ந்த**
**அனைத்து தமிழக சஞ்சிகைகளும்**
**89 சதங்கள் மட்டுமே**

# P.S.S.T

எக்கோ, தொம்சன் கசட்டுகள் 1.99
8 லேசர் இசைத்தட்டுக்கள் 29.99
வீடியோ பிரதி வாடகைக்கு 99 சதம்
**Video Transfer (Any system) 8.99**

$40 க்கு மேல்பொருட்கள் வாங்கினால்
இரண்டு வீடியோப் பிரதிகள்
வாடகைக்கு இலவசம்
$75 க்கு மேல் கொள்வனவு செய்தால்
ஒரு தமிழ்ப்படம் இலவசம்

வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள், இந்திய உணவு
வகைகளின் மொத்த விற்பனையாளர்

## Tel:609-0141

சகல தமிழ், இந்தி, மலையாளப்
படங்கள் வாடகைக்கு கிடைக்கும்

## 5210 Finch Ave East #23
## (Finch/Middlefield)